





# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:190 | 25-01-2026 | ஞாயிற்றுக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

25.01.2025 தை 11
ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் 6.35

திதி:
இன்று இரவு 9.19 வரை சப்தமி பின்பு அஷ்டமி.

நட்சத்திரம்:
இன்று பிற்பகல் 12.11 வரை ரேவதி பின்பு அசுவினி

யோகம் :
இன்று காலை 10.42 வரை சித்தம் பின்பு சாத்தியம்.

கரணம் :
இன்று காலை 10.30 வரை கரசை பின்பு இரவு 9.19 வரை வணிசை பின்பு பத்திரை

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.34 வரை யோகம் சரியில்லை பின்பு பிற்பகல் 12.11 வரை அமிர்த யோகம் பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று காலை 12.01 வரை பூரம் பின்பு உத்திரம்.

நல்ல நேரம்
காலை 7.30 – 8.30.
மாலை 3.30 –4.30.
இராகு காலம்
மாலை 4.30 – 6.00.
எமகண்டம்
பிற்பகல் 12.00 – 1.30.

குளிகை
பிற்பகல் 3.00 – 4.30.

இன்று ரதசப்தமி நாள்

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# “அரசின் வர்த்தக ஒப்பந்தங்கள் இளைஞர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்குகின்றன”: பிரதமர் மோடி





**புதுடெல்லி, ஜன.25:**

திறமையான இளைஞர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாய்ப்புகளை வழங்கும் வகையில் மத்திய அரசு, பல்வேறு நாடுகளுடன் வர்த்தகம் மற்றும் இடப்பெயர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருவதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

18வது வேலைவாய்ப்புத் திருவிழாவின் கீழ் மத்திய அரசின் பல்வேறு துறைகள் மற்றும் அமைப்புகளில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 61,000-க்கும் அதிகமான இளைஞர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கும் விழா இன்று நடைபெற்றது. இதில், காணொலிக்காட்சி மூலம் பங்கேற்று நியமனக் கடிதங்களை வழங்கிய பிரதமர் நரேந்திர மோடி, பின்னர் அவர்களுக்காக உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது: “உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இளைஞர்களுக்குப் புதிய வாய்ப்புகளை உருவாக்க அரசாங்கம் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. நாட்டின் திறமையான இளைஞர்களுக்கு வாய்ப்புகளை வழங்கும் வகையில், மத்திய அரசு பல்வேறு நாடுகளுடன் வர்த்தகம் மற்றும் இடப்பெயர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகிறது.

நாட்டின் பொருளாதாரம் தற்போது வலுவடைந்திருக்கிறது. பத்தாண்டுகளுக்குள் தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியை (ஜிடிபி) இரட்டிப்பாக்கிய உலகின் ஒரே பொருளாதாரம் இந்தியாதான். இன்று, 100-க்கும் மேற்பட்ட நாடுகள் அந்நிய நேரடி முதலீடு (FDI) மூலம் இந்தியாவில் முதலீடு செய்கின்றன. 2014-க்கு முந்தைய பத்தாண்டுகளுடன் ஒப்பிடும்போது அந்நிய நேரடி முதலீட்டு வரவு 2.5 மடங்குக்கு மேல் அதிகரித்துள்ளது. இந்த அந்நிய முதலீட்டின் வரவு, இளைஞர்களுக்கு எண்ணற்ற வேலைவாய்ப்புகளை உருவாக்கி வருகிறது.

> மத்திய அரசின் பல்வேறு துறைகள் மற்றும் அமைப்புகளில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 61,000–க்கும் அதிகமான இளைஞர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கும் விழா இன்று நடைபெற்றது. இதில், காணொலிக்காட்சி மூலம் பங்கேற்று நியமனக் கடிதங்களை வழங்கிய பிரதமர் நரேந்திர மோடி, ”

'ஜன கண மன' பாடலை தேசிய கீதமாகவும், 'வந்தே மாதரம்' பாடலை தேசியப் பாடலாகவும் அரசியல் சாசனம் அங்கீகரித்த நாள் ஜனவரி 24. வேலைவாய்ப்புத் திருவிழா (ரோஜ்கர் மேளா) ஒரு நிறுவனமாக மாறியுள்ளது. இதுவரை லட்சக்கணக்கான இளைஞர்கள் பல்வேறு அரசுத் துறைகளில் இருந்து பணி நியமனக் கடிதங்களைப் பெற்றுள்ளனர். இன்று விநியோகிக்கப்பட்ட பணி நியமனக் கடிதங்கள் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக உங்களுக்கு விடுக்கப்பட்டிருக்கும் அழைப்பு. வளர்ந்த இந்தியாவை நோக்கி இளைஞர்களை வழிநடத்துவதற்கான ஒரு சங்கல்ப பத்திரம்” இவ்வாறு பிரதமர் தெரிவித்தார்.

ரோஜ்கர் மேளா தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை நாடு முழுவதும் 11 லட்சத்துக்கும் அதிகமான வேலை நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. 18-வது வேலைவாய்ப்புத் திருவிழா நாடு முழுவதும் 45 இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாட்டின் பல பகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டு, புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இவர்கள், மத்திய உள்துறை, சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை, நிதிச் சேவைகள் துறை, உயர்கல்வித்துறை உள்ளிட்ட மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகளில் பணியில் சேர உள்ளனர்.

## திருப்பதியில் பக்தர்கள் 24 மணி நேரம் காத்திருந்து தரிசனம்



**திருப்பதி, ஜன.25:**

திருப்பதியில் தரிசனத்திற்கு வரும் பக்தர்களின் கூட்டம் நேற்று முதல் அதிகரித்து காணப்பட்டது. 3 நாட்கள் தொடர் விடுமுறை மற்றும் நாளை நடைபெறும் மினி பிரமோற்சவம் எனும் ரத சப்தமியில் தரிசனம் செய்ய லட்சக்கணக்கான பக்தர்கள் குவிந்தனர். இதனால் பக்தர்களை தங்க வைத்து தரிசனத்திற்கு அனுப்பப்படும் காத்திருப்பு அறைகள் முழுவதும் பக்தர்கள் கூட்டத்தால் நிரம்பியது. காத்திருப்பு அறைகளை தாண்டி பக்தர்கள் தரிசனத்திற்காக 3 கிலோ மீட்டர் தூரம் உள்ள ஷீலா தோரணம் வரை வரிசையில் காத்திருக்கின்றனர்.

திருப்பதியில் நேற்று 69,726 பேர் தரிசனம் செய்தனர். 27,832 பக்தர்கள் முடி காணிக்கை செலுத்தினர். ரூ.4.12 கோடி உண்டியல் காணிக்கை வசூலானது. நேரடி இலவச தரிசனத்தில் வந்த பக்தர்கள் 24 மணி நேரம் காத்திருந்து தரிசனம் செய்தனர்.

## ஓ.பன்னீர்செல்வத்துடன் அமைச்சர் சேகர்பாபு திடீர் சந்திப்பு


**சென்னை, ஜன.25:**

தமிழக சட்டசபை கூட்டத்தின் நிறைவு நாளான இன்று அ.தி.மு.க. உறுப்பினர்கள் யாரும் கலந்துகொள்ளாமல் புறக்கணித்தனர். அதே நேரத்தில், ஓ.பன்னீர்செல்வம், அவரது ஆதரவு எம்.எல்.ஏ. அய்யப்பன் ஆகியோர் அவைக்கு வந்திருந்தனர். சட்டசபை கூட்டம் நிறைவடைந்ததும் சபாநாயகர் அறைக்கு ஓ.பன்னீர்செல்வம் சென்ற நேரத்தில், அவரை அமைச்சர் பி.கே.சேகர்பாபு சந்தித்து பேசினார். ஓ.பன்னீர்செல்வம் - பி.கே.சேகர்பாபு இடையேயான சந்திப்பு சுமார் 15 நிமிடங்கள் நீடித்தது. இந்த சந்திப்பின்போது, தி.மு.க.வில் இணைய ஓ.பன்னீர்செல்வத்தைசேகர்பாபு வலியுறுத்தி பேசினார? என்பது குறித்து எந்த தகவலும் இல்லை. ஏற்கனவே, ஓ.பன்னீர்செல்வம் ஆதரவு எம்.எல்.ஏ.க்களாக செயல்பட்ட மனோஜ் பாண்டியன், வைத்திலிங்கம் ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தநிலையில் இன்று ஓ.பன்னீர்செல்வத்துடன் சேகர்பாபு சந்தித்து பேசிய சம்பவம் அரசியலில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக செயல்பட்ட ஓ.பன்னீர்செல்வம் மற்றும் டிடிவி தினகரன் ஆகியோர் பா.ஜ.க.வுடன் இணைந்து இருந்த நிலையில் அண்ணா தி.மு.க.வுடன் பா.ஜ.க. கூட்டணி வைத்ததும் டிடிவி தினகரன் மற்றும் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் பா.ஜ.க.வை விட்டு விலகி நின்றனர். தற்போது எந்த கூட்டணியிலும் இல்லாமல் ஓ.பன்னீர்செல்வம் தனித்து நிற்கிறார். இந்த நிலையில் ஓபன்னீர்செல்வத்தைதி.மு.க.வில் இணைக்கும் முயற்சியாக அமைச்சர் பி.கே. சேகர்பாபு சந்தித்து பேசியிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

# ‘மீண்டும் நாங்கள் தான் ஆட்சிக்கு வருவோம்’

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



**சென்னை, ஜன.25:**

சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஓய்வூதியம் உயர்த்தி வழங்கப்படும் என்று சட்டசபையில் முதலமைச்சர் ஸ்டாலின் அறிவித்தார்.

சட்டசபையில் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்திற்கு முதலமைச்சர் ஸ்டாலின் பதிலளித்தார்.

அப்போது அவர் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டார். அவர் பேசியதாவது:

‘கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தின்’ கீழ் ஏற்கெனவே 2 லட்சம் வீடுகள் உருவாகும் நிலையில் மேலும் புதிதாக, 3 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1 லட்சம் வீடுகள் கட்டப்படும்.

மேலும், புதிதாக, ஆயிரத்து 88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 2,200 கிலோ மீட்டர் கிராமப்புற சாலைகள் மேம்படுத்தப்படும்.

‘உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின்’ கீழ் அளித்த விண்ணப்பங்கள் உள்ளிட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் கூடுதலாக 1 லட்சத்து 80 ஆயிரம் நபர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்படும். இதற்கான விழா வரும் 4-.2-.2026 அன்று தமிழ்நாடு முழுவதும் நடைபெறும்.

### ஓய்வூதியம் உயர்வு

சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், கிராம ஊராட்சி செயலர்களுக்கான ஓய்வூதியம் இரண்டாயிரம் ரூபாயிலிருந்து 3 ஆயிரத்து 400 ரூபாயாகவும்; பணி நிறைவின்போது அவர்களுக்கு வழங்கப்படும் ஒட்டுமொத்தத் தொகை ஒரு லட்சம் ரூபாயிலிருந்து 2 லட்சம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும்.

குறு அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் வன களப்பணியாளர்களுக்கான சிறப்பு ஓய்வூதியம் இரண்டாயிரம் ரூபாயிலிருந்து 3 ஆயிரத்து 200 ரூபாயாகவும், பணி நிறைவின்போது அவர்களுக்கு வழங்கப்படும் ஒட்டுமொத்தத் தொகை ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும்.

அங்கன்வாடி உதவியாளர்கள், சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் மற்றும் தூய்மைப்பணியாளர்களுக்கான சிறப்பு ஓய்வூதியம் 2 ஆயிரம் ரூபாயிலிருந்து 3 ஆயிரம் ரூபாயாகவும்; பணி நிறைவின்போது அவர்களுக்கு வழங்கப்படும் ஒட்டுமொத்தத் தொகை 50 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு லட்சம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும்.

### சத்துணவு அமைப்பாளர்கள்

சிறப்பு ஓய்வூதியம் பெற்று வரும் சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், கிராம ஊராட்சி செயலர்கள் இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியமாக ஆயிரத்து 200 ரூபாயும், மேலும், சிறப்பு ஓய்வூதியம் பெற்று வரும் குறு அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் வன களப்பணியாளர்கள் உள்ளிட்ட இதர சிறப்பு காலமுறை ஊதியப் பணியாளர்கள் இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்பத்திற்கு, குடும்ப ஓய்வூதியமாக ஆயிரத்து 100 ரூபாயும் வழங்கப்படும்.

மேலும், சிறப்பு ஓய்வூதியம் பெற்று வரும் அங்கன்வாடி உதவியாளர்கள், சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட இதர சிறப்பு காலமுறை ஊதியப் பணியாளர்கள் இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியமாக ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

சிறப்பு ஓய்வூதியம் பெற்றுவரும் மேற்கூறிய பணியாளர்கள் உயிரிழக்க நேரிட்டால் இறந்த பணியாளர்களின் இறுதிச் சடங்குச் செலவினங்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

### பகுதி நேர ஆசிரியர்கள்

அரசுப் பள்ளிகளில் காலியாக இருக்கும் நிரந்தர ஆசிரியர் பணியிடங்களில் பகுதிநேர ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட ஏதுவாக, இதற்கான தேர்வுகளில் பகுதிநேர ஆசிரியர்களின் பணிக்காலத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு சிறப்பு மதிப்பெண் அளிக்கப்படும். இதற்கான ஆணைகள் விரைவில் வெளியிடப்படும்.

கடந்த தேர்தலின்போது யாரும் கொடுக்காத வாக்குறுதிகளை நாங்கள் கொடுத்தோம். முடிந்தளவுக்கு அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றியும் இருக்கின்றோம். "உங்களால் நிறைவேற்ற முடியாதென்று" சவால் விடப்பட்ட வாக்குறுதிகளையும் நாங்கள் நிறைவேற்றிக்காட்டியிருக்கின்றோம். "இவர்கள் செய்யவேமாட்டார்கள்" என்று சொல்லப்பட்ட வாக்குறுதிகளையெல்லாம் செய்து கொண்டிருக்கிறோம்.

### மீண்டும் வருவோம்

இந்தப் பேரவைக்கும், நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் நான் சொல்வது ஒன்றுதான். நான் இந்த ஐந்தாண்டு காலத்தில் எனக்கும், என் மனச்சாட்சிக்கும் கட்டுப்பட்டு தினந்தோறும் திட்டங்களைத் தீட்டி உழைத்திருக்கின்றேன். இன்னும் உழைக்கக் காத்திருக்கின்றேன். இந்த 5 ஆண்டுகால உழைப்பையும் வளர்ச்சியையும் பார்த்து, அடுத்த 5 ஆண்டுகளுக்கும் திராவிட மாடல் ஆட்சிதான் தொடர வேண்டுமென்று தமிழ்நாட்டு மக்கள் முடிவு செய்துவிட்டார்கள்.

எனக்கு, என்னைவிட தமிழ்நாட்டு மக்கள் மேல் கூடுதலான நம்பிக்கை இருக்கிறது. உறுதியாகச் சொல்கிறேன். நாங்கள்தான் மீண்டும் வருவோம்! நாங்கள்தான் மீண்டும் வருவோம்! மீண்டும் மீண்டும் வருவோம்! மீண்டும் வெல்வோம்! மீண்டும் மீண்டும் வெல்வோம்! இவ்வாறு மு.க.ஸ்டாலின் பேசினார்.

## 2026ம் ஆண்டிற்கான பத்ம விருதுகள் நாளை அறிவிப்பு

**புதுடில்லி, ஜன.25:**

பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கியவர்களை கவுரவிக்கும் வகையில் இந்திய அரசின் சார்பில் பத்ம விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருதுகள் பத்ம விபூஷன், பத்ம பூஷன் மற்றும் பத்ம ஸ்ரீ ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் வழங்கப்படுகின்றன. கலை, இலக்கியம், அறிவியல், மருத்துவம், விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சாதனை புரிவோருக்கு ஆண்டு தோறும் இந்த விருதுகள் வழங்கப்படுகிறது.

பத்ம விருதுகள் ஆண்டுதோறும் குடியரசு தினத்தை முன்னிட்டு அறிவிக்கப்படுவது வழக்கம். அந்த வகையில், 2026ம் ஆண்டிற்கான பத்ம விருதுகள் நாளை (ஜன.24) அறிவிக்கப்பட உள்ளது.








## திருக்குறள் குறள்-510

**தேரான் தெளிவுந் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்**



ஒருவனை ஆராயாமல் தெளிவடைதலும், ஆராய்ந்து தெளிவடைந்த ஒருவனிடம் ஐயப்படுதலும் ஆகிய இவை நீங்காதத் துன்பத்தைக் கொடுக்கும்.

## சிந்திக்க ஒரு நொடி



கொக்கு போல்
எதற்காகவும்
காத்திருக்காமல்..
சில இடங்களில்
மக்கு போல்
கடந்து செல்வது
புத்திசாலித்தனம்

**உஷா முத்துராமன்**

## "நேதாஜி பிறந்த நாள் விழா"



ராகவி சினி ஆர்ட்ஸ் சார்பிலும், நீலாவதி டிரஸ்ட் சார்பிலும் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பிறந்த தினத்தை முன்னிட்டு திரைப்பட இயக்குனரும், நடிகரும், தென்னிந்திய நடிகர் சங்க உறுப்பினரும், சமூக சேவகருமான சேவா ரத்னா டாக்டர் ஜெ.விக்டர் அவரது உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் சுவாமி நாதன், எழுத்தாளர் விவேக் ராஜ், மேக்கப் ஆர்ட்டிஸ்டும், நடிகையுமான அங்கிதா, மனித உரிமை காங்கிரஸ் துணைத் தலைவர் அஷ்டலட்சுமி உள்ளனர். அனைவருக்கும் இனிப்புகள், உணவு வழங்கப்பட்டது.

## தவெகவிற்கு விசில் சின்னம் விஜய்க்கு முதல் வெற்றி பெண்ணாடத்தில் கட்சி நிர்வாகிகள் வெடி வேடித்துஉச்சாக கொண்டாட்டம்



2026 சட்டமன்ற தேர்தலில், விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகத்திற்கு தேர்தல் ஆணையம் விசில் சின்னத்தை ஒதுக்கியுள்ளது. இது விஜயின் தவெகவின் முதல் வெற்றியாக கருதப்படுகிறது. விசில் சின்னம் வழங்கப்பட்டதற்கு தொண்டர்களுக்கு இனிப்பு வழங்கி உச்சமாக கொண்டாடி வருகின்றனர். இந்நிகழ்ச்சியில் கடலூர் மாவட்டம் பெண்ணாடம் பேருந்து நிலையத்தில் தவெக கட்சி நிர்வாகி பத்மாவதி தலைமையில் வெடி வெடித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். இதில் தவெக நகர, ஒன்றிய, மாவட்ட, மாநில உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## வருகிற 28ம் தேதி நடத்தப்படும் மாபெரும் வடமஞ்சுவிரட்டு விழா



வருகிற 28ம் தேதி நடத்தப்படும் மாபெரும் வடமஞ்சுவிரட்டு விழாவிற்கான அழைப்பிதழை பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரனிடம் மேலூர் தொகுதி முத்தரையர் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் சுந்தரபாண்டியன் மற்றும் நிர்வாகிகள் வழங்கினர்.

## 29 -ஆம் ஆண்டு கூட்டு வழிபாடு கோத்திர பூஜை

**திண்டுக்கல், ஜன.25:**


திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டம் ஆயக்குடி ஊராட்சியில் அமைந்திருக்கும் ஸ்ரீ கன்யகா பரமேஸ்வரி அம்மன் மடத்தில் உள்ள ஸ்ரீ கொண்டம்மாள், ஸ்ரீ குப்பம்மாள், ஸ்ரீ சுப்பம்மாள், ஸ்ரீகஸம்மாள், ஸ்ரீ நாகம்மாள் ஆகிய பேரன்டாலு தெய்வங்களின் நமது பிரம்ம குல கோத்திர குடும்ப தெய்வங்களுக்கு பேரண்டலு பூஜையும், நாக பூஜையும், கன்னி பூஜையும், வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீ நாகம்மாள் தெய்வத்திற்கு கலசங்கள் வைத்து பூஜை செய்து அபிஷேகம், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து அலங்காரங்கள் செய்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, மங்கள வாத்தியங்கள் இசைக்க, பம்பை, உடுக்கையுடன், மேளதாளத்துடன், பிரசாதம் நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.

வருடத்திற்கு ஒரு முறை பேரன்டாலு பூஜை நடைபெறும். இந்த பூஜையில் புதியதாக புடவை வைத்து வழிபடுவது வழக்கம் புதிய புடவையை தண்ணீரில் நினைத்து காய வைத்து மடுகாக வைத்து எடுத்துச் சென்று சாமியிடம் வைத்து பூஜை செய்வது வழக்கம்.

வெகு சிறப்பாக பூஜைகளும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் மூன்று வேலையும் உணவு வழங்கப்பட்டது. கூட்டு வழிபாடை ஏற்பாடு செய்தவர்கள்: பிரம்ம குல கோத்திரக்காரர்கள் அனைவரும் சேர்ந்து வெகு சிறப்பாக பூஜைகளை செய்திருந்தார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**







## தை மாதம் 2-வது வெள்ளிக்கிழமை சிறப்பு வழிபாடு





**சென்னை ஜனவரி -25:**

திருவள்ளூர் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் தை மாதம் 2 -ஆம் வெள்ளிக் கிழமையை முன்னிட்டு மூலவர்க்கும், உச்சவருக்கும் சிறப்பு அபிஷேகங்கள், அலங்காரங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்காரத்துடன், வேத மந்திரங்கள் ஒலிக்க,பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. உற்சவர் வெள்ளிக் கவசத்துடன் அலங்காரத்தில் ஊஞ்சல் சேவையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் தை வெள்ளிக்கிழமை பூஜையில் கலந்து கொண்டு வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## கல்வி விழிப்புணர்வு நிகழ்ச்சி



கோவையில் இஸ்கான் அமைப்பு சார்பில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு கீதா தான் 2026 கல்வி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

## தர்ஷினி கலைக்கூடத்தில் பயின்று பென்சில் ஷேடிங்கில் தேர்வான ஷ்யாம் சுந்தருக்கு நிறுவனர் தர்மலிங்கம் சான்றிதழ் வழங்கினார்



தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மியூசிக் அன்ட் பைன் ஆர்ட் யூனிவர்சிட்டி தேர்வில், ஆறு மாதம் சர்டிபிகேன் கோர்ஸில் தேர்வானவர்களுக்கு 2023-24 பிரிவினருக்கு சமீபத்தில் தேர்வுக்கான சான்றிதழ் வழங்கப்பட்டது. சென்னை கோடம்பாக்கம் ஸ்ரீதர்சினி கலைக்கூடத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கு, கலைக்கூடத்தின் நிறுவனர் தர்மலிங்கம் சான்றிதழ் வழங்கி கௌரவித்தார், தர்ஷினி கலைக்கூடத்தில் பயின்று பென்சில் ஷேடிங்கில் தேர்வான ஷ்யாம் சுந்தர் சான்றிதழ் பெற்றுக்கொண்டார்.

## செய்யாறில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் 16 வது வார திருக்குறள் பயிற்சி வகுப்பு

**செய்யாறு ஜன. 25:**



செய்யாறு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மையத்தில் 16 வது வார திருக்குறள் பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் செய்யாறு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி கூட்ட அரங்கில் 16 வது வார திருக்குறள் பயிற்சி வகுப்பு நேற்று காலை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் ஜி ஜெயகாந்தன் தலைமை தாங்கி நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். திருக்குறள் பயிற்சியாளர் கவிஞர் எறும்பூர் கை. செல்வகுமார் முன்னிலை வகித்து வரவேற்றுப் பேசினார்.

பயிற்சியில் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த 23 மாணவ, மாணவியர், இரண்டு பயிற்சியாளர்கள், தலைமை ஆசிரியர் ஒருவர் என 26 பேர் நேற்றைய பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டனர். முடிவில் பயிற்சியாளர் புலவர் ந.கனகசபை நன்றி கூறினார்.

## சர்வதேச FIDE மதிப்பீடு பெற்ற சதுரங்க போட்டியில், சிறப்பாக விளையாடி 4-வது இடம் பிடித்த மாணவிகளுக்கு பாராட்டு



கோவை மாநகராட்சியின் சார்பில் வழங்கப்பட்ட சதுரங்க போட்டிக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்பில் பங்கேற்று, பயிற்சி பெற்று திருச்சியில் நடந்த 3-வது சர்வதேச FIDE மதிப்பீடு பெற்ற சதுரங்க போட்டியில், சிறப்பாக விளையாடி 4-வது இடம் பிடித்த மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி மாணவி ஜெஸ்ஸி மற்றும் சர்வதேச தரவரிசை பட்டியலில் புள்ளிகள் பெற்ற மாநகராட்சி பள்ளி மாணவிகள் ஹீனாமோல், ஜெஸ்ஸி ஆகியோர் ஆணையர் சிவகுருபிரபாகரனை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

## விழுப்புரம் மாவட்டம் அதிமுக தலைமை கழகத்தில் நேர்காணல்

**சென்னை, ஜன.25:**

தமிழக சட்டப்பேரவை பொதுத் தேர்தல் ஏப்பரல் அல்லது மே மாததத்தில் வரவுள்ள நிலையில் அதிமுக தலைமை கழகம் ராயப்பேட்டை எம்ஜிஆர் மாளிகையில் பத்தாயிரத்திற்கும் மேற்ப்பட்டோர் தேர்தலில் வேட்பாளராக போட்டியிட விருப்பமனு அளித்து உள்ளனர்.


அதனைத் தொடர்ந்து விழுப்புரம் மாவட்டம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு சனிக்கிழமை முதல் நேர்காணல் தொடங்கி நடைபெற்று வருகிறது.

மேலும் முன்னாள் அமைச்சர் சிவி. சண்முகம் எம்பி மயிலம் தொகுதி ஒதுக்கப்படலாம் என்பதால் கழகத் தொண்டர்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பார்ப்பை மாவட்டம் முழுவதும் உருவாக்கி உள்ளது .

**அகரம் ராமதாஸ் செய்தியாளர்**



## நாகராஜா கோவில் தைப் பெருந்திருவிழா கொடியேற்றம்



நாகர்கோவில் நாகராஜா கோவில் தைப் பெருந்திருவிழா கொடியேற்றம் நேற்று நடந்தது.

## அதிமுகவினர் தேர்தல் பிரசாரம் துவக்கினர்



புவனகிரி தொகுதியில் அதிமுகவினர் தேர்தல் பிரசாரம் துவக்கினர்.

## கல்லூரி பட்டமளிப்பு விழா



மதுரை வலையன்குளம் நாகரத்தினம் அங்காளம்மன் கலை, அறிவியல் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் ஐகோர்ட் ஓய்வு நீதிபதி ராஜேஸ்வரன் பட்டங்களை வழங்கினார்.

## பள்ளி 23 வது ஆண்டு விழா




திருவொற்றியூர் சங்கர வித்ய கேந்திர மேல்நிலைப் பள்ளி 23 வது ஆண்டு விழா நடந்தது.

# சாத்தூர் அருகே லாரி மீது பேருந்து மோதியதில் சிறைக் காவலர் பலி

**சாத்தூர், ஜன.25:**

சாத்தூர் அருகே லாரி மீது ஆம்னிப் பேருந்து மோதி விபத்துக்குள்ளானதில் புழல் சிறைக் காவலர் உயிரிழந்தார். சென்னையில் இருந்து களியக்காவிளை நோக்கி தனியார் ஆம்னி பேருந்து புறப்பட்டது. இதில் 48 பேர் பயணம் செய்தனர். பேருந்தை சென்னையைச் சேர்ந்த அபிராம் பாரத் (27) என்பவர் ஓட்டினார். சாத்தூர் சுங்கச் சாவடி அருகேயுள்ள எட்டூர்வட்டம் பகுதியில் வந்த போது, ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து பேருந்து, எதிர்பாராத விதமாக முன்னால் சென்ற லாரி மீது மோதியது. இந்த விபத்தில் திருநெல்வேலியை சேர்ந்த கிருஷ்ணவேணி (57),சந்தோஷ் செல்வநாயகி (32),மோகனரங்கா (35), ஆவடிச்செல்வி, பாலசுப்பிரமணியன் (76), மகாலிங்கம் ஆகிய 6 பயணிகள் காயமடைந்தனர். மேலும், கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு பகுதியைச் சேர்ந்த லெனின்(43) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இவர், புழல் சிறையில் காவலராக பணியாற்றி வந்தது குறிப்பிடத்தக்கது. தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த காவல்துறையினர் மற்றும் தீயணைப்புதுறையினர் காயம் அடைந்தவர்களை மீட்டு சாத்தூர் அரசு மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். இந்த விபத்து குறித்து வச்சகாரப்பட்டி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஜன.27 இராமநாதபுரத்தில் எரிவாயு நுகர்வோர் குறைதீர் கூட்டம்

**இராமநாதபுரம், ஜன.25:**

இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரம், இராமேஸ்வரம், கீழக்கரை, இராஜசிங்கமங்கலம், திருவாடானை, பரமக்குடி, கமுதி, கடலாடி மற்றும் முதுகுளத்தூர் ஆகிய வட்டத்துக்கு உட்பட்ட பகுதிகளில் சமையல் எரிவாயு விநியோகம் தொடர்பாக பொதுமக்கள் தங்களின் குறைகள் மற்றும் கோரிக்கைகளை நேரில் தெரிவிக்க குறைதீர் முகாம் ஜனவரி 27 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறுகிறது. எண்ணெய் நிறுவனம் மற்றும் எரிவாயு முகவர்களுடன் ஜனவரி மாதத்திற்கான குறை தீர்க்கும் கூட்டம் இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது. மேற்கண்ட கூட்டத்தில் எரிவாயு உபயோகிப்பவர்கள், தன்னார்வ நுகர்வோர் அமைப்பினர் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு தங்களது குறைகளை தெரி விக்கலாம்.

# கிராம நிர்வாக அலுவலருக்கு கொலை மிரட்டல் விடுத்தவர் மீது வழக்கு

**திருவில்லிபுத்தூர்,ஜன.25:**

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டம் அயன் நாச்சியார்கோவில் பகுதியில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருபவர் மனோஜ் குமார். இவரிடம் கடந்த ஒரு வருடமாக நாச்சியார்பட்டி கிரா மத்தைச் சேர்ந்த பாபு ராம் என்பவர் சட்ட விதிப்படி இல்லாமல் பட்டா மற்றும் அடங்கல் வழங்குமாறு தொடர்ந்து கேட்டு வந்தார். கிராம நிர்வாக அலுவலர் உரிய ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்கள் இருந்தால் வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லியும் கேட்காமல் , வழங்குமாறு அவர் மிரட்டியுள்ளார். இந்நிலையில் ஜனவரி 22 அன்று கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திற்கு இருசக்கர வாகனத்தில் வந்தபோது, அவரை வழிமறித்து அலுவலகத்திற்குள் செல்ல விடாமல் ஆபாசமாக பேசி கொலை மிரட்டல் விடுத்துள்ளார் . இது குறித்து கிராம நிர்வாக அலுவலர் மனோஜ் குமார் பாபு ராம் மீது காவல்துறையிடம் புகார் கொடுத்துள்ளார். தாலுகா காவல் நிலையத்தினர்.

# புதுமாப்பிள்ளை சாலை விபத்தில் பலி

**மதுரை,ஜன.25:**

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி திருவள்ளுவர் நகரைச் சேர்ந்தவர் பிரசன்ன வெங்கடேஷ். பட்டதாரி இளைஞரான இவர் பெங்களூருவில் தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வந்தார். தான் காதலித்த பெண்ணுடன் பிரசன்ன வெங்கடேஷ்க்கு ஜனவரி 28 ஆம் தேதி திருமணம் செய்ய முடிவானது. உறவினர்களுக்கு அழைப்பிதழ் வைத்துவிட்டு வியாழனன்று இரவு இருசக்கர வாகனத்தில் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தார். டிஇஎல்சி பள்ளி அருகில் எதிரே வந்த வேன் நேருக்கு நேராக பைக் மீது மோதி விபத்துக்குள்ளானது. இதில் பிரசன்ன வெங்கடேஷ் படுகாயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இச்சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மாமல்லபுரத்தில் 'ரோப்கார்' சேவை: மெட்ரோ ரயில் நிறுவனம் ஆலோசனை

**சென்னை, ஜன.25:**



தமிழகத்தில் முக்கிய சுற்றுலாத் தலங்களான மாமல்லபுரம், கொடைக்கானலில் ரோப் கார் சேவையைத் தொடங்குவதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்ய தனியார் நிறுவனத்துடன் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் விரைவில் ஒப்பந்தம் செய்யவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மதுரை, கோவையில் மெட்ரோ ரயில் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் செயல்படுத்த முடியாத தமிழகத்தின் முக்கிய சுற்றுலா தலங்களான உதகை, கொடைக்கானல், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் ரோப் கார் சேவையைத் தொடங்க சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இதன் தொடக்கமாக நீலகிரி மாவட்டம், உதகையில் ரோப் கார் சேவையை செயல்படுத்துவதற்கான ஆலோசனைகளை பெறுவதற்கு தனியார் நிறுவனத்துடன் மெட்ரோ ரயில் நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளது. அந்த நிறுவனத்தின் அறிக்கை 3 மாதங்களில் கிடைக்கும். அதன்பிறகு ரோப் கார் திட்டத்துக்கான, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

இதேபோல, கொடைக்கானல், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் ரோப் கார் சேவையைக் கொண்டுவர மெட்ரோ ரயில் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்ய தனியார் நிறுவனத்துடன் விரைவில் ஒப்பந்தம் செய்யப்படவுள்ளதாக திட்ட அதிகாரி அர்ச்சுனன் தெரிவித்தார்.

# சமூக ஊடக விழிப்புணர்வு போட்டிகளில் வென்ற 40 பேருக்கு பரிசு : அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்

**சென்னை, ஜன.25:**

சமூக ஊடகங்களில் பரப்பப்படும் வெறுப்பு பிரசாரங்கள், தவறான செய்திகளுக்கு இரையாகாமல் பொதுமக்கள் விழிப்புணர்வு பெறுவது குறித்து நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற 40 இளைஞர்களுக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சான்றிதழ்கள், பதக்கங்களை வழங்கினார்.

இன்றைய சூழலில் சமூக ஊடகங்களில் பரப்பப்படும் போலிச் செய்திகள், வெறுப்புப் பேச்சுகளுக்கு இரையாகாமல், பொதுமக்கள் பாதுகாக்கப்பட, சிந்தனை, செயலளவிலும் பகுத்தறிவு, அறிவியல் மனப்பான்மை, சமத்துவம், சமூக நீதி போன்றவை அடித்தளங்களாய் அமைய வேண்டும்.

மேற்கண்ட உயர் பண்புகளை மாணவர்களும், பொதுமக்களும் வளர்த்துக்கொள்ள அவசியமாய் தேவைப்படுவது, கேள்வி கேட்கும் மனப்பாங்கும், அறிவியல் ஆதாரங்களின் அடிப்படையில் சிந்திக்கும் திறனும்தான்.

இதற்கான விதைகளை அவர்களின் தனித்திறமைகளின் வழி விதைக்க ஏதுவாக, செய்தி- மக்கள் தொடர்புத் துறையின் ஊடக மையம் மற்றும் தமிழ்நாடு தகவல் சரிபார்ப்பகம் இணைந்து 'ஏன்? எதற்கு? எப்படி?' என்ற தலைப்பில் 8 பிரிவுகளின் கீழ், விழிப்புணர்வுப் போட்டிகளை நடத்தியது.

இந்தப் போட்டிகளில் சுமார் 1,912 பேர் கலந்து கொண்டனர். இவர்களில் தேர்வு செய்யப்பட்ட 40 இளைஞர்களுக்கு சென்னை கலைவாணர் அரங்கில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் மு.பெ. சாமிநாதன் பங்கேற்று சான்றிதழ்கள், பதக்கங்களை வழங்கினார்.

மேலும் 'உங்க கனவ சொல்லுங்க' என்ற தலைப்பில் செய்தி- மக்கள் தொடர்புத் துறையின் ஊடக மையம் சமூக ஊடக விழிப்புணர்வுப் போட்டிகளை நடத்தவுள்ளது. இந்தப் போட்டிகளையும் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வெள்ளிக்கிழமை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் துறைச் செயலர் வே.ராஜராம், கூடுதல் இயக்குநர்கள் எஸ்.செல்வராஜ் (செய்தி), இரா.பாஸ்கரன் (மக்கள் தொடர்பு) உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ் வழியில் படித்தவர்களுக்கு அரசுப் பணியில் முன்னுரிமை: திருத்தச் சட்ட முன்வடிவு பேரவையில் தாக்கல்

**சென்னை,ஜன.25:**



தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களுக்கு அரசுப் பணிகளில் 20 சதவீத முன்னுரிமை வழங்கும் சட்டத்தில் திருத்தம் செய்யும் சட்டமுன்வடிவை, சட்டப்பேரவையில் தமிழக அரசு வெள்ளிக்கிழமை தாக்கல் செய்தது.

மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் இந்த சட்ட முன்வடிவைதாக்கல்செய்தார்.

அதில், 'அரசுப் பணிகளில் நேரடி பணி நியமனம் மூலம் நிரப்பப்படவேண்டிய அனைத்து காலிப்பணியிடங்களிலும் 20 சதவீதம் தமிழ் வழியில் படித்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் சட்டம் கடந்த 2010-ஆம் ஆண்டு அமல்படுத்தப்பட்டது.

அதன்படி, தமிழ் வழியில் படித்து அரசுப் பணியில் இருப்பவர்களுக்கும் முன்னுரிமையை அரசு வழங்கி வருகிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தொடுக்கப்பட்ட வழக்கில், ஏற்கெனவே அரசுப் பணியில் இருப்பவர்கள் முன்னுரிமை நியமனத்துக்கு தகுதியற்றவர்கள் என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது.

இந்தத் தீர்ப்புக்கு ஏற்ப, கடந்த 2010, செப்.7-ஆம் தேதி இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த தேதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள் செல்லுபடியாகும் என்றும் முன்னுரிமை அடிப்படையில் இனி காலிப் பணியிடங்களுக்கு மட்டும் நியமனங்கள் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீடுதோறும்கொசுஉற்பத்தியை கண்காணிப்பதற்கான பணியில் போதிய நபர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# காலி மதுபாட்டில்களை திரும்பப் பெறும் திட்டம் விரைவில் முழுமையாக அமல்: தமிழக அரசு உறுதி

**சென்னை, ஜன.25:**



தமிழகத்ததில் சுற்றுலா மலைப்பகுதிகளில் மதுபான பாட்டில்கள் வீசப்படுவதைத் தடுக்க ஒவ்வொரு பாட்டிலுக்கும் 10 ரூபாய் கூடுதலாக விலை வைத்து விற்பனை செய்து, பின்னர் காலி பாட்டில்களை திரும்ப ஒப்படைக்கும்போது 10 ரூபாயை திருப்பி அளிக்கும் திட்டத்தை அமல்படுத்த தமிழக அரசுக்கு, சுற்றுச்சூழல் மற்றும் வனப்பாதுகாப்பு தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு அமர்வு உத்தரவிட்டிருந்தது. இத்திட்டம் மாநிலம் முழுவதும் அமல்படுத்தப்பட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டிருந்தது.

இந்த வழக்குகள் நீதிபதிகள் என்.சதீஷ்குமார், டி.பரதசக்ரவர்த்தி அடங்கிய சிறப்பு அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தன. அப்போது, தமிழகம் முழுவதும் உள்ள 28 மாவட்டங்களில் மதுபான பாட்டில்கள் திரும்பப் பெறும் திட்டம் முழுமையாக அமல்படுத்தப்பட்டுள்ளதாகவும், மூன்று மாவட்டங்களில் பாதி அளவு அமல்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன் தெரிவித்தார்.

மேலும், ஏழு மாவட்டங்களில் இத்திட்டத்தை எதிர்த்து டாஸ்மாக் ஊழியர்கள் போராட்டம் நடத்துவதால் அவர்களிடம் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும் விரைவில் அனைத்து மாவட்டங்களிலும் நீதிமன்றம் உத்தரவிட்டபடி முழுமையாக இந்த திட்டம் அமல்படுத்தப்படும் என்றும் அவர் உறுதியளித்தார். இதேபோல் கியூ ஆர் கோடு முறையை அமல்படுத்த மீண்டும் டெண்டர் கோரப்பட்டுள்ளதாகவும் ஜெ. ரவீந்திரன் குறிப்பிட்டார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், பண்டிகை காலங்களில் டாஸ்மாக் விற்பனை ஆயிரம் கோடி என சாதனை படைப்பதாகவும் ஆனால் அமல்படுத்துவதில் என்ன பிரச்சனை? இனிமேல் கால அவகாசம் வழங்க முடியாது என்று திட்டவட்டமாக தெரிவித்தனர்.

இதையடுத்து வழக்கு விசாரணையை பிப்ரவரி மாதத்துக்கு ஒத்தி வைத்தனர்.

உறுதியான, விரை வான அல்லது மிக அதிக லாபம் வழங்கப்படும் என்ற வாக்குறுதிகளை நம்ப வேண்டாம். இவை மோசடியின் முக்கிய அறிகுறிகளாகும். செபி (SEBI) அங்கீகாரம் பெற்ற இணையதளங்கள் மற்றும் அதிகாரப்பூர்வமாக அனுமதிக்கப்பட்ட செயலிகள் மூலம் மட்டுமே முதலீடு செய்ய அறிவுறுத்தப்படுகிறது. புகார் அளித்திடுக மேலும் சந்தேகத்திற்கிடமான முதலீட்டு சலுகைகள் கிடைத்தாலோ அல்லது இதுபோன்று ஏமாற்றப்பட்டாலோ உடனடியாக சைபர் குற்ற உதவி எண் 1930 அல்லது www.cybercrime.gov.in இணையதளத்தில் புகார் பதிவு செய்ய வேண்டும் என பொது மக்கள் நலன் கருதி தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நை.சிலம்பரசன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

## நலம் தரும் மருத்துவம்

# ஒரே வாரத்தில் உடலில் மாற்றம்!

## கெட்ட கொழுப்பை கரைக்க எளிய வழிகள்!



நாம் எல்லோரும் வெந்தயத்தின் பயன்பாடு என்ன என்பதை அறிவோம். இட்லி மாவு, தோசை மாவு அரைக்கும்போது அரிசியுடன் வெந்தயம், உளுந்து இரண்டையும் கலந்து அரைப்போம். அப்போதுதான் மாவு சா ஃப்ட் ஆக இருக்கும். இட்லி புசு புசு என குஷ்பூ இட்லி போல பொங்கி வரும். ஆனால், பலருமறியாத முக்கியமான மருத்துவ உண்மையை இப்போது காண்போம்.

சமீபத்தில் அமெரிக்க ஆய்வு ஒன்று வெந்தயம் (FENUGREEK) சர்க்கரை நோயை கட்டுப்படுத்தும் திறன் கொண்டது என அறிவித்திருக்கிறது. தினமும் காலை, மதியம், இரவு ஆகிய மூன்று வேளைகளும் உணவு உண்பதற்கு 10 நிமிடங்கள் முன்பாக ஒரு ஸ்பூன் வெந்தயம் தண்ணீரில் ஊற வைத்து மென்று சாப்பிட்டு வந்தால் சர்க்கரை அளவு குறையும்.

வெந்தயம் துவர்ப்பு மற்றும் கசப்புத்தன்மை கொண்டது. இதில் உள்ள கரையும் நார்ச்சத்தும் நம் ரத்தத்தில் கலந்து பல நன்மைகளை விளைவிக்கிறது. வெந்தயத்தை கடித்து விழுங்க சிலருக்கு சிரமமாக இருக்கும். ஏன் எனில், அதன் சுவை துவர்ப்புடன் கூடிய கசப்புத்தன்மை. பழகி விட்டால் சரி ஆகி விடும். அதுவரை சாப்பிட முடியாதவர்கள் மாத்திரை போல விழுங்கினாலும் பரவாயில்லை.

சுகர் டெஸ்ட் எடுக்கும்போது காலையில் வெறும் வயிற்றில் ஃபாஸ்ட்டிங் சுகர் டெஸ்ட் எடுப்பவர்கள், இந்த வெந்தய ஃபார்முலா படி, முந்தின நாள் இரவு உணவுக்கு முன் வெந்தயம் ஒரு ஸ்பூன் எடுத்துக் கொண்டால், அடுத்த நாள் சர்க்கரை அளவு குறைவாகக் காட்டும்.

தொடர்ந்து வெந்தயம் உணவில் எடுத்து வந்தால், மூன்று மாத சர்க்கரை சராசரி அளவும் குறையும். இதை சோதனை செய்ய உங்கள் சர்க்கரை அளவைக் குறித்துக் கொண்டு வெந்தயம் ஒரு மாதம் எடுத்துக் கொண்டு வந்து பின் ஹெச்பி ஏ ஒன் டெஸ்ட் எடுத்தால் அந்த அளவு குறைந்து வருவதை உணரலாம்.

உடல் எடையைக் குறைக்க நினைப்பவர்களுக்கு...

காலை உணவாக வெறும் வயிற்றில் ஒரு முழு பப்பாளிப்பழம் சாப்பிடுவது மிகவும் நல்லது. சிலர் பப்பாளிப்பழம் சூடு என பயப்படுவார்கள். பழக்கம் இல்லாதவர்கள் ஆரம்பத்தில் ஓர் துண்டு பிறகு 2 என படிப்படியாகக் கூட்டிக்கொண்டே வரலாம்.

கண்களுக்கு மிகவும் நல்லது. நோய் எதிர்ப்பு சக்தியைக் கொடுக்கும்.

பப்பாளிப்பழம் மார்க்கெட்டில் வாங்கும் போது விதைகள் உள்ள நாட்டுப்பழமா? என்பதை செக் செய்து வாங்கவும். விதைகள் இல்லாத ஹைப்ரிட் பழம் ருசியாக இருக்கும்.

ஆனால், நாட்டுப்பழம் தரும் பயன்களைத் தராது. நீள் வட்டமாக இருப்பது நாட்டுப்பழம், முழு வட்டமாக இருப்பது ஹைப்ரிட் பழம்.

உடல் எடையைக் குறைக்க நினைப்பவர்கள், சர்க்கரை வியாதி இருப்பவர்கள் முக்கனிகள் ஆன மாம்பழம், பலாச்சுளை, வாழைப்பழம் இவற்றைத் தவிர்க்க வேண்டும். சுக்ரோஸ் எனப்படும் சர்க்கரை சத்து, குளுக்கோஸ் அதிகம் உள்ளதால் இவை உடல் எடையைக் கூட்டும்.

## 'எங்கள் கூட்டணி சின்னமான குக்கரிலும் விசில் இருக்கிறது' - தமிழிசை சவுந்தரராஜன்

சென்னை, ஜன.25:

தமிழக பா.ஜ.க. முன்னாள் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் சென்னையில் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது;-

"தனிநபர் மீது இருக்கும் கடன் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிகம். தமிழகம் மீண்டு வர வேண்டும் என்றால் தி.மு.க. மீண்டும் வரக் கூடாது. தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற வேண்டிய காலகட்டம் இது. த.வெ.க. தலைவர் விஜய்யை டெல்லிக்கு வரவழைத்தது சட்ட ரீதியான நடவடிக்கை தானே தவிர, அவரை கூட்டணிக்கு அழைப்பதற்காக அல்ல. விசில் எங்களுக்கு உடனடியாக தேவை இல்லை. எங்கள் கூட்டணி சின்னமான குக்கரிலும் விசில் இருக்கிறது. அதே சமயம், எங்கள் கூட்டணிக்கு மேலும் சில கட்சிகள் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதற்கான பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கின்றன." இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## திருவாரூர் மாவட்டத்தில் உள்ள 3 தாலுகாக்களுக்கு வரும் 28-ம் தேதி உள்ளூர் விடுமுறை

மன்னார்குடி ராஜகோபாலசாமி கோவில் குடமுழுக்கு விழா வரும் ஜன.28ம் தேதி நடைபெற உள்ளதை முன்னிட்டு திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி, நீடாமங்கலம், கோட்டூர் ஆகிய 3 தாலுகாக்களுக்கு உள்ளூர் விடுமுறை அளிக்கப்படும் என்று அம்மாவட்ட கலெக்டர் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். மேலும் விடுமுறையை ஈடுசெய்யும் விதமாக வரும் பிப்.,7-ம் தேதி பணிநாளாக செயல்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## குடியரசு தின விழா: சென்னையில் போக்குவரத்து மாற்றம்

நாளை குடியரசு தின விழா கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி, மெரினா கடற்கரையில் உழைப்பாளர் சிலை எதிரே கவர்னர் ஆர்.என்.ரவி தேசிய கொடியை ஏற்ற உள்ளார். இவ்விழாவில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்பட பலர் கலந்து கொள்ள உள்ளனர். இதை முன்னிட்டு மெரினா மற்றும் அதைச் சுற்றி போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## ரேஷன் அரிசியை அமைச்சர்கள் சாப்பிடுவார்களா.? - சீமான் கேள்வி

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், சென்னை தாம்பரத்தில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசுகையில், "வெற்றியையும் தோல்வியையும் சமமாகக் கருதுபவன்தான் வீரன். வெற்றியடைந்தால் இருப்பேன்.. தோல்வியடைந்தால் சென்றுவிடுவேன் என்பவன் கோழை. எங்களுக்கு தெரியாத மூன்றெழுத்து பயம். எங்கள் பரம்பரைக்கே தெரிந்த மூன்றெழுத்து வீரம். 60 ஆண்டுகளாகியும் தலைநகரில் மழை வெள்ளம் வடிய ஏற்பாடு செய்யவில்லை. அரசு இலவசமாக வழங்கும் ரேஷன் அரிசியை எந்த அமைச்சர்கள் சாப்பிடுவார்கள்?" என்று சீமான் கேள்வி எழுப்பினார்.

## திருப்பதியில் சர்வ தரிசன டோக்கன் 3 நாட்கள் நிறுத்தம்

திருமலை, ஜன.25:



திருப்பதி ஏழுமலையான் கோவிலில் (ஞாயிற்றுக்கிழமை) ரத சப்தமி விழா நடக்கிறது. அன்று ஒரே நாளில் சூரியப்பிரபை வாகனம், சின்ன சேஷ வாகனம், கருட வாகனம், அனுமந்த வாகனம், கல்ப விட்ச வாகனம், சர்வபூபால வாகனம், சந்திரபிரபை வாகனம் ஆகிய 7 வாகனங்களில் மலையப்ப சாமி மாடவீதிகளில் வலம் வருவார்.

இதுதொடர்பாக தேவஸ்தான தலைவர் பி.ஆர். நாயுடு கூறுகையில், ரத சப்தமி விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயாராக உள்ளது. 14 வகையான அன்னப்பிரசாதம் காலை முதல் இரவு வரை 85 உணவு கவுண்ட்டர்களில் வினியோகம் செய்யப்படும் என்றார். ரத சப்தமியையொட்டி கல்யாண உற்சவம், ஊஞ்சல் சேவை, ஆர்ஜித பிரம்மோற்சவம் உள்ளிட்ட சேவைகள், குழந்தைகள் பெற்றோர், முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான தரிசனம் ரத்து செய்யப்படுகிறது. இன்று (சனிக்கிழமை) முதல் 26-ந் தேதி வரை சர்வ தரிசன டோக்கன்கள் வழங்கப்படமாட்டாது. வி.ஐ.பி. தரிசனத்தை தவிர, அனைத்து பரிந்துரை கடிதங்களும் நாளை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

## வசந்த பஞ்சமி.. திருப்பதி ஏழுமலையான் கோவிலில் சிறப்பு பூஜை

திருமலை, ஜன.25:



வசந்த பஞ்சமி சிறப்பு பூஜையில் தேவஸ்தான கூடுதல் செயல் அதிகாரி வெங்கையா சவுத்ரி, துணை செயல் அதிகாரி லோகநாதம் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

வசந்த பஞ்சமியை முன்னிட்டு திருப்பதி ஏழுமலையான் கோவிலில் இன்று சிறப்பு பூஜை நடைபெற்றது. முதலில், கோவிலின் கல்யாண மண்டபத்தில் ஸ்ரீதேவி மற்றும் பூதேவி சமேத மலையப்ப சுவாமிக்கு அர்ச்சகர்கள் சிறப்பு திருமஞ்சனம் மற்றும் பூஜைகள் செய்தனர். சதுர்தச கலசவாகனம், புண்யாகவாசனம் மற்றும் பல்வேறு யாக பூஜைகள் நடைபெற்று நிறைவாக பூர்ணாஹுதி சமர்ப்பிக்கப்பட்டது.

இதற்கு முன்பு, ஒவ்வொரு திங்கட்கிழமையும் வாராந்திர சேவையாக சிறப்பு பூஜை செய்யப்பட்டது. பெரியவர்கள், அர்ச்சகர்கள் மற்றும் ஆகம அறிஞர்களின் ஆலோசனையின்படி, உற்சவ சிலைகள் தேய்மானம் அடைவதை தவிர்க்கும் வகையிலும், எதிர்கால சந்ததியினருக்கு இந்த உற்சவ மூர்த்திகளின் மகிமையை அறியச்செய்யவும், வசந்தோற்சவம், சஹஸ்ர கலசாபிஷேகம் மற்றும் விஷேஷபூஜை ஆகியவற்றை வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே நடத்த திருமலை திருப்பதி தேவஸ்தனம் முடிவு செய்தது. அதன்படி கடந்த ஆண்டு முதல், வசந்த பஞ்சமியைக் கொண்டாடுவதற்காக வருடாந்திர சிறப்பு பூஜை நடத்தப்படுகிறது.

நேற்று முன்தினம் நடைபெற்ற சிறப்பு பூஜையில் திருமலை திருப்பதி தேவஸ்தான கூடுதல் செயல் அதிகாரி வெங்கையா சவுத்ரி, துணை செயல் அதிகாரி லோகநாதம் மற்றும் பிற அதிகாரிகள் பங்கேற்றனர்.

## இந்தியாவில் நிபா வைரஸ் பாதிப்பு.. 5 பேருக்கு தொற்று உறுதி - தனிமைப்படுத்தப்பட்ட 100 பேர்

புதுடெல்லி, ஜன.25:



இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் நிபா வைரஸ் பரவல் கண்டறியப்பட்டுள்ளது. இதுவரை 5 பேருக்கு நிபா வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் மருத்துவப் பணியாளர்களும் அடங்குவர்.

பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்த சுமார் 100 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

பழம் தின்னும் வௌவால்கள் மூலம் இந்த வைரஸ் மனிதர்களுக்குப் பரவுகிறது.

காய்ச்சல், தலைவலி, மூச்சு விடுவதில் சிரமம் ஆகியவை நிபா வைரஸ் ஆரம்பகட்ட அறிகுறிகளாகும்.

நோய்த்தொற்று மோசமானால் மூளை அழற்சி ஏற்பட்டு உயிரிழப்பிற்கு வழிவகுக்கும்.

நிபா வைரஸிற்கு இதுவரை தடுப்பூசியோ அல்லது குறிப்பிட்ட சிகிச்சையோ இல்லை.

இறப்பு ஏற்பட வாய்ப்பு 40% முதல் 75% வரை மிக அதிகமாக இருப்பதாக உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.




## சோலைமலை முருகன் கோவிலில் தைப்பூச திருவிழா கொடியேற்றம்

மதுரை, ஜன.25:

மதுரை மாவட்டம் அழகர்மலை உச்சியில் பிரசித்தி பெற்ற முருகப்பெருமானின் ஆறாவது படை வீடு எனும் சோலைமலை (பழமுதிர்சோலை) முருகன் கோவில் இயற்கை எழிலுடன் அமையப்பெற்றுள்ளது. இக்கோவிலில் நடைபெறும் திருவிழாக்களில் தைப்பூச திருவிழா தனி சிறப்புடையது.

அதன்படி இந்த ஆண்டுக்கான தைப்பூச விழா இன்று காலை 10.15 மணிக்கு மங்கள இசையுடன் மூலவர் சன்னதி முன்புள்ள தங்கக் கொடி மரத்தில் கொடி ஏற்றத்துடன் தொடங்கியது. கொடிமரத்தில் வண்ண மயில், வேல், சேவல், உருவம் பொறிக்கப்பட்ட கொடி ஏற்றப்பட்டது. மேலும் நாணல் புல், பூமாலை, பட்டாடைகள் போன்றவற்றால் தங்க கொடிமரம் அலங்கரிக்கப்பட்டிருந்தது.



சிவாச்சாரியார்களின் வேதமந்திரங்கள் முழங்க உற்சவர் வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமிக்கு சிறப்பு பூஜைகள் தீபாராதனைகள் நடந்தது. முன்னதாக மூலவர் சன்னதியில் வித்தக விநாயகர், மூலவர் சுவாமி, மற்றும் வேல் சன்னதியிலும் விசேஷ பூஜைகள் மஹா தீபாராதனை நடைபெற்றது. அப்போது ஆயிரக்கணக்கான பக்தர்கள் நீண்ட வரிசையில் சென்று அரோகரா கோஷமிட்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

25ந் தேதி மாலையில் காமதேனு வாகனத்திலும், 26ந் தேதி மாலையில் ஆட்டு கிடாய் வாகனத்திலும், 27ந்தேதி பூச்சப்பரத்திலும், 28ந் தேதி யானை வாகனத்திலும் சுவாமி வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்க உள்ளார். 29ந்தேதி மாலையில் பல்லக்கிலும், 30ந்தேதி மாலையில் குதிரை வாகனத்திலும் எழுந்தருள்கிறார்.

விழாவின் முக்கிய நிகழ்வாக 31ந் தேதி தங்க தேரோட்டம் நடைபெறும். பிப்ரவரி 1ஆம் தேதி அன்று காலையில் தீர்த்தவாரியும், தைப்பூச மஹா அபிஷேக விழாவும் வெள்ளிமயில் வாகனத்தில் சுவாமி புறப்பாடும் நடைபெறும். தொடர்ந்து அன்று மலையில் தீபாராதனை காண்பிக்கப்பட்டு கொடியிறக்க நிகழ்ச்சி நடைபெறும்.

## ஒரு நிலவு முழுக்க மீத்தேன் இருந்தா என்ன ஆகும்? இதோ டைட்டன் ரகசியம்!

பூமியில் இருக்கும் மீத்தேன் வாயு வெளிப்படும்போது உடனடியாக அங்கு தீப்பிடிக்கும் நிகழ்வுகள் ஏற்படுகின்றன. வயல்வெளிகளில் சிறிது நேரம் மீத்தேன் வெளிப்பட்டால் தீப்பிடிக்கும் சம்பவங்களை, கொள்ளிவாய் பிசாசு நடமாட்டம் என்று கூறி சிறுவர்களை பயமுறுத்தி வைப்பார்கள். மிகச் சிறிய மீத்தேன் வெளிப்பாடே இப்படி இருந்தால், கொஞ்சம் அதிகளவில் மீத்தேன் இருக்கும் இடத்தில் தீப்பற்றினால் அந்த இடமே வெடித்து சிதறும். இப்படி ஒப்பீடு இருக்கையில் ஒரு நிலவு முழுக்க மீத்தேன் வாயு நிரம்பி இருந்தால் எப்படி இருக்கும்?

அப்படி ஒரு நிலவு தான் சனிக்கிரகத்தின் துணைக் கோளான டைட்டன் ஆகும். இது அந்த கிரகத்தின் மிகப்பெரிய நிலவாக உள்ளது. இந்த நிலவு தான் சூரிய மண்டலத்தில் வளிமண்டலத்தை கொண்டுள்ள ஒரே துணைக்கோளாக இருக்கிறது. மீத்தேனும் ஹைட்ரோகார்பனும் நிரம்பி ஆறாக ஓடி இருக்கும் டைட்டன் நிலவில் யாரேனும் ஒரு தீக்குச்சியை பற்ற வைத்தால் என்ன ஆகும் என்று தெரியுமா?

பூமியை விட சற்று அடர்த்தியான வளிமண்டலத்தை டைட்டன் நிலவு பெற்றுள்ளது. இந்த வளிமண்டலத்தில் நைட்ரஜன் வாயு 95% மற்றும் மீத்தேன் 4% அதிகமாகவும், மீதியுள்ள 1 சதவீதத்தில் ஹைட்ரோ கார்பனின் மூலக்கூறாக கொண்ட சில எரிவாயுகள் உள்ளன. மனிதர்கள் வாழத் தேவையான ஆக்ஸிஜன் இங்கு 0.01% அளவில் அரிதாக உள்ளது. இங்கு வளிமண்டலத்தில் மீத்தேன் நிறைய இருப்பதால் இங்கு மழை பெய்தால் கூட அதிலும்



மீத்தேன் நிரம்பி இருக்கிறது. இதனால் இங்கு மீத்தேன் கடல் கூட உள்ளது.

இந்த அளவுக்கு எரிவாயு கொட்டிக்கிடக்கும் ஒரு நிலவை ஒரு சிறு தீப்பொறி போதுமே எரிய வைக்க. இவ்வளவு எரிவாயு மிக்க நிலவில் தீப்பிடித்தால் எந்தளவுக்கு பெரிய பேரழிவை ஏற்படுத்தும் என்று சிந்தனைகளும் விஞ்ஞானிகளுக்கு உண்டு.

டைட்டன் நிலவின் வெப்ப நிலையை கேள்விப்பட்டால் நீங்கள் உறைந்து போவீர்கள். இதன் வெப்பநிலை 180 டிகிரி செல்சியஸ் முதல் 270 டிகிரி செல்சியஸ் வரை இருக்கும். இத்தகைய மோசமான உறைப்பனி நிலையில் மனிதர்கள் வாழ்வது சாத்தியம் அல்ல. இங்கு அனைத்தும் உறைந்து போகும். ஆனால், மீத்தேன் உள்ளிட்ட சில எரிவாயுக்கள் இங்கு திரவ நிலையில் ஆறாக ஓடி மீத்தேன் கடலுடன் கலக்கின்றன.

இங்கு தீப்பிடிக்க வைக்க லைட்டரை கொளுத்தினாலும் அது எரியாது, தீக்குச்சியை பற்ற வைத்தாலும் அது பற்றி கொள்ளாது. அந்த அளவிற்கு டைட்டனில் உறைபனி நிலை மோசமான அளவில் உள்ளது. இதை விட நெருப்புக்கு தேவையான எரிபொருள் கடல்போல இருந்தாலும் , ஆக்சிஜன் இல்லாத காரணத்தில் நெருப்பு தோன்றாது. ஆக்சிஜன் வேண்டி , நாம் ஒரு ஆக்சிஜன் சிலிண்டரை எடுத்துச் சென்று நெருப்பை பற்ற வைக்க முயற்சி செய்தாலும் அங்குள்ள 180 டிகிரி வெப்பநிலையில் தீப்பற்றும் வாய்ப்பு இருப்பது இல்லை. அத்துடன் அங்கு ஈர்ப்பு விசையும் குறைவாக இருப்பதால் , தீயும் கொழுந்து விட்டு எரியாமல் அணைந்து விடும். நிலவை எரிக்க தனியாக ஒரு தீக்குச்சியை தேடத் தேவையில்லை. அங்கு மீத்தேன் வாயுவால் இடியும் மின்னலும் ஏற்படுகின்றன. ஆனாலும், அதிலுள்ள தீப்பொறி வளிமண்டலத்தில் உள்ள மீத்தேன் வாயுவில் பட்டாலும் , எந்த ஒரு விளைவுகளையும் ஏற்படுத்துவது இல்லை. காரணம் அங்கு மிகவும் அரிதாக இருக்கும் ஆக்சிஜன் எதனுடனும் வினை புரியாமல் இருக்கும். டைட்டனில் உள்ள ஆக்சிஜன் கார்பனுடன் இணைந்து புளோரன்ஸ் என்று தனித்து விடப்பட்டுள்ளது.

இப்போது ஒரு 25% ஆக்சிஜனை டைட்டன் நிலவு வளிமண்டலத்தில் செலுத்தினால் , அங்கு ஏற்படும் மின்னலில் தானாக நிலவு தீப்பிடிக்கும் . காரணம் 25% ஆக்சிஜன் நெருப்பை எரிய வைக்கும் , ஆனால் , ஈர்ப்பு விசை குறைவாக இருப்பதாலும், கொடூர உறைபனி வெப்பநிலையில் இருப்பதால் முழு நிலவும் எரியாமல் , பகுதியளவு எரிய அனுமதிக்கும் . வருடக் கணக்கில் இந்த தீ பொறுமையாக இருந்து மீத்தேன் கடல் காலியாகும் வரை எரியும். ஆனால், இதற்கும் வாய்ப்பு குறைவு, ஆக்சிஜன் ஒருவேளை புளோரன்ஸ் ஆக மாறி தனித்து இருந்தால் எந்த தீயும் பற்றாது.

பற்றி முழுவதும் எரிந்து விட்டால் வெளியிடும் கார்பன்கள் பச்சை இல்ல வாயுவை வெளியிட்டு, ஆக்சிஜன் அளவை நிலைப்படுத்தலாம். ஆக்சிஜன் இருந்தால் அந்த இடத்தில் உயிர்கள் உருவாகும் மனிதர்கள் வாழலாம். ஆனால், 25% ஆக்சிஜன் கொண்டு செல்வது சாத்தியம் இல்லையே!

# திருந்திய மனம்

" மனைவியோடு அன்பாய் சந்தோஷமாய் மகன் பிரபுவுடன் புரிதலாய் விளையாடி வீட்டு கஷ்ட்ட நஷ்ட்டங்களை புரிந்து கொண்டு விட்டுக் கொடுத்து நல்ல குடும்பமாய் வாழ வேண்டும் என்பது ஆசை .

மனைவி ராதிகா இல்லத்தரசி இருந்தும் வீட்டில் இருந்தபடியே பல கைத் தொழில்கள் செய்து வருமானம் பார்க்க தொடங்கி விட்டாள் .

மகன் பிரபு ஆறாம் வகுப்பு படிக்கிறான் . சுட்டியான விளையாட்டான நன்கு படிக்கும் மாணவன் .

நவீன் கணவன் அரசாங்க பள்ளியில் ப்யூன் . சரியான நேரத்திற்கு பள்ளிக்கு வந்து மாலை சரியாக வீடு திரும்புவான் .



ராதிகா சரியான உழைப்பாளி சிக்கனப் பேர்வழி .நவீன் விட்டுக் கொடுத்து மனைவியை நேசித்து வாழும் முழுமையான தந்தை .

இருந்தும் வாரம் ஒரு முறை குடிக்கும் பழக்கம் உண்டு . இந்த பழக்கம் ராதிகாவிற்கு பிடிக்கவில்லை . வாரம் என்று தொடங்கி நாள் பிறகு மணி என்று உருவம் பெரும் என்று நவீனை கண்டித்தாள் .

பல முறை சொல்லிப் பார்த்தும் கண்டித்து பார்த்தும் சண்டை போட்டு பார்த்தும் எந்த பலனும் இல்லை .

ஒரு நாள் திடீர் என்று தன் மகன் பிரபுவுடன் வீட்டை விட்டு வெளியில் சென்று விட்டாள் ராதிகா .

கைத்தொழிலை வைத்துக் கொண்டு பிரபுவை படிக்க வைக்க ஆரம்பித்து தன் வாழ்க்கையை நவீன் இல்லாமல் வாழத் தொடங்கி விட்டாள் .

பத்து ஆண்டுகள் ஆகிவிட்டது இப்போது நடந்தது போல் தோன்றியது நவீனுக்கு . தனிமை வாழ்க்கை மகன் அருகில் இல்லாத சோகம் , மனைவி கைவிட்ட ஏக்கம் ஆண்டுகள் நகர்ந்தது .

நன்கு உறங்கிக் கொண்டிருந்த நவீன் இத்தனையும் கனவில் நடந்தது என்பதை உணர்ந்தான் . கடந்த ஆறு மாதமாக குடியை விட்டு விட்டான் .

அடிக்கடி மனைவி மகன் பற்றிய கவலை தேடல் அழுகை செய்த தவறுக்கு வருந்திய நிலை இது தான் நவீன் தனக்கு கொடுத்துக் கொண்ட தண்டனை .

நவீன் உடன் பணி செய்யும் ஆசிரியர் செல்வம் ரொம்ப நல்லவர் , நவீன் திருந்தி வாழ்கிறான் தவறு செய்வதில்லை என்பதை புரிந்து கொண்டு, ராதிகா பிரபுவிடம் சென்று நவீன் நிலை குறித்து பேசினார் .

நல்ல பதில் கிடைத்தது மனைவி ராதிகா வளர்ந்த தன் மகன் பிரபுவை பார்த்து ஆனந்த கண்ணீர் மல்க மீண்டும் தன் குடும்பத்தில் இணைந்தான் நவீன் .

குடியினால் தன் வாழ்வு பட்ட துக்கத்தை கஷ்ட்டத்தை அந்த பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு நீதி போதனை வகுப்பு போல சொல்லி திருத்தி வந்தான் நவீன் .

மனம் திறந்து தன் வாழ்க்கை கதையை கூறுவான். மன நிறைவும் ஆத்ம திருப்தியும் நிறைந்தது தானே வாழ்க்கை ..."

**- சீர்காழி.**
**ஆர். சீதாராமன்.**

# "உதவிக்கு விலையில்லை"



சாலையோரக் கடை முன் நின்றிருந்தாள் அந்தச் சிறுமி.
கால்களில் செருப்பில்லை, கையில் பழைய அலுமினியக் கிண்ணம்.
“அம்மா... பிச்சை...”
அவள் குரலில் சத்தமில்லை. பழகிப் போன வறுமையின் மெல்லிய கெஞ்சல்.
காரிலிருந்து இறங்கினாள் ஒரு பணக்காரப் பெண்மணி.
"பள...பள"க்கும் பட்டுப் புடவை, கனத்த கைப்பை, கழுத்தில் நகைக்கடை, கண்களில் அவசரம்.
சிறுமி அவளை நோக்கிச் சென்று பிச்சை கேட்க, ”ச்சை... சனியனே... போ... போ அந்தப் பக்கம்...!” முகம் சுளித்தபடி விரட்டியடித்தாள் பணக்காரப் பெண்மணி.

கிண்ணத்தைத் தாழ்த்திக் கொண்டு, அமைதியாய் நகர்ந்தாள் சிறுமி.
அதே நொடியில், எங்கிருந்தோ திடீரென்று வந்தான் அந்தத் திருடன்.
கண்ணிமைக்கும் நேரத்தில் அந்தப் பெண்மணியின் கைப்பையைப் பிடுங்கிக் கொண்டு ஓடத் தொடங்கினான்.
“ஐயோ! பிடிங்கோ!... பிடிங்கோ.."
பெண்மணியின் குரல் அதிர்ந்தது.
சாலையில் மக்கள் இருந்தும், எல்லோரின் கால்களும் பயத்தில் உறைந்தன.
திருடன் ஓடிய பாதையில் நின்றிருந்தாள் சிறுமி.
அவன் அருகே வந்த நொடியில், அவள் தன் மெலிந்த காலை முன்னோக்கி நீட்டினாள்.
அவன் அந்தச் சின்னக் கால் தடுக்கியதில் தடுமாறி தரையில் விழுந்தான்.

விழுந்தவன் தன்னை நோக்கி சிலர் வருவதை உணர்ந்ததும் கைப்பையைப் அங்கேயே போட்டு விட்டு, "தப்பித்தால் போதும்டா சாமி" என்கிற பாணியில் எழுந்து ஓடினான்.
சிறுமி அமைதியாக நின்றாள்.
பணக்காரப் பெண்மணி ஓடி வந்து தன் கைப்பையை எடுத்துக் கொண்டாள். கைகள் நடுங்கின.
மூச்சு வாங்கியது.
திரும்பி அந்தச் சிறுமியைப் பார்த்தாள்.
சிறுமி முகத்தில் வெற்றிப் பெருமிதமில்லை. இயல்பாயிருந்தாள்.

நேரே சிறுமியை நோக்கி வந்த அந்தப் பெண்மணி தன் கைப்பையைத் திறந்து, ஒரு பெரிய நோட்டை எடுத்தாள்.
“இந்தா ... வாங்கிக்க.” என்றாள் நன்றி சொல்லும் விதமாய்.
சிறுமி கிண்ணத்தை கீழே வைத்தாள்.
முதன்முறையாக அப்பெண்மணியை நேராகப் பார்த்தாள்.
“அம்மா... உதவி செய்யறதுக்கெல்லாம் காசு வாங்கக் கூடாதும்மா.”
பெண்மணி உறைந்தாள்.
அந்த வார்த்தை அவள் வாழ்நாளில் யாரும் சொல்லாத தீர்ப்பு.
சிறுமி மீண்டும் கிண்ணத்தை எடுத்தாள். நடக்க ஆரம்பித்தாள்.
அந்தப் பெண்மணி கைப்பையை இறுகப் பிடித்துக் கொண்டு நின்றாள். கைப்பை கனமாக இல்லை மனசுதான்...முதல் முறையாக கனத்தது.



**-முகில் தினகரன்**
கோயமுத்தூர்.

# உணவு சமைக்கும் போது...

பாகற்காய் பழுத்துவிடாமல் இருக்க பாகற்காயை வில்லைகளாக்கி உப்பைத் தூவி ஒரு பாத்திரத்தில் குலுக்கி வைத்துவிட்டால் இரண்டு மூன்று நாட்கள் ஆனாலும் பாகற்காய் அப்படியே இருக்கும். ஃபிரிட்ஜில் வைத்தால் ஒரு வாரம் வரையில் பிரெஷ்ஷாக இருக்கும்.

கீரை மசியல் செய்யும்போது புளிக்கு பதிலாக பொடியாக அரிந்த மாங்காயைச் சேர்த்தால் மிகவும் சுவையாக இருக்கும்.

ஜவ்வரிசியைச் சாதம்போல் வேகவைத்து பிறகு மோரில் கரைத்து உப்பு போட்டுச் சாப்பிட்டால் வயிற்று வலி குணமாகும். வயிற்றுப்போக்கும் நிற்கும்.

திரட்டுப்பால் செய்யும்போது சிறிய மெல்லிய எவர்சில்வர் தட்டை அதனுள் போட்டால் அடிப் பிடிக்காமலும், பால் பொங்காமலும் இருக்கும்.

பருப்பை குக்கரில் சமைக்கும் போது சிறிது மஞ்சள் தூளையும், ஒரு டீஸ்பூன் நெய்யையும் சேர்த்தால் மணமாகவும், சுவையாகவும் இருக்கும்.

ரசத்தை இறக்குவதற்கு முன் கறிவேப்பிலைப்பொடி தூவி இறக்கினால் மணமாக இருக்கும்.



சமையல் செய்யும்போது சூடான எண்ணெய் பட்டுவிட்டால் உருளைக்கிழங்கைச் சிறிது அரைத்துப் பூசினால் கொப்பளங்கள் ஏற்படாது.

ஜவ்வரிசி பாயசம் செய்வதற்கு முன், ஜவ்வரியை லேசாக வறுத்து பிறகு அதில் வெந்நீரை ஊற்றி அரை மணி நேரம் அப்படியே வைக்கவும். பிறகு பாயசம் செய்தால் சீக்கிரம் வெந்துவிடும்.

காய்கறிகளை வேகவைக்கும்போது அதிக தண்ணீர் வைத்து வேக வைக்க கூடாது. ஏன் என்றால் காய்கறிகளில் உள்ள வைட்டமின் சத்துகள் போய்விடும்.

காய்ந்த மிளகாயை வறுக்கும்போது நெடி வரும். அவை வராமல் இருப்பதற்கு சிறிது உப்பு போட்டு வறுத்தால் நெடி வராது.

பச்சை மிளகாயை காம்புடன் வைக்காமல் காம்பை எடுத்து விட்டு நிழலான இடத்தில் வைத்தால் நீண்ட நாட்கள் இருக்கும்.

முட்டைகோஸில் உள்ள தண்டை வீணாக்காமல் சாம்பாரில் போட்டு சாப்பிட்டால் மிகவும் சுவையாக இருக்கும்.

உருளைக்கிழங்கு வறுவல் செய்யும்போது புளிப்பு இல்லாத தயிர் அரைக்கரண்டி ஊற்றி செய்தால் மிகவும் சுவையாக இருக்கும்.

கறிவேப்பிலை காயாமல் இருப்பதற்கு ஒரு அலுமினியப் பாத்திரத்தில் போட்டு மூடி வைத்தால் காயாமல் இருக்கும்.

காய்கறிகளை அரிந்து பிரிட்ஜில் வைத்தால், காய்கறிகளில் உள்ள சத்து குறைந்து விடும்.

சமையலில் உப்பு அதிகமாகி விட்டால் உருளைகிழங்கை அரிந்து போட்டால் உப்பை எடுத்துவிடும்.

உருளைக்கிழங்கு வேக வைத்த தண்ணீரில் பாத்திரங்களை கழுவினால் பாத்திரங்கள் பளபளப்பாக இருக்கும்.

# முட்டைக்கோஸ் சாலட்

பச்சை இலைக் காய்கறிகளில் முக்கியமான முட்டைக்கோஸ்ஸில் வைட்டமின் ஏ, இ, சோடியம், இரும்பு, கால்சியம், பாஸ்பரஸ் புரதம், தாது உப்புக்கள் ஆகிய சத்துக்கள் உள்ளன. உடல் ஆரோக்கியமாக இருப்பதற்கு உறுதுணையாக இருப்பது முட்டைக்கோஸ்.

பயன்கள் :

முட்டைகோஸை பச்சையாக அரைத்து 60 மில்லி அளவுக்குச் சாறு எடுத்து குடித்து வர தொண்டைப் புண் குணமாகும்.

சர்க்கரை நோயாளிகள் முட்டைக்கோஸ் சாப்பிடுவதால் சர்க்கரையின் அளவு குறையும்.

ஜலதோஷத்தினால் துன்பப்படுபவர்கள் முட்டைக்கோஸை நன்றாக வேகவைத்து அதன் சாற்றை குடித்து வந்தால் சளித்தொல்லையிலிருந்து விடுபடலாம்.

தினமும் முட்டைக்கோஸ் சாப்பிடுவதால் கண் பார்வைக் கோளாறுகள் நீங்கும்.

முட்டைக்கோஸ் சாப்பிடுவதால் கண் நரம்புகளானது சீராக இயங்கும்.

முகப்பருக்கள் இருப்பவர்கள் வாரம் இருமுறை உணவில் சேர்த்து வந்தால் பருக்கள் நீங்கி முகம் பளபளப்பாகும்.

முட்டைக்கோஸை பொடிப்பொடியாக நறுக்கி, அதனுடன் தயிர், வெங்காயம், உப்பு ஆகியவற்றைச் சேர்த்துச் சாப்பிட்டால் இளைத்த உடல் பெருக்கும்.

புற்றுநோய் வராமல் தடுக்கும் ஆற்றல் முட்டைக்கோஸ்ஸிற்கு உண்டு.



தேவையானப் பொருட்கள் :

முட்டைக்கோஸ் - 1
வெங்காயம் - 2
வெள்ளரிக்காய் - 1
பச்சை மிளகாய் - 2
பாசிப்பருப்பு - 1 கப்
தக்காளி -2
எலுமிச்சை சாறு - 1 டீஸ்பூன்
கொத்தமல்லி இலை - சிறிது
இஞ்சி - 1 துண்டு
உப்பு - தேவையான அளவு

செய்முறை :

முட்டைக்கோஸை முதலில் பொடிப்பொடியாக நறுக்கி வேகவைத்துக் கொள்ளவும். பாசிப்பருப்பை வாணலியில் வறுத்து 15 நிமிடம் ஊற வைத்துக்கொள்ளவும். வெங்காயம், பச்சை மிளகாய், வெள்ளரிக்காய் முதலியவற்றைப் பொடிப்பொடியாக நறுக்கிக் கொள்ளவும். இஞ்சியை தோல் சீவி விட்டு, துருவி எடுத்துக்கொள்ளவும். பிறகு ஊற வைத்துள்ள பாசிப்பருப்புடன் வேகவைத்துள்ள முட்டைக்கோஸ் மற்றும் நறுக்கி வைத்துள்ள வெங்காயம், பச்சை மிளகாய், வெள்ளரிக்காய், துருவிய இஞ்சி, கொத்தமல்லி இலை, உப்பு, எலுமிச்சை சாறு ஆகிய அனைத்தையும் ஒன்றாக கலந்து பரிமாறவும். சூப்பரான முட்டைக்கோஸ் சாலட் தயார்.

# முந்திரி பருப்பு கேக்

தினமும் முந்திரி சாப்பிடுவது உடலினை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும் முக்கிய உணவுப்பொருளாகும். முந்திரி பருப்பில் மாங்கனீசு, பொட்டாசியம், தாமிரம், இரும்பு, மெக்னீசியம், துத்தநாகம் மற்றும் செலினியம் கனிம தாதுக்கள் அதிக அளவில் நிறைந்துள்ளது. முந்திரியை அப்படியே சாப்பிடுவதை விட குழந்தைகள் விரும்பும் கேக் போன்று செய்து கொடுப்பதால் குழந்தைகள் விரும்பி சாப்பிடுவார்கள்.



தேவையானப் பொருட்கள் :

முந்திரிப் பருப்பு - 1ஃ2 கிலோ
சர்க்கரை - 1ஃ2 கிலோ
ஏலக்காய் பொடி - 2 ஸ்பூன்
நெய் - 100 கிராம்

செய்முறை:

முந்திரி கேக் செய்வதற்கு முதலில் ஒரு வாணலியில் நெய் விட்டு அதில் முந்திரிப் பருப்பைப் போட்டுப் பொன்னிறமாக வறுத்து எடுத்துக் கொண்டு, ஆறிய பிறகு மிக்ஸியில் போட்டுப் பொடியாக அரைத்து எடுத்துக் கொள்ளவும். பிறகு சர்க்கரையில் சிறிது நீர் விட்டுப் பாகுப்போல காய்ச்சவும். சர்க்கரைப்பாகானது கம்பிப்பாகு பதத்திற்கு வந்தவுடன் அதில் முந்திரிப்பருப்புப் பொடி, ஏலக்காய் பொடி ஆகியவற்றை கலந்து, அதனுடன் சிறிது நெய் சேர்த்து ஐந்து நிமிடம் வைத்திருந்தப் பிறகு ஒரு தட்டை எடுத்து அதில் நெய்யைத் தடவி அதில் இந்த கலவையைக் கொட்டி, ஆறியப் பிறகு விருப்பமான வடிவத்தில் சிறு சிறு துண்டுகளாகக் கட் செய்யவும். சுவையான சத்துக்கள் நிறைந்த முந்திரி கேக் ரெடி.

# பச்சைப்பயறு ஸ்டஃப்டு சப்பாத்தி !!

ஆரோக்கியமான உணவை உட்கொண்டால், நாள் முழுவதும் நன்கு சுறுசுறுப்புடன் செயல்பட முடியும். அதிலும் தினமும் சிறுதானியங்களை உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது. இப்போது சத்து நிறைந்த பச்சைப்பயிறு வைத்து பச்சைப்பயறு ஸ்டஃப்டு சப்பாத்தி செய்வது எப்படி



தேவையானப் பொருட்கள் :

முழு பச்சைப்பயறு - 100 கிராம்
கோதுமை மாவு - 5 கப்
பெரிய வெங்காயம் - 2
கடுகு - 1 டீஸ்பூன்
உளுத்தம்பருப்பு - 2 டீஸ்பூன்
மஞ்சள் தூள் - கால் டீஸ்பூன்
சீரகத்தூள் - அரை டீஸ்பூன்
பூண்டு - 5 பல்
பச்சை மிள்காய் - 2
தேங்காய் துருவல் - கால் கப்
நறுக்கிய கறிவேப்பிலை - சிறிதளவு
உப்பு - தேவையான அளவு
எண்ணெய் - தேவையான அளவு
தண்ணீர் - தேவையான அளவு

செய்முறை :

பச்சைப்பயறு ஸ்டஃப்டு சப்பாத்தி செய்வதற்கு முதலில் ஒரு பாத்திரத்தில் கோதுமை மாவை போட்டு, தேவையான அளவு தண்ணீர், எண்ணெய், உப்பு சேர்த்து நன்கு பிசைந்து வைத்துக்கொள்ளவும்.
பின்பு ஒரு பாத்திரத்தில் பச்சைபயறை போட்டு, தேவையான அளவு தண்ணீர் ஊற்றி, குறைந்தது 5 மணி நேரம் ஊறவைக்கவும்.
பின்பு மற்றொரு பாத்திரத்தில் ஊறிய பச்சைப்பயறைப் போட்டு வேக வைத்து, அதில் உள்ள தண்ணீரை வடித்துவிடவும்.
அடுத்து வெங்காயத்தைப் பொடிப்பொடியாக நறுக்கி வைத்துக்கொள்ளவும். அடுத்து பூண்டை தோலுரித்து தட்டி வைத்துக்கொள்ளவும்.
அடுத்து தேங்காய் துருவல், பச்சை மிளகாய், மஞ்சள், சீரகத்தூள் ஆகியவற்றை மிக்ஸியில் போட்டு ஒரு சுற்று சுற்றி எடுக்கவும்.
அடுத்து ஒரு வாணலியில் தேவையான அளவு எண்ணெய் ஊற்றி சூடானதும், அதில் கடுகு, உளுத்தம் பருப்பு, கறிவேப்பிலை, நறுக்கிய வெங்காயம், தட்டிய பூண்டு ஆகியவற்றைப் போட்டு தாளித்து, அதனுடன் அரைத்து வைத்துள்ள மசாலாவை சேர்த்து வதக்கவும்.

பின்பு அதனுடன் வேகவைத்த பச்சைப்பயறை சேர்த்து, அதனுடன் தேவையான அளவு உப்பு சேர்த்து கிளறி இறக்கினால் பச்சைப்பயறு ஸ்டஃபிங் ரெடி.

அடுத்து பிசைந்து வைத்துள்ள கோதுமை மாவை சிறுசிறு உருண்டைகளாக உருட்டி, உருண்டைகளுக்கு நடுவில் குழி செய்து அதனுள் பச்சைப்பயறு ஸ்டஃபிங் வைத்து மூடி சப்பாத்திகளாக தேய்த்து, தோசைக்கல்லில் போட்டு இரண்டு புறமும் நன்கு வேக வைத்து எடுத்தால் பச்சைப்பயறு ஸ்டஃப்டு சப்பாத்தி ரெடி.

# தைப்பூசம் ஸ்பெஷல்




**சிறப்பு வாய்ந்த தைப்பூசம்**

நம் எல்லோருமே தைப்பூசம் என்றால் முருகப் பெருமான் பார்வதி தேவியிடம் வேல் வாங்கி ய சிறப்பு தினம் என்றும், முருகப்பெருமானுக்கு இந்த விசேஷ நாளில் வழிப்பட்டால் முருகனின் ஆசி கிடைக்கும் என்று வணங்கி வருகிறோம்.

ஆனால் உண்மையில் இந்த நந்நாளில் முருகப்பெருமானுக்கு மட்டுமின்றி, ஏராளமான கடவுள்களுக்கும் இது ஒரு சிறப்பு வாய்ந்த நாள் என்று நம்மில் பலருக்கும் தெரியாது. தைப்பூசத்தின் சிறப்புகள் என்னென்ன என்று இந்த பதிவில் பார்க்கலாம்!

**சிறப்புகள் வாய்ந்த தைப்பூச தினம்:**

தை மாதத்தில் வரும் பௌர்ணமியும், பூச நட்சத்திரமும் ஒன்று சேரும் இந்த நன்னாள் தான் தைப்பூச தினமாக வழிபடப்படுகிறது. தைப்பூசம் என்பது முருக பெருமானுக்குரிய விரத நாளாக மட்டுமே கருதப்படுகிறது.

ஆனால் இது முருக வழிபாட்டிற்கு மட்டு மின்றி சிவ வழிபாடு, சக்தி வழிபாடு, குரு வழிபாட்டிற்கும் மிகவும் உகந்தது ஆகும். அதனால் தைப்பூச நாளில் எந்த தெய்வத்தை வழிபட்டால் அளவில்லாத பலன் கிடைக்கும். அனைத்து தெய்வங்களுக்கும் உரியதாக சொல்லப்படும் அளவிற்கு இந்த தை மாத பூசம் நட்சத்திரம் மற்றும் பௌர்ணமி திதி இணைந்து வரும் நாளுக்கு அப்படி என்ன தனிச்சிறப்பு என்பதை வாங்க தெரிந்து கொள்ளலாம்.

**உலகமெங்கும் கொண்டாடப்படும் தைப்பூசம்**

இந்தியாவில் மட்டுமின்றி இலங்கை, சிங்கப் பூர், மலேசியா, மொரிசியஸ் நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது. தைப்பூசம் தினத்தன் று எல்லா முருகன் தலங்களிலும் முருகப் பெருமான் வீதி உலா வருவார்.

பவுர்ணமி தினத்தன்று முழு நிலவு சமயத்தில் பூசம் நட்சத்திரம் வரும்போது சிறப்பு வழிபாடுகள் செய்வதே தைப்பூசத்தின் முக்கிய நிகழ்வாகும். தைப்பூசத்தன்று முருகன் நரகாசுரனை வதம் செய்த நிகழ்வு ஒரு சிறப்பு விழாவாக இன்றும் பழனியில் கொண்டாடப்படுகிறது.

**முருகன் பார்வதி தேவியிடம் வேல் பெற்ற நாள்:**

அசுரர்களுடன் போரிட தலைமை தாங்கி செல்லக்கூடிய சக்தி வாய்ந்த தலைவன் தேவை என ஈசனிடம் வேண்டினர்.

கருணைக்கடலான எம்பெருமான், தன் தனிப்பட்ட சக்தியிலிருந்து, நெற்றிக் கண்ணிலிருந்து உருவானவர் தான் கந்தன். நெற்றிக்கண்ணிலிருந்து வெளிப்பட்ட ஆறு தீப்பொறிகள் ஆறு அழகிய குழந்தைகளாகின. அந்த குழந்தைகளை கார்த்திகை பெண்கள் வளர்த்தனர்.

பின்னர் ஆறுமுகமாக உருவெடுத்தார். ஆண்டி கோலத்தில் பழனி மலை மீது நின்றிருக்கும் முருகனுக்கு, அன்னை பராசக்தி தன் சக்தி முழுவதையும் ஒன்று திரட்டி ஞான வேல் வழங்கியது இந்த தைப்பூச திருநாளில் தான் என புராணங்கள் சொல்கின்றன.

**வள்ளலார் ஜோதி வடிவில் காட்சி தந்த தினம்:**

வள்ளலார் ராமலிங்க சுவாமிகள் ஒரு தை மாத வெள்ளிக்கிழமை புனர்பூச நட்சத்திரத்தி ல்தான் சமாதியானார். இதை குறிக்கும் விதமாக அவர் சமாதியான வடலூரில், தைப்பூச நாளில் லட்சக்கணக்கானோர் கூடி வள்ளலார் விழாவைக் கொண்டாடுகிறார்கள். வடலூரில் தை மாதத்தில் தைப்பூச நாளில் பிரம்மஞான சபையில் அதிகாலை ஏழு திரை விலக்கி ஜோதி தரிசனம் நடைபெறுகிறது. வள்ளலார் ராமலிங்க அடிகளார் தைப்பூச திருநாளிலேயே ஸித்தி அடைந்ததாக சொல்லப்படுகிறது.

**வேறு என்னவெல்லாம் சிறப்புகள்:**

தைப்பூச திருநாளில் தான் உலகில் முதன்முதலாக நீரும், நீரில் இருந்து பிற ஜீவா ராசிகளும் தோன்றியதாக புராணங்கள் கூறுகின்றன.

முருகப்பெருமான் வள்ளி பிராட்டியை தைப்பூச நன்னாளில் தான் திருமணம் செய்து கொண்டராம்.

திருச்சி ஸ்ரீரங்கத்தில் வீற்றிருக்கும் அரங்கநாதர் காவிரி கரையோரம் குடிகொண்டிருக்கும் தன் தங்கையான சமயபுரம் மாரியம்மனுக்கு சீர் கொடுத்த நாளும் இந்த தைப்பூச தினம் தான்.

நெல்லையில் உள்ள தாமிரபரணி நதிக்கரையில் நெல்லையப்பரை நினைத்து விரதமிருந்த காந்திமதி அம்மன், தைப்பூச தினத்தில் நெல்லையப்பரின் அருளைப் பெற்றார். காவிரி தாய் ஸ்ரீரங்கம் அரங்கநாதரை நினைத்து தீவிர தவத்தில் இருந்ததனால், நாராயண பெருமான் காவிரி தாயின் தவத்தை மெச்சி தரிசனம் வழங்கியதும் இந்த நந்நாளில் தான். முருகப்பெருமான் நரகாசுரனை வதம் செய்த நாளை நினைத்து இன்று பழனியில் முருக பகதர்கள், காவடி எடுத்து கொண்டாடுகின்றனர்.

வாயு பகவானும் , வர்ண பகவானும், அக்கினி பகவானும் ஈசனின் அதீத சக்தியை உணர்ந்த நாளாகவும் இந்நாள் போற்றப்படுகிறது. அதாவது இயற்கையை கட்டுப்படுத்தும் சக்தியாக இறைவனே இருக்கிறான் என்பது உணர்த்தப்பட்ட புண்ணியநாள், தைப்பூச நன்னாளாகும்.

தைப்பூச நன்னாளில்தான் ஞானசம்பந்தர் மயிலாப்பூரில் பாம்பு கடித்து இறந்து போன பூம்பாவை என்ற பெண்ணின் அஸ்தி கலசத்தில் இருந்து அப்பெண்ணை உயிருடன் எழுந்து வரும் படி பதிகம் பாடி, உயிர்ப்பித்தார். இது மயிலை கபாலீஸ்வரர் ஆலயத் தில்தான் நடந்தது. இதை மயிலைப்புராணம் கூறுகிறது. இச்சன்னதி மயிலை கபாலீஸ்வரர் ஆலயத்தில் கொடி மரம் அருகே உள்ளது.

தில்லை நடராசருக்கும் இந்தப் பூச நன்னாள் உகந்தது. இவர் பார்வதியுடன் நடத்திய ஆனந்த நடனத்தை தில்லை சிதம்பரத்தில், பதஞ்சலி முனிவர் (ஆதிசேஷ அம்சம்) வியாக்ர பாதர் (புலிக்கால் முனிவர், ஜைன முனிவர்) இவர்களும் தில்லை வாழ் அந்தணர் மூவாயிரவர்களும் முப்பத்து முக்கோடி தேவர்களும் இந்த தைப்பூச நன்னாளில்தான் ஆனந்த நடனம் கண்டு களித்தனர்.

இத்தனை சிறப்புகள் வாய்ந்த இந்த நந்நாளில் நீங்கள் முருகன் கோயில்கள் மட்டுமின்றி, சிவன், பெருமாள் என ஏனையக் கோயில்களுக்கும் சென்று வழிபடலாம்.

வெற்றிவேல்முருகனுக்கு அரோகரா

-முனைவர்
இராம.வேதநாயகம்




---

**தினம் ஒரு தலைவர்கள்**

# தாந்தியா தோபே வரலாறு

தாந்தியா தோப், 1857 தாந்தியா தோபே இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்து ஜான்சி ராணி லட்சுமி பாய்க்கு பெரிதும் உதவியவர். இவரது இயற்பெயர் இராமசந்திர பாண்டுரங்கா.. இரண்டாம் பாஜிராவின் குடும்பத்தைச் சேர்ந்தவரின் மகன்.. பித்தூர் நாட்டின் நானா சாகிப்பின் நெருங்கிய நண்பர்.


சிலம்பம், துப்பாக்கிச் சுடுதல் ஆகியவற்றில் பயிற்சி பெற்றவர். முறையான இராணுவப் பயிற்சி இல்லாவிடிலும் கொரில்லாப் போர் முறையில் போரிட்டு, எந்த நெருக்கடியையும் சமாளித்துத் தப்பிவிடக்கூடியவர். 1857 இல் நடந்த சிப்பாய் கலகத்தை மத்திய இந்தியாவில் மிகச் சிறப்பாக செயல்படுத்தி ஆங்கிலேயருக்கு மிகுந்த துன்பம் கொடுத்தவர்.

ஜான்சி ராணிக்கு பெரிதும் துணை இருந்தவர். 1857 இல் இருந்து 1859 வரை பல இந்திய மன்னர்களுடன் சேர்ந்து பல இடங்களில் போராடியவர்.

ஆங்கிலேயரால் சிறைபிடிக்கப்பட்ட இவருக்கு இராணுவ நீதி மன்றம் 1859 ஏப்ரல் 15 இல் தூக்கு தண்டனை விதித்தது. தாம் மன்னிப்பு கேட்கப்போவதில்லை என்றும் தாம் தமது மன்னரின் ஆணையின்படி செயல்பட்டதாகவும் கூறி, சங்கிலியால் கை, கால்கள் பிணைக்கப்பட்டிருந்த நிலையிலும் தூக்குக் கயிற்றைத் தாமே கழுத்தில் மாட்டிக் கொண்டார். 1859 ஏப்ரல் 17 அன்று தளபதி தாந்தியா தோபே தூக்கிலிடப்பட்டார்.

வரலாறு
தந்தியா தோபே 1857 ஆம் ஆண்டு இந்தியச் சிப்பாய்க் கிளர்ச்சியில் ஒரு தளபதியாக இருந்தார் மற்றும் அதன் குறிப்பிடத்தக்க தலைவர்களில் ஒருவராக இருந்தார். அவர் ஒரு மராத்தி தேசஸ்த பிராமண குடும்பத்தில் பிறந்தார், மேலும் கட்டளை அதிகாரி என்று பொருள்படும் தோபே என்ற பட்டத்தைப் பெற்றார். தோபே என்றால் தலைவர் என்று பொருள்படும். பிதூரின் நானா சாகிப்பின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார், அவருடன் குவாலியர் நகரத்தையும் கைப்பற்றினார். இருப்பினும், ஜெனரல் நேப்பியரின் பிரித்தானிய இந்திய துருப்புக்கள் ரனோத் என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்டனர், மேலும் சிகாரில் மேலும் தோல்வியடைந்த பின்னர் முற்றுகையை கைவிட்டார்.

ஒரு அதிகாரபூர்வமாக, தந்தியா தொபேயின் தந்தை பாண்டுரங்கன் இன்றைய மகாராட்டிராவில் உள்ள படோடா சில்லா நகரில் வசிக்கும் ஜோலா பர்கண்ணா என்பவர்களின் முன்னோர்ராவார். தோபே பிறப்பால் ஒரு மகராட்டிர வசிஷ்ட பிராமணர் ஆவார். அரசாங்க கடிதத்தில், அவர் பரோடாவின் அமைச்சர் என்று கூறப்பட்டுள்ளது, அதே நேரத்தில் அவர் மற்றொரு

தகவல்தொடர்புகளில் நானா சாஹிபிடம் இணைந்து இருந்தார் என்று உள்ளது. அவரது கைதுக்குப் பின்னர் நடந்த விசாரணையில் சாட்சி ஒருவர் தந்தியா தோபே கோதுமை நிறம் கொண்டவர், எப்போதும் வெள்ளை சுக்ரி-தார் என்கிற தலைப்பாகை அணிந்தவர் என்று கூறுகிறார்..



1857 இன் இந்தியச் சிப்பாய் கிளர்ச்சியில் பங்கு
ஜூன் 1857 5 அன்றுசிப்பாய்களின் கிளர்ச்சி கான்பூரில்ர் நடந்தது, நானா சாஹேப் கலகக்காரர்களின் தலைவரானார். 1857 ஜூன் 25 அன்று ஆங்கிலேய படைகள் சரணடைந்தன, ஜூன் மாத இறுதியில் நானா பேஷ்வாவாக அறிவிக்கப்பட்டார். ஜெனரல் ஹேவ்லாக் இரண்டு முறை போரில் நானாவின் படைகளுடன் சண்டையிட்டார், அவர்கள் மூன்றாவது முறையாக தோற்கடிக்கப்பட்டு பித்துருக்குத் திரும்பினர், அதன் பிறகு அவர் கங்கையைத் தாண்டி அவதிற்கு பின்வாங்கினார். தாந்தியா தோபே பித்தூரிலிருந்து நானா சாஹேப் என்ற பெயரில் நடிக்கத் தொடங்கினார்.



தாந்தியா தோபே 1857ஜூன் 27, இல் நிகழ்ந்த கான்பூர் கலவரத்திற்கு காரணமாக இருந்த தலைவர்களில் ஒருவர். அப்போதிருந்து, ஆகஸ்ட் 16, 1857 அன்று சர் ஹென்றி ஹேவ்லாக் தலைமையிலான ஆங்கிலேய படையால் வெளியேற்றப்படும் வரை தோபே அந்தப் பகுதியை பாதுகாத்து வந்தார் பின்னர், கான்பூரில் தளபதி சார்லஸ் ஆஷ் வின்ட்ஹாமை தோற்கடித்தார், இது நவம்பர் 27, 1857 முதல் நவம்பர் 28, 1857 வரை நிகழ்ந்தது. எவ்வாறாயினும், சர் கொலின் காம்ப்பெல்லின் கீழ் ஆங்கிலேயர்கள் எதிர் தாக்குதல் நடத்தியபோது தோபே மற்றும் அவரது இராணுவம் பின்னர் தோற்கடிக்கப்பட்டது. தாந்தியா தோபே மற்றும் பிற கிளர்ச்சியாளர்கள் தப்பி ஓடி, ஜான்சியின் ராணியுடன் தஞ்சம் புகுந்தனர், அந்த நேரத்தில் அவருக்கும் உதவி செய்தனர்.

ஆங்கிலேயர்களின் தாக்குதலில் இருந்து தப்பிக்க ராணி லட்சுமிபாய்க்கு வெற்றிகரமாக உதவினார். லட்சுமிபாய், குவாலியரை ஆங்கிலேயரிடம் இழந்த பிறகு, நானா சாஹேப்பின் மருமகனான தோபே மற்றும் ராவ் சாஹேப் ஆகியோர் ராஜபுதனத்திற்கு தப்பி ஓடினர். 1857 ஆம் ஆண்டு கிளர்ச்சி ஆங்கிலேயர்களால் வீழ்த்தப்பட்ட பின்னரும், தாந்த்யா தோபேகாடுகளில் மறைந்து வாழ்ந்து கெரில்லா போராளியாக எதிர்ப்பைத் தொடர்ந்தார். தன்னுடைய எஜமானர் பேஷ்வாவுக்கு மட்டுமே அவர் பதிலளிப்பதாகக் கூறி தனது முன் கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுகளை டோப் ஒப்புக்கொண்டார். 1859 ஏப்ரல் 18 ஆம் தேதி சிவபுரியில் தூக்கு மேடையில் தூக்கிலிடப்பட்டார்.

சிலை
இவர் தூக்கிலிடப்பட்ட மத்திய பிரதேசத்தில் உள்ள சிவபுரி என்ற இடத்தில் இவர் நினைவாக சிலை நிறுவப்பட்டுள்ளது.

# என் வழி தனி வழி.. இணையத்தை கலக்கும் ஒற்றைப் 'பென்குயின்' வீடியோ - என்னதான் அர்த்தம்?



சமூக வலைதளங்களில் கடந்த சில நாட்களாக பென்குயின் ஒன்றின் வீடியோ வைரலாகி வருகிறது.

அந்த வீடியோவில், ஒரு பென்குயின் தனது கூட்டத்தை விட்டுப் பிரிந்து, உணவு கிடைக்கும் கடல் பகுதியை நோக்கிச் செல்லாமல், ஆளில்லாத பனி மலைகளை நோக்கித் தனியாக நடந்து செல்கிறது.

இந்த வீடியோ 2007-ம் ஆண்டு பிரபல ஜெர்மானிய இயக்குனர் வெர்னர் ஹெர்சாக் எடுத்த "Encounters at the End of the World" என்ற ஆவணப்படத்தில் இடம்பெற்றுள்ளது. பல ஆண்டுகள் கழித்து இந்த வீடியோ தற்போது வைரலாகி வருகிறது.

ஏன்?

பொதுவாக பென்குயின்கள் கூட்டமாகத் தான் வாழும். ஆனால், இந்த ஒரு பென்குயின் மட்டும் தனது திசையை மாற்றி, சுமார் 70 கிலோமீட்டர் தொலைவில் உள்ள மலைகளை நோக்கி எதற்காகச் செல்கிறது? என்று யாருக்கும் தெரியவில்லை.

இது ஒரு அசாதாரணமான நடத்தை என்று நிபுணர்கள் கூறுகின்றனர். இந்த நடத்தையை மனித வாழ்க்கையுடன் ஒப்பிட்டு தற்போது இந்த வீடியோ வைரலாகி வருகிறது. தங்கள் சொந்த ஒப்பிட்டுப் பார்க்கத் தொடங்கினர்.

அதாவது, கூட்டத்தோடு இல்லாமல், எதிர்காலம் புதிராக இருந்தாலும் தனக்கென ஒரு பாதையில் செல்லும் நபர்களோடு பென்குயினின் நடத்தையை ஒப்பிடுகின்றனர். மேலும் வாழ்க்கையில் ஒரு பிடிப்பும் இல்லாமல் என்னதான் நடக்கும் நடக்கட்டுமே என்று புரியாத புதிராக இருப்பவர்களின் அடையாளமாகவும் அந்த பென்குயின் மாறியுள்ளது.

கூட்டத்தோடு இருந்தால் உணவு கிடைக்கும், ஆனால் ஒன்றுமே இல்லாத மலைகளை நோக்கி சென்றால் மரணமே மிஞ்சும் என்ற இயற்கையின் விதியை எதிர்த்து அந்த பென்குயின் நடைபோடுவதில் நிச்சயம் ஏதோ இருக்கிறது.

# 'நான் அரசியலையே தொழிலா பண்றவேன்'... வெளியானது 'கராத்தே பாபு' டீசர்



தமிழ் சினிமாவில் முன்னணி நடிகரான ரவி மோகனின் 34-வது படம் 'கராத்தே பாபு'. 'டாடா' பட இயக்குநர் கணேஷ் கே.பாபு இயக்கியுள்ள இப்படத்தை ஸ்க்ரீன் ஸீன் நிறுவனம் தயாரித்துள்ளது. இந்தப் படத்திற்கு சாம் சி.எஸ். இசையமைத்துள்ளார்.

இந்தப் படத்தில் ரவி மோகன் அரசியல்வாதி மற்றும் கராத்தே மாஸ்டராக இரட்டை வேடத்தில் நடித்துள்ளார். இந்த படத்தில் நாயகியாக தவ்தி ஜிவால் நடித்துள்ளார். இதன் மூலம் அவர் கதாநாயகியாக அறிமுகமாகியுள்ளார். இவர் தமிழக டிஜிபி சங்கர் ஜிவாலின் மகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படத்தில் கே.எஸ்.ரவிக்குமார், விடிவி கணேஷ், சக்தி வாசுதேவன், சுப்ரமணியம் சிவா, கவிதாலயா கிருஷ்ணன், பிரதீப் ஆண்டனி, ராஜ ராணி பாண்டியன், சந்தீப் ராஜ், சிந்துப்ரியா, அஜித் கோஷ், அரவிந்த், கல்கி ராஜா, ஸ்ரீ தன்யா, ஆனந்தி, சாம் ஆண்டர்சன் என மிகப்பெரிய நட்சத்திர பட்டாளமே நடித்துள்ளனர்.

இந்த நிலையில், 'கராத்தே பாபு' படத்தின் டீசரை படக்குழு வெளியிட்டுள்ளது. டீசரில் அனல்பறக்க அரசியல் வசனங்கள் இடம்பெற்று இருக்கின்றன. 'நீ தொழிலுக்காக அரசியல் பண்றவன், நான் அரசியலையே தொழிலா பண்றவன்' என்கிற வசனம் இடம்பெற்று இருக்கின்றன.

# கிஷோரின் 'மெல்லிசை' படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு



இயக்குநர் தீரவ் இயக்கத்தில் கிஷோர் கதாநாயகனாக நடித்துள்ள படம், 'மெல்லிசை'. தனன்யா, சுபத்ரா ராபர்ட், ஜார்ஜ் மரியன், ஹரிஷ் உத்தமன், ஜஸ்வந்த் மணிகண்டன் உள்பட பலர் நடித்துள்ளனர்.

இப்படத்தை 'வெப்பம் குளிர் மழை'யைத் தயாரித்த ஹேஷ்டேக் எஃப்டிஎஃப்எஸ் புரொடக் ஷன்ஸ் தயாரித்துள்ளது. இப்படம் அப்பா-மகள் இடையேயான உறவைப் பிரதிபலிக்கும் கதை கொண்டது. இதனிடையே, சில தினங்களுக்கு முன் 'மெல்லிசை' படத்தின் இரு பாடல்கள் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை பெற்றது.

இந்த நிலையில், 'மெல்லிசை' வருகிற 30-ந்தேதி முதல் திரையரங்குகளில் வெளியாகும் என படக்குழு தெரிவித்துள்ளது.

# பாகிஸ்தானுக்கு எதிரான கருத்து.. 'பார்டர் 2' படத்திற்கு 6 அரபு நாடுகள் தடை



இந்தியில் சன்னி தியோல் நடிப்பில் 'பார்டர் 2' திரைப்படம் நேற்று வெளியானது. 1997-ல் வெளியான பிளாக்பஸ்டர் படமான 'பார்டர்' படத்தின் இரண்டாம் பாகமாக இது உருவாகியுள்ளது.

இப்படத்தில் பாகிஸ்தானுக்கு எதிரான கருத்துக்கள் மற்றும் காட்சிகள் அதிகமாக இருப்பதாகக் கூறி பஹ்ரைன், குவைத், ஓமன், கத்தார், சவுதி அரேபியா, அஜிய அரபு அமீரகம் உள்ளிட்ட 6 மத்திய கிழக்கு அரபு நாடுகள் இப்படத்திற்கு தடை விதித்துள்ளது.

ஏற்கனவே இதே போன்ற காரணத்திற்காக கடந்த மாதம் வெளியான ரன்வீர் சிங் உடைய 'துரந்தர்' திரைப்படமும் வளைகுடா நாடுகளில் தடை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

வளைகுடா நாடுகளில் இந்தியத் திரைப்படங்களுக்கு மிகப்பெரிய சந்தை உள்ளது. படத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால், படத்தின் வசூல் ரீதியாகப் பாதிப்பு ஏற்படும் என்று கணிக்கப்படுகிறது.

தற்போது சென்சேஷன் நடிகையாக தென்னிந்திய சினிமாவில் வலம் வருகிறார் நடிகை மீனாட்சி சவுத்ரி. அவருக்கு பெரிய அளவில் ரசிகர் கூட்டமும் கிடைத்திருக்கிறது.

சமீபத்தில் அவர் Anaganaga Oka Raju என்ற தெலுங்கு படத்தில் நடித்து இருந்தார். அந்த படம் பொங்கலுக்கு ரிலீஸ் ஆகி 100 கோடி ரூபாய்க்கும் மேல் வசூலித்துள்ளது.

இந்நிலையில் மீனாட்சி சவுத்ரி சேலையில் அழகிய போஸ் கொடுத்து இருக்கும் புகைப்படங்களை வெளியிட்டு இருக்கிறார். அது ரசிகர்களை கவர்ந்து வருகிறது.



கமல்ஹாசனின் விக்ரம் படத்தில் முக்கிய ரோலில் நடித்து இருந்தவர் ஸ்வதிஷ்டா கிரிஷ்னன். அந்த படம் பெரிய ஹிட் என்றாலும் ஸ்வதிஷ்டாவுக்கு அதன் பின் தமிழில் பெரிய அளவில் வாய்ப்புகள் கிடைக்கவில்லை, அதனால் கன்னட சினிமா பக்கம் சென்றுவிட்டார்.

மேலும் எடையை குறைத்து ஸ்லிம் ஆகவும் அவர் மாறி இருக்கிறார்.

இந்நிலையில் தற்போது அவர் அழகிய உடையில் எடுத்திருக்கும் போட்டோஷூட் ஸ்டில்களை வெளியிட்டு இருக்கிறார்.

# வருகிற 30-ந்தேதி முதல் மிரட்ட வருகிறார் 'க்ராணி'



நகுல், பாக்யராஜ், நீது சந்திரா மற்றும் ஆஷ்னா ஜவேரி ஆகியோர் நடிப்பில் 2017-ம் ஆண்டு வெளியான 'பிரம்மா. காம்' படத்தை இயக்கிய விஜயகுமாரன் தற்போது இயக்கி உள்ள படம் 'க்ராணி' (Granny).

இப்படத்தில் பழம்பெரும் நடிகை வடிவுக்கரசி முதன்மை கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் சிங்கம் புலி, திலீபன், ஜீவி அபர்ணா, கஜராஜ், ஆனந்த் நாக் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

ஏ. மணிகண்டன் ஒளிப்பதிவு செய்திருக்கும் இப்படத்திற்கு சீ.டா. பாண்டியன் இசையமைத்துள்ளார். ஹாரர் திரில்லராக உருவாகி உள்ள இந்த திரைப்படத்தை விஜயா மேரி யுனிவர்சல் மீடியா'ஸ் நிறுவனம் சார்பில் தயாரிப்பாளர் விஜயா மேரி தயாரித்து உள்ளார். இப்படம் தொடர்பாக ஏற்கனவே வெளியான ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் ரசிகர்களின் கவனத்தை பெற்றது.

இந்த நிலையில், 'க்ராணி' படத்திற்கு U/A தணிக்கை சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இப்படம் வருகிற 30-ந்தேதி முதல் திரையரங்குகளில் வெளியாகும் என படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது.

# அனுபமா பரமேஸ்வரனின் 'லாக் டவுன்': புதிய ரிலீஸ் தேதி அறிவிப்பு!

நடிகை அனுபமா பரமேஸ்வரன் முதன்மை கதாபாத்திரத்தில் நடித்துள்ள படம் 'லாக் டவுன்'. அனுபமா பரமேஸ்வரனுடன் சார்லி, நிரோஷா, லிவிங்ஸ்டன், பிரியா வெங்கட் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். லைகா ப்ரொடக்ஷன்ஸ் தயாரித்துள்ள இந்தப் படத்தை அறிமுக இயக்குநர் ஏ.ஆர் ஜீவா இயக்கியுள்ளார்.

என்.ஆர்.ரகுநந்தன் மற்றும் சித்தார்த் விபின் ஆகியோர் இப்படத்திற்கு இசையமைத்துள்ளனர். கோவிட்-19 ஊரடங்கு காலத்தில் ஒரு பெண் எதிர்கொள்ளும் உளவியல் ரீதியான போராட்டங்களை அடிப்படையாகக் கொண்டு, உண்மைச் சம்பவங்களின் பின்னணியில் இப்படம் உருவாகியுள்ளது.

படத்தின் வெளியீடு பலமுறை தள்ளிவைக்கப்பட்ட பிறகு, தற்போது ஜனவரி 30-ம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.



# திரௌபதி 2- திரைவிமர்சனம்



திரௌபதி படத்தின் முதல் பாகத்தின் தொடர்ச்சியாக கதை தொடங்குகிறது. நாயகன் ரிச்சர்ட் தனது குழந்தையுடன் வாழ்ந்து வருகிறார். ஊரில் வக்பு வாரியம் மூலம் கோவில் நிலம் பறிபோகும் சூழ்நிலை ஏற்படுகிறது. இதற்காக ஊர் மக்களை ஒன்று திரட்டுகிறார். அப்போது வெளிநாட்டில் இருந்து ஊருக்கு வரும் நாயகி ரக்ஷனா, கோவிலை பராமரிக்க முன் வருகிறார். கோவிலுக்கு செல்லும் ரக்ஷனா உடம்பில் அமானுஷ்ய சக்தி ஊடுருவி வினோதமாக நடந்து கொள்கிறார்.

இறுதியில் ரக்ஷனா உடம்பில் ஊடுருவிய அமானுஷ்ய சக்தி யார்? எதற்காக வந்தார்? என்பதே படத்தின் மீதி கதை.

**நடிகர்கள்**

படத்தில் நாயகனாக நடித்திருக்கும் ரிச்சர்ட், கொடுத்த வேலையை செய்திருக்கிறார். நடிப்பதற்கான நிறைய வாய்ப்புகள் இருந்தும், அதை சரியாக பயன்படுத்தாமல் விட்டிருக்கிறார். வீரம், ஆக்ரோஷமான காட்சிகளில் கூடுதல் கவனம் செலுத்தி இருக்கலாம். நாயகியாக நடித்து இருக்கும் ரக்ஷனா, சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார். நட்டி நட்ராஜின் நடிப்பு திரைக்கதை ஓட்டத்திற்கு உதவி இருக்கிறது.

**இயக்கம்**

வல்லாள மகாராஜா கதையை மையமாக வைத்து படத்தை இயக்கியிருக்கிறார் இயக்குனர் மோகன் ஜி. 13 ஆம் நூற்றாண்டு காலத்தில் வாழ்ந்த வல்லாள மகாராஜாவிற்கும் சுல்தான் அரசர்களுக்கும் இடையே நடந்த உண்மை சம்பவத்தை அடிப்படையாக வைத்து இயக்கி இருக்கிறார். இந்து, இஸ்லாம் மதத்திற்கு இடையே நடந்த பிரச்சனையை திரைக்கதையாக வைத்து இருக்கிறார். படத்தில் அழுத்தமான மற்றும் சுவாரசியமான காட்சிகள் இல்லாதது வருத்தம்.

**இசை**

ஜிப்ரான் இசை படத்திற்கு பெரிய பலம்.

**ஒளிப்பதிவு**

பிலிப் ராஜ் சுந்தரின் ஒளிப்பதிவு சிறப்பு.

ரேட்டிங்-2/5

# “எனக்கு 6 மொழிகள் தெரியும்” - ராஷி கன்னா பெருமிதம்





நடிகை நிதி அகர்வால் தாராள கவர்ச்சியாக நடித்து ரசிகர்களை தொடர்ந்து கவர்ந்து வருகிறார். அவர் சமீபத்தில் ரிலீஸ் ஆகி இருந்த ராஜா சாப் படத்தில் நடித்து இருந்தார். பிரபாஸ் ஹீரோவாக நடித்து இருந்த அந்த படத்திற்கு பெரிய அளவில் வரவேற்பு கிடைக்கவில்லை.

நிதி அகர்வால் தற்போது சேலையிலும் தாராள கவர்ச்சி காட்டி போட்டோஷூட் எடுத்து இருக்கிறார். அந்த ஸ்டில்கள் ரசிகர்கள் மத்தியில் தற்போது வைரல் ஆகி இருக்கிறது.

நடிகை ராஷி கன்னா, தனக்கு 6 மொழிகள் தெரியும் என்று பெருமைபடக் கூறினார். தமிழில் ‘இமைக்கா நொடிகள்’, ‘அடங்கமறு’, ‘திருச்சிற்றம்பலம்’, ‘அரண்மனை 4’, ‘சர்தார்’ உள்பட சில படங்களில் நடித்துள்ள இந்தி நடிகையான ராஷி கன்னா, தெலுங்கு, மலையாளப் படங்களிலும் நடித்து வருகிறார். அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது:

மொழிகளைப் படிப்பது எனக்குப் பிடிக்கும். அதை ஒரு வேலையாகச் செய்து வருகிறேன். இந்தி, ஆங்கிலத்தை அடுத்து தெலுங்கு, தமிழ் மொழிகளை நன்றாகப் பேசுவேன். இப்போது பஞ்சாபியும் பேசக் கற்றுள்ளேன்.

கொஞ்சம் பெங்காலியும் தெரியும். ஒவ்வொரு மொழியிலும் சிறந்த கதாபாத்திரங்களில் நடிக்க வேண்டும் என்பது விருப்பம். அதனால் கதாபாத்திரங்கள்தான் முக்கியம். அங்கு மொழி இரண்டாம் பட்சம் தான் என்றாலும் பார்வையாளர்களுடன் தொடர்பு கொள்ள அம்மொழியைக் கற்றுக் கொள்வது அவசியம் என நினைக்கிறேன். அதனாலேயே எந்த மொழியில் நடித்தாலும் அதைக் கற்றுக்கொள்கிறேன்.

பவன் கல்யாண் ஹீரோவாக நடிக்கும் ‘உஸ்தாத் பகத்சிங்’ படத்தில் நடிக்க வாய்ப்பு வந்தபோது, கதை கேட்காமல் ஒப்புக்கொண்டேன். பவன் கல்யாணுக்காக ஏற்றுக்கொண்டேன். அதன் படப்பிடிப்பில் ஏராளமான ரசிகர்கள் ‘பவனிஷம்’ என்று எழுதியிருந்த டிஷர்ட் அணிந்துகொண்டு வந்தனர். அவருடைய தீவிரமான ரசிகர் பட்டாளத்தைக் கண்டு வியந்தேன்.

ஒவ்வொருவரும் சிறந்த படத்தைக் கொடுக்க வேண்டும் என்றுதான் சினிமாவில் உழைக்கிறார்கள். அனைவரும் இந்திய சினிமாவுக்கு சிறந்த பங்களிப்பை வழங்கி வருகிறார்கள். அதனால், பல்வேறு மொழிகளில் பணியாற்றினாலும் எந்த வித்தியாசத்தையும் நான் பார்க்கவில்லை. யாருடன் நடிக்க விரும்புகிறீர்கள் என்று பலரும் கேட்கிறார்கள். ரன்பீர் கபூர், விக்கி கவுஷல் ஆகியோர் வித்தியாசமான கதைகளைத் தேர்வு செய்து நடிக்கிறார்கள். அவர்களுடன் நடிக்க வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. இயக்குநரைப் பொறுத்தவரை சஞ்சய் லீலா பன்சாலி தனது படங்களில் பெண் கதாபாத்திரங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர். அவர் இயக்கத்தில், குறிப்பாக ஒரு பாடலிலாவது நடிக்க வேண்டும் என நினைக்கிறேன். இந்த லிஸ்ட்டில் ரிஷப் ஷெட்டி, ராஜமவுலி ஆகியோரும் இருக்கிறார்கள். இவ்வாறு ராஷி கன்னா தெரிவித்து உள்ளார்.



நடிகை கீர்த்தி சுரேஷ் தற்போது கைவசம் பல படங்கள் வைத்து இருக்கிறார். பிசியான நடிகையாக இருந்து வரும் அவர் அவ்வப்போது தனது புகைப்படங்களையும் வெளியிட்டு வருகிறார்.

சமீபத்தில் குடும்பத்துடன் பொங்கல் கொண்டாடிய புகைப்படங்களை அவர் வெளியிட அது வைரல் ஆகி இருந்தது.

தற்போது ட்ரெண்டி லுக்கில் கீர்த்தி சுரேஷ் எடுத்த லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்களை வெளியிட்டு இருக்கிறார்.

# சிவனின் மகிமை போற்றும் திருவாசகம்




தமிழ் ஆன்மிக இலக்கிய உலகின் உச்ச சாதனைகளில் ஒன்றாகக் கருதப்படும் திருவாசகம், இப்போது சமகால இசை வடிவில் புதிய உயிர் பெற்றுள்ளது. இசையமைப்பாளர் மற்றும் பாடகர் ஜி.வி. பிரகாஷ் குமார் குரலும், இசையும் இணைந்து உருவான திருவாசகத்தின் முதல் பாடல் தற்போது அதிகாரப்பூர்வமாக வெளியாகி, ஆன்மிக இசை ரசிகர்களிடையே ஆழ்ந்த மகிழ்ச்சி ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் பாடலின் ஒரு பகுதியை, சமீபத்தில் டெல்லியில் நடைபெற்ற பொங்கல் விழாவில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி முன்னிலையில் ஜி.வி. பிரகாஷ் இசை நிகழ்ச்சியாக வழங்கியபோது, அந்த மேடை முழுவதும் ஒரு தெய்வீக அமைதி சூழ்ந்ததாக பேசப்பட்டது. அந்த ஒரே நிகழ்விலேயே, திருவாசக இசை முயற்சியின் ஆழமும் ஆன்மிக வலிமையும் வெளிப்பட்டது.

ஜி.வி. பிரகாஷின் YouTube சேனலில் அதிகாரப்பூர்வமாக வெளியாகியுள்ள இந்த முதல் பாடல், சிவனின் மகிமையை போற்றும் சொற்களாலும், திருவாசகத்தின் ஆத்மார்த்தமான பக்தி உணர்வாலும் நிரம்பியுள்ளது.

ஆதியும் அந்தமும் இல்லாத சிவன், கருணை வடிவமாகவும், ருத்ர ரூபமாகவும், யோகி வடிவமாகவும் தோன்றும் பல்வேறு நிலைகளை இசை வழியாகக் காட்சிப்படுத்துகிறது. அந்த வரிகளில் ஒலிக்கும் சிவபக்தி, ஜி.வி. பிரகாஷின் குரலால் இன்னும் ஆழமாக மனதிற்குள் இறங்குகிறது. அவரது குரலில் இருக்கும் வலிமை, பக்தி, பணிவு அனைத்தும் சேர்ந்து, திருவாசகத்தின் தத்துவத்தை இசையின் உன்னத அனுபவமாக மாற்றுகிறது.

திரைப்பட இசை உலகில் தனித்த அடையாளம் பதித்த ஜி.வி. பிரகாஷ், பாரம்பரியமும் நவீனமும் இணையும் இசை பற்றிய தேடல் கொண்டவர். அந்த தேடலின் ஒரு முக்கியமான கட்டமாகவே இந்த திருவாசக இசை முயற்சி பார்க்கப்படுகிறது.

திருவாசகத்தை முழுமையான இசை ஆல்பமாக உருவாக்குவது ஜி.வி. பிரகாஷின் நீண்ட நாள் கனவு. அதன் முதல் படியாக வெளியாகியுள்ள இந்தப் பாடல், அந்த கனவு சரியான பாதையில் தொடங்கியிருப்பதை உறுதிப்படுத்துகிறது. சிவனின் பல வடிவங்களையும், மனித மனத்தின் தவிப்பையும், இறைவனிடம் நம்மை சரணடைய வைக்கும் இசை அனுபவமாக மாற்றியுள்ள இந்த முயற்சி, தமிழ் ஆன்மிக இசையில் ஒரு முக்கியமான அடையாளமாக நிலைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

ஜி.வி. பிரகாஷ் குரலில், சிவனின் மகிமையை ஒலிக்கும் இந்த திருவாசகத்தின் முதல் பாடல், கேட்பவரை ஒரு தெய்வீக பயணத்துக்கே அழைத்துச் செல்கிறது.






### என்ன?!

எல்லோரும் வித விதமான
கவிதைகளைப்படிக்கிறார்கள்!
ஆனால் நான் சொல்கிறேன்
அன்பே! உன்னை விட ஓர்
அழகான கவிதை இந்த
உலகத்தில் இருக்கிறதா
என்ன?!

### போதை

அப்படி என்னதானடி
வைத்திருக்கிறாய் உன்
அழகில்?! உன்னைப்
பார்க்கும் போதெல்லாம்
மட்டுமல்ல நினைக்கும் போதே
இப்படிப் போதையாகிறேனே!

### அன்பே!

அழகும் போதையும் மட்டுமல்ல
கா த லு ம் கூ ட ப்பீறிட்டு
வருமென்று உன்னைப்
பார்க்கும் போதெல்லாம்
உணர்கிறேன் அன்பே!

### பந்து

நினைத்த போதெல்லாம்
என்னைப்பந்தாடுகிறது
அன்பே உன் கா த ல்!

### கா த ல்

எல்லா மொழிகளிலும்
உன்னைக்கவிதையாக்க
வேண்டும் அன்பே!
அவ்வளவு கா த ல்
உன் மீதெனக்கு!

### பார்

முற்பகல் நான் சிரித்தேன்!
பிற்பகல் நீ சிரித்தாய்!
வள்ளுவர் வாக்கை
உண்மையாக்கி விட்டது
பார் அன்பே நம் கா த ல்!

### அதிசயம்!

அடேங்கப்பா....எத்தனைவித
விதமான
கவிதைகளை
வைத்திருக்கிறது
அன்பே
உன் கண்கள்!



**முத்து ஆனந்த்**
வேலூர்



போஸ்டர் ஒட்டினோம்
தோரணம் கட்டினோம்
சாமியை வேண்டி
தோப்புக்கரணம் போட்டோம்
தலைவர் வாழ்க! வாழ்க !
என்று கோஷமும் போட்டோம்
தலைவர் வாழ்ந்தார்
அவரின் தலைமுறை
வாழ்ந்தது நாங்கள் மட்டும்
வாழவே இல்லை குடியிருக்க
வீடும் இல்லை உழைத்து
வாழ நிலமும் இல்லை
எங்களை யாரும்
கண்டுக்வும்இல்லை
இருந்தாலும் பழமையை
மறக்காமல் வாழ்க
வாழ்க தலைவர் வாழ்க
என்று கூறிக் கொண்டே
இருப்போம் நாங்கள் தான்
வாக்களிக்கும் வாக்காளர்கள்
தோழமையுடன்

**ம.விஜயன்,**
கறம்பக்குடி

### விழிக்கொடை !

வந்தது பார்வை
பார்வையற்றவர்களுக்கு
விழிக்கொடை !

இறந்தப் பின்னும்
இறக்காத விழிகள்
விழிக்கொடை !

மண்ணுக்கும் தீயுக்கும்
வேண்டாம் மனிதர்களுக்கு
வேண்டும் விழிக்கொடை !

கரு விழிகள் அகற்றியது
இருள் விழிக்கொடை !

வாழ்கிறான் கொடையில்
வள்ளல் கர்ணன்
விழிக்கொடை !

உயிர்ப் பிரிந்தும் உயிர்ப்
பெற்றது விழிக்கொடை !

உடல் மாறியும் உயிர்
உள்ளது
விழிக்கொடை !

ஒளி ஏற்றியது வழி
காட்டியது
விழிக்கொடை !

துன்பம் துரத்தி இன்பம்
ஈந்தது விழிக்கொடை !

குறையை நீக்கி
நிறைவாக்கியது
விழிக்கொடை !

மரிக்கவில்லை மனிதம்
மனிதரில் புனிதம்
விழிக்கொடை !

வைத்தது முற்றுப்புள்ளி
மூடநம்பிக்கைக்கு
விழிக்கொடை !

செத்தப்பின்னும் சாகவில்லை
விழிக்கொடை !

இறப்பிலும் பிறப்பு
இறக்கத உறுப்பு
விழிக்கொடை !



மரணித்தும்
மரணிக்கவில்லை
முடிவிலும் இனிய
தொடக்கம்
விழிக்கொடை !

**கவிஞர் இரா .இரவி**

### *ஒன்று எங்கள் ஜாதியே. அன்பு ஒன்றே என் ஊதியம்

புனித நட்பும்!
தோள் கொடுக்க
வருகிறார்கள் – அதில்
தோழமை இருக்குமென
நம்பினேன்!
நலன் விசாரிக்கும் அன்பின்
கரங்களில் – என்
நம்பிக்கை மலருமெனக்
காத்திருந்தேன்!
ஆனால், ஆண்களிடம்
பேசினால் – அங்கே
"சாதி" எனும் சாக்கடை எட்டிப்
பார்க்கிறது! பெண்களிடம்
பேசினால் – அங்கே
"சம்பளம்" எனும் தராசு
எடை போடுகிறது! நட்பு
பாராட்டுவதற்கு சாதியும்
சம்பளமும் அவ்வளவு
முக்கியமா? வேஷங்களின்
முகத்திரை இதயங்களை
இணைக்க வேண்டிய
இடத்தில், இனத்தையும்
பணத்தையும்
தேடுகிறீர்களே!
மனிதத்தைப் பழகத்
தெரியாத உங்களுக்கு
"நண்பர்கள்" என்ற
பெயரெதற்கு? இதுவரை
பழகியவர்கள் எல்லாம்
இதயம் பார்த்தார்கள்
என்று நினைத்தேன்...
இல்லை, அவர்கள் என்
நிழலின் ஆழத்தை அளந்து
கொண்டிருந்தார்கள்!
ஒரு நம்பிக்கைக் கீற்று
சாதியும் கேட்காமல்,
ஊதியமும் பார்க்காமல்,
உயிரோடு கலந்த சில
ஆறுகள் – இன்றும்
என் வாழ்வில்
ஓடிக்கொண்டுதான்
இருக்கின்றன! தரம் பிரிக்கும்
இந்த மனிதப் பெருங்கடலில்,
தனித்து விடப்பட்ட
எனக்கு– அந்த உன்னத
நட்புகளே "சிறு துடுப்புகள்"!
அவர்களின் துணையோடு
மெல்லக் கடப்பேன்...
பிரிவினைகள் இல்லாத
ஒரு நேசத்தை நோக்கி!



**ஜனனி**
**அந்தோணி ராஜ்**
திருச்சிராப்பள்ளி

### சிக்கனம்

வாழ்க்கையின் செல்வச்
சாவி சிக்கனம். சிந்தனையை
செழிக்க வைக்க வழி
பிறக்கும். சிறிதில் மகிழ்ச்சி
காணும் குணமும்,
பெரிதில் நிம்மதியைத் தரும்
தருணம் அதற்குண்டு.
இன்று காக்கும் பழக்கம்
நாளை ஒளிரச் செய்யும்
வித்தை அது.
அவசரச் செலவை அடக்கும்
அறிவு அதற்குண்டு.
அமைதியான வாழ்வின்
அடையாளம் அது.சிக்கனம்
சேர்க்கும்
பழக்கம்மெதுவாக
வளரும்.
வெற்றியின்
பாதையில்,
அழகாகவிரியும்
வாழ்க்கை.
நிம்மதி நம்மைத் தேடி வரும்.



**உ.மு.ந.ராசன் கலாமணி**
கோயம்புத்தூர்.

### இறந்ததன் பின்னர்!

அறுசீர் மண்டிலம்.

இல்லார்க்கு இன்றே
கொடுத்திடு இறந்தபின்
எங்ஙன் கொடுப்பாய்!
நல்லோராய் அறத்தைச்
செய்திடு நாளும்தான்
பெயரினைப்பெறுவாய்!
செல்லாத காசே நம்முடல்
சேர்த்துவைத்தால் பயனென்
சொல்லிடு! எல்லோர்க்கும்
பிறப்பு ஒன்றுதான்
ஏற்றமாக அறத்தைப்
புரிந்திடு!

சேர்த்துவைத்த பணமும்
எதற்கடா சேர்ந்துள்ளோர்
எடுத்துப்போவரே!
ஈர்நெஞ்சம் கொண்டே
அறத்தினை ஈகையென்றே
நீயும கொடுத்திடு!
ஓர்ந்திடுவாய் யானே
சொல்வதை ஒண்மையாகக்
கொடையைச் செய்திடு!
நேர்ந்துநீயும்
பிறர்க்கே
நல்கிடு
நெஞ்சத்துள்
இஃதை
ஏற்றிடு!



**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



### கலப்பைக்கு வணக்கம்!

உலகக் கருவிகளில்
உன்னதக் கருவி கலப்பை.
கவிதையில் புனைகிறேன்
அதன் சிறப்பை.

வானம் பார்த்து
கடவுளுக்கு வணக்கம்.
வாழ்வை உயர்த்தும்
கலப்பைக்கும் வணக்கம்.

நடமாடும் தெய்வமாம்
உழவனின் இருப்பை,
மருத நிலத்தின் சிறப்பைச்
சொல்லும் கருவி கலப்பை.

மண்ணைக் கீறும்போது
மனிதம் பிறக்கும்.
மகசூல் வீட்டிற்குவர
தைத்திருநாள் சிறக்கும்.
தங்கத்தினும் உயர்ந்தது
இரும்பாலான கலப்பை.
தன்னலமின்றி உயர்த்துகிறது
மக்களின் பிழைப்பை.

கையுடன் கைசேர
அன்பு பரிமாறும்.
வயலுடன் கலப்பை சேர
வசந்தம் சேரும்.

வானம் நீரால்
வயலைத் தொடும்.
வாழக்கை முழுவதும்
வெளிச்சம் படும்.

விதை முளைத்து
இலை விட்டுப் பயிராகும்.
பூ விரிந்து கனியாகி
அனைவருக்கும் உயிராகும்.

கலப்பை எனும்
இரும்பு தெய்வமே!
உன்னால் மட்டும்தான்
உலகம் உய்யுமே!

வானம் பார்த்து
கடவுளுக்கு வணக்கம்.
வாழ்வை
உயர்த்தும்
கலப்பைக்கும்
வணக்கம்.



**மு.மகேந்திர பாபு,**
மதுரை

### "உண்மை உறங்குவதில்லை"

உண்மை உறங்குவதில்லை
மயக்க மருந்து கொடுத்துச்
சாய்த்தாலும் அது
நாக்கில் தீயாய் திரும்பும்!

நாடு உங்கள் சொத்து அல்ல,
ஆனால் நீங்களதை
அடகு வைத்தீர்கள்
அதிகார வட்டிக்காக!

சட்டம் உங்கள் கையில்
சுருட்டிய பத்திரம்!
தேவையெனில் நீதி!
இல்லையெனில் தூசி!

பசியை "புள்ளிவிவரம்"
என்றீர்கள்! சாவை
"தவிர்க்க முடியாதது"
என்றீர்கள்! திருட்டை
"நிர்வாகப் பிழை" என்றீர்கள்!

வாக்குறுதிகளை விற்று
வாக்குகளை வாங்கி
நாட்டின் முதுகெலும்பை
படிப்படியாக
நொறுக்கினீர்கள்!

கேள்வி கேட்டால்
தேச விரோதம்!
குரல் கொடுத்தால்
அமைதிக்குக் களங்கம்!

நீங்கள் கட்டிய ஒவ்வொரு
கோபுரமும் ஏழையின்
எலும்பில் உண்டானது!
அதிர்வில் குலுங்கும்
கோபத்தில் சிதறும்!

நீதியை வரிசையில் நிறுத்தி
காலம் இழுத்த ஒவ்வொரு
நாளும் ஒரு குற்றம்
அரசாணையால் தப்பியது!

நினைவில் வையுங்கள்
வரலாறு உங்களைப்
பேட்டி எடுக்காது,
விசாரணைதான் செய்யும்!

அப்போது பதவி இருக்காது!
பாதுகாப்பு இருக்காது!
கொடி இருக்காது!
ஒன்று மட்டுமிருக்கும்
உங்கள் தீவினைகளின்
எச்சம்!

உண்மை
உறங்காது
எரியும்!...
எரியும்!



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

### தந்திரம்

இடரில் தோன்றும்
மந்திரச் செயல் தன்னைக்
காக்கும் சில நேரம் பிறரை
வாட்டும்பல நேரம் சுயநல
உள்ளத்தின் சூழ்ச்சி


எட்டாக்கனிக்கு இதயம்
போடும் எந்திரத் திட்டம்
இல்லாததைக் காட்டி
இயல்பை மாற்றி
இன்பம் நாடும்

நண்பனைப் பகைவனாக்கும்
நச்சுக்குணம் நல்லவன்
போல் வேடமிட்டு நயவஞ்சக
குணம் மறைத்து
நடிப்போடு வாழ்ந்திடுவார்

நரியின் பண்பிற்குப்
பெயராகும் நலிந்த
மனத்திற்கு துணையாகும்
நல்ல குணம் மாற்றி
துயரம் தரும்

மனிதர் கொள்ளும்
தந்திரத்தால் மனதில் நிம்மதி
தொலைந்து போகும்
தந்திரம் கொண்ட
குணத்தாலே கொண்டது
என்ன சிந்திப்போம்

நல்ல குணத்தை நாம் ஏற்று
சிந்தையில் தூய்மை
கொண்டிடுவோம் தந்திரம்
என்றும் நிரந்தரமில்லை
தவறென்றே ஒதுக்கிடுவோம்
எண்ணம்
என்றும்
சிறந்திருந்தால்
ஏற்றம் என்றும்
தேடி வரும்.



**தமிழ்நிலா**

# நூல் விமர்சனம்

**முக்கோண முக்குளிப்பு**
**நூல் ஆசிரியர் : சந்திரகௌரி சிவபாலன் (ஜெர்மனி)**
**www.gowsy.com**
**நூல் விமர்சனம் : கவிஞர் இரா. இரவி**
**வெளியீட்டாளர் : ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம்,**
**பக்கங்கள் : 194.**




முகநூல் தோழி சந்திரகௌரி சிவபாலன் அவர்கள், நான் எழுதும் நூல் விமர்சனங்களை இணையத்தில் படித்து விட்டு என்னுடைய முகவரியை பெற்று இந்த நூலைஜெர்மனியில் இருந்து அனுப்பி இருந்தார்கள். புலம்பெயர்ந்த வலி மிகுந்த வாழ்க்கையிலும் தமிழுக்காக தமிழ் இலக்கியத்திற்கே நேரம், பணம் செலவழித்து நூல் வெளியிடுவது குறித்து முதல் பாராட்டு.

நூல் ஆசிரியர் சந்திரகௌரி சிவபாலன் அவர்கள் இந்நூலை பெற்றோருக்கு காணிக்கையாக்கி உள்ளார். அருமையான கவிதையும் எழுதியும் உள்ளார். அதில் இருந்து சில துளிகள்.

"என்னுள் வாசம் செய்து,
எனக்குள் ஓர் எழுத்தாளனை,
எனக்குள் ஒரு வைத்தியனை,
எனக்குள் ஓர் உழைப்பாளியை,
எனக்குள் ஒரு தாய்மையை,
எனக்குள் ஒரு பகுத்தறிவாளியை ;
எனக்குள் ஒரு சிந்தனைவாதியை
எனக்குள் நான் எல்லாமாய்
வாழ அச்சாணியானவர்களே!

இக்கவிதையின் நூலாசிரியரின் பன்முக ஆற்றலும் அதற்கு முழுமுதற் காரணமானவர்கள், பெற்றோர்கள் என்பதையும் உணர்த்தி உள்ளார்.

இது ஒரு வித்தியாசமான நூல் புலம்பெயர்ந்த தமிழர்கள் குறிப்பாக ஈழத் தமிழர்கள் பெரும்பாலும் ஆன்மிகவாதியாகவே இருப்பார்கள். சென்ற நாடெல்லாம் கோயில் கட்டி வணங்குவார்கள். இந்த நூல் ஆசிரியர் சந்திர கௌரி அவர்கள் பகுத்தறிவாளர். வித்தியாசமாக சிந்திந்து எழுதிய ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பு நூல் இது. 57 கட்டுரைகள் உள்ளன. பழைய பழக்கவழக்கங்களை கண்மூடி ஆதாரிக்காமல் ஏன்? எதற்கு? எப்படி? என ஆராய்ந்து நன்மை இருந்தால் ஏற்றுக் கொள்ளவும், தீமை என்றால் புறந்தள்ளவும் விழிப்புணர்வு விதைத்து உள்ளார், பாராட்டுகள்.

நூல் ஆசிரியர் சந்திரகௌரி சிவபாலன் ஒய்வுக்கு ஒய்வு தந்து விட்டு சிறப்பாகச் சிந்தித்துஎழுதிய கட்டுரைகளின்தொகுப்பு இலக்கியத்தில் ஈடுபட்டு முத்திரை பதித்து வருகிறார். முகநூலில், வலைப்பூவில், இணையத்தில் இவரது படைப்புகளைப் படித்தி இருக்கிறேன். அவற்றை மொத்தமாக நூலாகக் கண்டதில் மகிழ்ச்சி. ஒய்வுக்கு ஒய்வு தந்து விட்டு சிறப்பாகச் சிந்தித்துஎழுதிய கட்டுரைகளின் தொகுப்பு என்பதால் தமிழ் இலக்கியத்தை ஆழ்ந்து படித்து உள்ளார். பட்டப்படிப்பு தமிழ் இலக்கியம் பயின்று உள்ளார்.

மடை திறந்த வெள்ளமாக திருக்குறள் உள்ளிட்ட பல இலக்கியங்களை மேற்கோள் காட்டி கட்டுரைகள் வடித்து உள்ளார். வால்மீகி இராமாயணம் வரை படித்துள்ளார். நூலாசிரியரின் இரண்டாவது படைப்பு இந்நூல். *www.gowsy.com* என்ற இணையம் சொந்தமாகத் தொடங்கி எழுதி வரும் எழுத்தாளர். இந்நூலிற்கு திருமதி P.S.M. சார்லஸ், வைரமுத்து சிவராசா (பொன். புத்திசிகாமணி) ஆகியோர் சிறப்பான அணிந்துரை வழங்கி உள்ளனர், பாராட்டுகள்.

'நிலவும் யாழ் நூலும்' என்ற முதல் கட்டுரையில் யாழ் பற்றிய ஆய்வு மிக நன்று. யாழின் வகைகள் பற்றி பிரமிப்பில் ஆழ்த்தி உள்ளார்.

"7 தந்திகளுடைய செங்கோட்டி யாழும், 21 தந்திகளுடைய பேரியாழும் ஆகும். இவை பற்றிப் பத்துப்பாட்டு அழகாக எடுத்துக்காட்டுகின்றது. அதன்பின் சிலப்பதிகார காலத்தில் 14 தந்திகளுடைய சகட யாழும், 17 தந்திகளுடைய மகர யாழும் வழக்கத்திற்கு வந்தன. அதன்பின் 1 தந்தியுடைய மருத்துவ யாழும், 1000 தந்திகளுடைய நாரத பேரியாழும், 100 தந்திகளுடைய கீசயாழும், 9 தந்திகளுடைய தும்புரு யாழும் வழக்கத்திற்கு வந்தன.. அழகான வேலைப்பாடுகளுடனும், இரத்தினக்கற்கள் பதித்தும் இந்த யாழ் வகைகள் காணப்பட்டன எனவும், மேலும் அவை பற்றிய விளக்கங்களும் சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிலப்பதிகாரம், கல்லாடம் ஆகிய நூல்களில் தெளிவாகக் காணக் கூடியதாக இருக்கின்றது".

பதச்சோறாக இங்கு எழுதி உள்ளேன். இது போன்று பல ஆய்வுத் தகவல்கள் நூலில் உள்ளன. தகவல் சுரங்கமாக உள்ளது. கட்டுரைக்குப் பொருத்தமான படங்களும், நல்ல கவிதைகளும் நூலில் இருப்பதால் சற்று பெரிய நூலாக இருந்தாலும் படிப்பதற்கு ஆர்வமாக மிக நல்ல நடை.

'பகுத்தறிவு' என்ற கட்டுரையில் 'எப்பொருள்...' என்று தொடங்கும் இரண்டு திருக்குறளையும் மேற்கோள் காட்டி பகுத்தறிவு விதை விதைத்தது சிறப்பு. கட்டுரையின் தொடக்க வரிகள் இதோ! "ஏன் என்று கேட்காது விட்டால், மடையர் நாம் என்று காட்டி விடும் அறிவு. நாம் ஆறறிவு மனிதர்களா? இல்லையெனில் ஐந்தறிவு மிருகங்களா? என்று புரியாது போய்விடும்".

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், அறிஞர் சாக்ரடீஸ் ஆகியோர் அறிவுறுத்திய ஏன்? எதற்கு? எப்படி? எதனால் ? என்ற கேள்விகளைக் கேட்டதன் வெளிப்பாடே இந்தநூல் எனலாம். அந்த அளவிற்கு எதையும் பகுத்தறிவு கண்ணோட்டத்துடன் கட்டுரைகள் வடித்துள்ளார். பாராட்டுகள். அட்டைப்பட வடிவமைப்பு, உள் அச்சு யாவும் மிக நேர்த்தியாக உள்ளன. அச்சிட்ட அன்றா பிரிண்டேர்ஸ் (யாழ்ப்பாணம்) அச்சகத்திற்குப் பாராட்டுகள்.

தமிழ் இலக்கியங்களில் உள்ள பகுத்தறிவு கருத்துக்களை மேற்கோள் காட்டி உள்ளார். கட்டுரையின் முடிவில் முடிவுரை போல வடித்த வைர வரிகள் இதோ! "காலத்தைக் காண இலக்கியங்களைப் புரட்டாதீர் அங்கு! அங்கீகரிக்கப்படாத தலைவர்களும் தெய்வங் களாக்கப்பட்ட போலி மனிதர்களும் கோடீஸ்வரர்களால் குத்தகைக்கு எடுக்கப்பட்ட கோயில்களும் காலத்தை அலங்கோலமாயக் காட்டிக் கொண்டிருக்கும்". மகாகவி பாரதியார் பாடிய புதுமைப்பெண்ணாக நெஞ்சில் உரத்துடனும், நேர்மைத் திறத்துடனும், கவிதைகளுடன் கட்டுரைகள் வடித்துள்ளார். தமிழ்மொழியின் சிறப்பை, பெருமையை, அருமையை பல கட்டுரைகளில் வடித்துள்ளார். தாய்மொழியின் முக்கியத்துவத்தை விளக்கி உள்ளார்.

இலக்கிய இன்பம் என்ற கட்டுரையில் சங்கப்பாடல் தொடங்கி கவியரசு கண்ணதாசன் பாடல் வரை மேற்கோள் காட்டி வடித்த கட்டுரை நன்று. வள்ளுவர் பெருமையும், திருக்குறளும் கட்டுரையில் உலகப்பொதுமறையின் மேன்மையை உலகறிய வைத்துள்ளார்.

ஆடி அமாவாசை, திருநீறு, சந்தனம், சித்ரா பௌர்ணமி, தாலி இவற்றை அறிவியல் பார்வையுடன் பார்த்து தந்த விளக்கங்கள் அருமை. பாதணி பற்றியும் எழுதி உள்ளார். தமிழர்களின் பண்பாடான வணக்கம் செலுத்துதல் பற்றியும் எழுதி உள்ளார். சிறந்த சிந்தனையாளர் என்பதால் இன்றைய கல்விமுறை பற்றியும், மலர்களின் நேசம், எழுத்தாளனை மதிக்காத அவல நிலை பற்றியும், அறப்பணி ஆசிரியர் பணி அதற்க்கே உன்னை அர்ப்பணி "என்பார்கள். ஆசிரியர் கடமை பற்றியும் விரிவாக எழுதி உள்ளார்.

குழந்தை வளர்க்கும் விதம் பற்றி தாய்மொழியாம் தமிழ்மொழியைப் பேசத் தயங்குவது ஏன்? என்ற கேள்வி கேட்டு விளக்கம் தந்துள்ளார். மணம் முடிக்காத கன்னிகளுக்கு ஆலோசனை வழங்கி உள்ளார். திருமணம் என்ற கட்டுரையில் வாழ்வியல் சிந்தனை விதைத்து உள்ளார். தமிழர் திருநாளாம் பொங்கல் பற்றியும் கட்டுரை உள்ளது. குழந்தைகளின் உலகை படம்பிடித்துக் காட்டி உள்ளார். அவரது படைப்புகள் பற்றி அவரது வரிகளில் காண்போம்.

எனது படைப்புகள் எனது எழுதுகோல் செதுக்கிய சிற்பங்கள் கணினித் துணையுடன் பிரசவித்த குழந்தை இணையங்கள் அணைத்த வாரிசு இனிப்பு தடவாத எலுமிச்சை. எழுமிச்சை இனிப்பாக இல்லாவிட்டாலும் உடல் நலத்திற்கு நல்லது. இவருடைய எழுத்து சமுதாயத்திற்கு நன்மை தரும்.

நூல் ஆசிரியர் சந்திரகௌரி சிவபாலன் அவர்களுக்கு பாராட்டுகள் .புலப்பெயர்ந்து ஜெர்மனியில் வாழ்ந்த போதும் தமிழ் மீதும் தமிழர் மீதும் பற்றுக் கொண்டு சிந்தித்து பல கட்டுரைகள் வடித்து, அவற்றை தொகுத்து நூலாக வழங்கி, தமிழன்னைக்கு அணி சேர்த்து வருவதற்கு பாராட்டுகள் .தொடர்ந்து எழுதுங்கள். வாழ்த்துக்கள் .வாசகரை நெறிப்படுத்தும் மிக நல்ல நூல் .






## நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்

(தேசிய வலிமை நாள்)
நேரிசை வெண்பா!

வீரம் தியாகம்
விடுதலைப் போராட்டம்
தீரம் தெளிவுடன்
தேர்ந்தநல்...ஈரநெஞ்சப்
பங்களிப்பைத் தேசத்தின்
பாங்காம் வலிமையை
மங்காநே தாஜிமூலம்
மாண்பு!

நேதாஜி வீரத்தை
நேர்ந்தேதான்
வாழ்த்திடுவோம்
ஓதி வணங்கிடுவோம்



ஓர்ந்தேதான்
..நாதமாய்ப்
போற்றிடுவோம்
சந்திர
போஸை
மறவாமல்
சாற்றிடுவோம்
பாவாலே சார்ந்து!

முனைவர்
இராம.வேதநாயகம்
திருவண்ணாமலை.

---

வெண்தாமரையும்
செந்தாமரையாய்ச்
சிவந்துபோகக் கூடும்...
நீ சிந்துகிற வெட்கத்தில்!

பொன்னான உன்
அழகு கண்டால்
பொறாமையில்
வெளிறிப் போகும்...
செந்தாமரையும்
வெண்தாமரையாய்!

## பல்லவியே சரணம்!

நீ சாய்பல்லவியா...
எனைச்சாய்க்கும் பல்லவியா!
அழகிய பல்லவி நீ
உன் அழகிடம் சரணம் நான்!
கவிதைகளில் பல்லவியும்
உண்டு அனுபல்லவியும்



உண்டு...
அவற்றை
யெல்லாம்
விஞ்சிய தோர்
சாய்பல்லவி
யும் உண்டு!

சு. அருண்
பிரகாஷ்
இராமச்சந்திரபுரம்

---


## நிரந்தரமற்றது

நடக்கும் கால்களில்
எவ்வளவு வித்தியாசம்!

ஒன்று முன்னால் என்றால்
மற்றொன்று பின்னால்!
ஒருநாளும்
முன்னால் இருக்கும் கால்
கர்வப்படவும் இல்லை!

பின்னால் இருக்கும் கால்
அவமானப்படவும் இல்லை!

ஏனெனில்
அவைகளுக்கத் தான்
தெரியும்! நிமிடத்தில் நிலை
மாறும் என்று!
மனிதா
நிலைமாறும் உலகில்
வாழ்ந்துகொண்டிருக்கிறோம்!
நிரந்தரமற்றதை புரிந்து



வாழ்வோம்!
இன்புற்று
வாழலாம் !

ம.
இந்திராணி
திருச்சி
திருச்சி

---

## குடிகொண்ட ஊர்கள்.!

குடி கொண்ட ஊரெல்லாம்
என் கனவில்வந்து...
எமைப் பற்றி பாடென்று
சொன்னதடி.!
படிக்கின்றேன் ஒருபாடல்..
குடிகள் பற்றி.. பாராட்டுக்
கிடைக்குமோ தெரியாதேடி.!

ஆத்தங்குடி.. குன்றக்குடி
காரைக்குடி.. அத்தனையும்
செட்டிநாட்டில் இருக்குதடி!

கல்லக்குடி.. கறம்பக்குடி
கடையக்குடி.. சங்கீதம்
பாடுகின்ற அரியக்குடி..
தூத்துக்குடி உப்புக்கடல்
பொங்குமடி.. தூரத்திலே
இளையாங்குடி இருக்குதடி!

பாத்துக்கடி..
பக்கத்திலேஎட்டுக்குடி..
பழனியதன் பழையபெயர்
ஆவினங்குடி! கண்ணதாசன்
மனம் கவர்ந்த வேலங்குடி..
ஜேசுதாசின் குரு பிறந்த
செம்மங்குடி!

மால்குடி.. மஞ்சக்குடி..
மாங்குடி.. செந்நிறத்தை
குறிக்கும் ஊர் லால்குடி!
உழவாரப்படையென்ற..
உழவர்குடி.. உண்டி
கொடுத்தார் அவர்தானே
உயிரின் குடி!

இன்னுமுண்டு எத்தனையோ
குடிகளிங்கு.. குடியிருக்கும்
காரணப்பெயர் தமிழில் குடி!
குடிப்பெருமை மறவாது
பாதுகாப்போம்.! குடியின்
புகழ் பாட்டாக யாம்
படித்தோம்.!

வே.கல்யாண்குமார்.



## புத்தனுக்கு ஒரு முத்தம்!

நித்திரையில் வந்ததொரு
கனவல்ல! இது நிஜம்.
எனது கற்பனையுமல்ல.!

பத்துமாதக் குழந்தையாய்
நானிருந்த போது..
ஆசையினைத் துறந்தவனை
அணைத்து ஒரு
ஆசைமுத்தம் நான் தந்தேன்!
நிஜமாகத்தான்!

ஓர் இரவில்.. மனைவி
மக்கள் தூங்கும் போது..
அரண்மனையை
துறந்தவனே.. ஆசை
உனக்கு இல்லையென
சொல்லிக் கொண்டாலும்
நேசம் மறக்கவில்லை
நெஞ்சம்!

மூப்பு பிணி சாக்காடு..
முடியாத தொடர்கதை.!
போதிமரம் தந்த ஞானம்
புதிர்களின் விடுகதை!

கொல்லாமை இல்லாது
குமுகாயம் இருக்குமென
சொல்லாமல் கொள்ளாமல்
சன்யாசி ஆனவனே..
ஒப்புறவைத் தேடியெங்கும்
பிட்சைப் பாத்திரம்
ஏந்தியவனே..

அனுபவமே ஞானம் தர
அன்புநிழல் அடைந்தவனே..
துன்பக் கலையத்தை
தூசாக மதித்தவனே..
இன்பக் கனவுகள் இல்லாத
இதயத்தை.. என்புதோல்
போர்த்திய உடம்புக்குள்
பார்த்தவனே..

உனக்கு ஒரு முத்தம் தர
குழவியாய் நான் மாறினேன்..
உன் மூச்சுக்காற்றில்
அன்பின் வாசம்.. உன்
பாதங்களில் பவித்திரமான
அமைதி! இப்படியே..
யுகயுகமாய் குழந்தையாய்
இருந்திருந்தால்.. எப்போதும்
கிடைத்திருக்கும் புத்தனின்
முத்தம்.!

வே.கல்யாண்குமார்.

---

## என்னைப் புரிந்து கொண்டாயா....

இன்பக் கனவில் இளமை
நினைவில் இணைந்தோம்
இல்லறத்தில்

ஈடில்லா சுகத்தை
அனுபவித்து மகிழ்ந்தோம்.

ஏனோ தெரியவில்லை
என்னை விட்டு
பிரிந்து போனாய்

உனது ஞாபகங்கள்
ஒவ்வொரு நாளும்

தாலாட்டு பாடுதம்மா
இதயத்தில் நித்தமும்

எங்கே போகும் இந்தப்
பாதையெனத்

தெரியாமல் மயங்கித்
தயங்கி நிற்கிறேன்

வாழ்க்கை சூழலில்
வெற்றி கண்டிட

நீயில்லை என்றால்
ஏதுமில்லை என்று

தவிக்கும் என்னை
புரிந்து கொண்டாயா

காதலுடன் உறவாட
நீவேண்டும் என்னுயிரே.

## பொய்யான.... வாழ்க்கை...

பொய்யான வார்த்தை
புறம் பேசும் நிலை

மனிதர்கள் தங்கள்
மேலான உறவுகளிடம்

காட்டுதல் தவறான கருத்து
என்பதறிந்து

நடந்து செல்லும் வழிமுறை
நன்மை அளித்து இன்பம்
சேர்ப்பது சிறப்பு

பேச்சும் செயலும் புரிந்து
அறிந்து இயல்பான அன்புடன்
ஒல்கும் வழியாக

ஒவ்வொரு நாளும் நட்புடன்
ஏற்றம் பெற்று நலமுடன்
வாழ்வது வாழ்க்கை.

தாரா மதன்.

---



கதறல்களை
அளந்து விடுகிறது
அம்மாவின் கண்கள்...
சொல்லாவிட்டாலும்.

மடித் தலையணையில்
நிரப்பப்பட்டிருக்கிறது அம்மா
தரும் ஆறுதல்கள்.

ஒரு குண்டான் சாதத்தை
ஒரு கவளமாக்கி அதையும்
ஒன்றுமில்லாததாக்குகிறது
அம்மாவின் கை விரல்கள்.



ஹாலில்....
படத்தில்
இருக்கிறாள்
அம்மா...
வீடு முழுக்க
வியாபிக்கிறாள்
சுலபமாய்.

ரிஷபன்

---

## ஓரவஞ்சனை

கண்ணாடிக் குழல்களில்
ஆரஞ்சு சாறு நிரப்பப்பட்டது
போல் அழகான விரல்கள்

கண்ணாடியைத் திரவமாக்கி
பூசப்பட்டதுபோல்
பளபளக்கும் பாதங்கள்

ஆண்களுக்கான
தூண்டில்களாய் அழகான
விழிகளின் படபடக்கும்
இமைகள்

இனிய குரலில் பேசும்
சொற்களிலேயே



சங்கீதத்தின்
சாரம் என
சிலரை மட்டும்
படைத்த
பிரம்ம
தேவனே! இது
ஓரவஞ்சனை
தானே?

எஸ் .சந்திரசேகரன்
அமுதா செஞ்சிக்கோட்டை

---



## பொறுமையின் அருமை

"கருங்கல்" உளி மீது
கோபப்பட்டது ! என்னை
செதுக்குகிறாயே ஏன் ?

"உளி "சுத்தியல் மீது
கோபப்பட்டது ! என்னை
அடிக்கிறாயே ஏன் ?

"சுத்தியல்" சிற்பி மீது
கோபப்பட்டது ! என்னை
பிடித்து அடிக்கிறாயே ஏன்?

"சிற்பி" சொன்னார் எனக்கும்
பல வலிகள் அதில் கை,கால்,
உடம்பு ,கண் வலி அதில்
தலைவலியும் கூட
இப்படி அனைத்து
"வலியையும்" நான்
தாங்கியதால் ! "சிற்பி
"ஆனேன் !

நான் செதுக்கிய
கருங்கல்லே ! நீ
தாங்கியதால் ! "(சிற்பச்)
சிலை" ஆனாய் !

நான் செய்த வேலைக்கு
பெயர் "(சிற்பக்)கலை"

கருங்கல்லிலான



சிலையே !

இப்போது
உன்னோட
நிலைக்கு
மதிக்கமுடியாத!
"விலையே"

G.A.கோவிந்தராஜ்
(எ)சுரேஷ்குமார்
திருப்புவனம் புதூர்

---

## எதிரும்..புதிரும்.!


விதையிலிருந்து வேர்விட்டு
வெடித்தெழுந்ததும்...
இப்போது விரிந்த
விருட்சமாய் விழுதுப்பரப்பி
நிலைத்து நிற்பதும்..இதே
இடத்தில் தான்...ஆனாலும்
அடித்தூரில் அமர்ந்திருக்கும்
தெய்வரூபத்திடம்...'வாழும்
வீட்டுக்கும்..வளர்ந்த
வீட்டுக்குமாய் அல்லாட
விடு'வதாய் அங்கலாய்க்கும்
பெண்களை காணும்
போதெல்லாம்.. தனக்கந்த



கொடுப்பினை
இல்லையே
என. சுய
கழிவிரக்கம்
கொள்கிறது
ஆலமரம்.

க.குமாரகுரு
மயிலாடுதுறை

---



## தடங்காட்டி

தடங்காட்டி நம் பாதையில்
நிழலாய் விழுகிறது.
தடையைத் தகர்த்து
நாம் செல்லும் இடத்திற்குத்
துல்லியமாய் அழைத்துச்
செல்லும். சொற்பமாய் சில
சமயங்கள் தவிர.
யானைக்கும் அடி சறுக்கும்
அல்லவா? அப்போது மட்டும்
நம் நம்பிக்கை பறிபோய்
சோதனை ஏற்படும்.
நாம் பொறுமை காத்து
அறிவைத் தீட்டினால் வெற்றி
கிட்டும். செல்லவேண்டிய
இடத்தைத் துல்லியமாகக்
கண்டறிந்து மகிழ்வோம்.



மொத்தத்தில்
தடங்காட்டி
தோல்வி
அல்ல.
அது தான் நம்
வெற்றியின்
பயிற்சிக்கூடம்.

உ.மு.ந.ராசன் கலாமணி
கோயம்புத்தூர்.

---

## வல்லடி

ரகம் ரகமாய் மனிதர்கள்
பொறாமையின் விளைவு
கவிழ்க்க காலம் பார்ப்பர்
எட்டப்பன் உடனிருப்பான்

உறவுகளே துரோகியாவர்
மேலுக்கு உதவுகிற நடிப்பு
உள்ளே கவிழ்க்கும் கபடம்
எச்சரிக்கையாய் இருப்பீர்

சூழ்ச்சிகளே உச்சக் கட்டம்



கவனக்
குறைவு
நிலைகுலைவு
உன்னிப்பாய்
நோக்குவாய்
உன்னதமாய்
விளங்குவாய்

பி. பழனி, சென்னை.

---

## தீர்ப்பு கிடைத்தது....

நல்ல காலம் மௌனத்தை
உடைத்தது வெகு
காலம் காத்திருந்த பின்
நிம்மதி கிடைத்தது
வலிகள் மறைந்து போய்
சந்தோஷ ஒலி ஒலித்தது
இவையெல்லாம் வினாவுக்கு
நல்ல விடை கிடைத்ததால்
தானே... மனம் விரும்பிய
நீதி கிடைத்ததே
அச்சத்தின் மிச்சமும்
ஒடிப்போய் துச்சமாக
வாழ்க்கையை எதிர்
நோக்கும் துணிவு வந்ததே
இனி விழிகளில் ஆனந்த
கண்ணீர் தான் .
உண்மை மெதுவாக
வந்தாலும் மனம்
விரும்பியபடி வந்ததால்
திண்மை கிடைத்ததே
அனைத்து இருளும் நீங்கி
பிரகாச ஒளி வந்ததே
ஒவ்வொரு புதிய விடியலும்
உற்சாகமானதே



நல்ல தீர்ப்பு
கிடைத்ததால்
வெல்லமென
இனித்தது

உஷா
முத்துராமன்

---

## உழவன் நான்

சேற்றிலே கால் வைத்தேன்–
நீங்கள் சோற்றிலே கை
வைக்க வெயிலிலே கால்
கடுக்க நின்றேன் – நீங்கள்
நிழலிலே ஒய்வெடுக்க
நாள் முழுதும் உழைக்கிறேன்
உழைத்து உண்ணும்
இறுமாப்பு உள்ளோர்க்கு



உள்ளதிலே
பெருமை
உழைப்போர்க்கு
உழைப்புதான்
பெருமை

ஓம் குமார்
மதுரை

---

சிரிக்க சில நிமிடம் ,,
சிந்திக்க சில நிமிடம்..
அழ சில நிமிடம்..
அரவணைப்பில் சில நிமிடம்...
ஆறுதலில் சில நிமிடம்...
என் ஆயுளை உன் வாயிலாக
கொள்.. என் கனவுகளை
நினைவாக்க வேண்டும்..
நீ வேண்டும்.. என்
கற்பனையாக அல்ல என்
கனவுகளாகவும் அல்ல
என் காதலனாக .. என்
நண்பனாக.. என் தோழியாக..
என் உண்மையான ஒரு
உறவாக.. நாளும் நீ தேவை..
என் நாட்களுடன் தேவை..
எனக்கான நேரங்களை
உன்னோடு எடுத்துச் செல்..
உன் விழிகளின் கண்
மணியாக காத்திடு...
ஏன் இந்த பிதற்றல்
எதற்காக தேவையில்லாத
எண்ணங்களை
தேடுகின்றேன்..
தொலைத்து விட்டேன் ..
மீண்டும் தேடுகின்றேன்...
என் வாழ்வின் கனா
காலங்களை... ஆம்..
என் பிள்ளை பருவத்தின்
எல்லையை.. எடுத்துக்
கொடு என் பேனாவே..
உன்னை என் விரல்களில்
சுமக்கின்றேன்.. என்



மனச்சுமையை
உன்
எழுத்துக்களில்
மாய்த்து
விடு...
மீண்டும் மலர
துடிக்கும்
காகிதம்

கவிஞர் முனைவர்
நா மோகன
செல்வி மனோகரன்
கோபிசெட்டிபாளையம்

---

## கடும் பற்று

அளவுக்கு மீறிய பற்றினால்
நன்மை தீமைகளை ஆராயும்
திறன் குறையும்!

கடும் பற்று ஒரு நபர் அல்லது
கருத்தின் மீது அளவுக்கு
அதிகமாக ஈடுபாடு வைப்பது!

தான் விரும்பியதை இழக்க
நேரிடும் போது தீராதத்
துயரம் தரும்!

மற்றவற்றைக்கவனிக்க
விடாமல் ஒரு குறிப்பிட்ட
விஷயத்தில் முடக்கி விடும்!

எல்லாம் எனக்கே என்ற
பேராசை வந்து விடும்!

உள்ள நிம்மதியையும்
சேர்த்து தின்னும்!

பிடியில் சிக்கிய மணலாய்
ஒழுகும் வாழ்க்கை!

கடும் பற்று என்பது
ஒரு வகையில்
அடிமைத்தனம்!

கடும் பற்று என்பது
ஒருவகை வெறித்தனமான
ஈடுபாடு!
அதனை பிரிக்க நினைத்தால்
வலி ஏற்படும்!

இறைவனை பற்றிக்
கொள்வது மூலம்
பற்றுகளை விடமுடியும்!

ஒரு விஷயத்தை விடா
பிடியாக பிடித்துகொண்டு
இருப்பது!

தீய பழக்கங்களில்
விடுபடாமல் இருப்பது!
உலகில் உள்ள அனைத்தும்
நிலையற்றவை என
உணருங்கள்!

பலன் மீது பற்று வைக்காமல்
கடமையை செய்யுங்கள் !

கடும் பற்றுக்கு ஈகை
மனப்பான்மை இருந்தால்
சந்தோஷம் மகிழ்ச்சி
வாழ்வில் காணப்படும்!



தியானம் மூலம்
மனதைப் அமைதி
படுத்துங்கள்!

பெ.திருமுகம்
மணமேல்குடி

---

## கவிஞர் பார்வையில் ஆசிரியர்

மாதா பிதா குரு தெய்வம் என்றார்கள்
தெய்வத்திற்கும் மேலாக குருவை வைத்தார்கள்
இரண்டாம் பெற்றோர்கள் நம் ஆசிரியர்கள்
இருள் நீக்கிடும் ஒளிவிளக்கு ஆசிரியர்கள்
புயலைத் தென்றலாக்கும் வித்தை கற்றவர்கள் ஆசிரியர்கள்
புரியாததைப் புரிய வைக்கும் புனிதர்கள் ஆசிரியர்கள்
கற்களை சிலைகளாக செதுக்குவது ஆசிரியர்கள்
களிமண்களை பொம்மைகளாக வடிப்பது ஆசிரியர்கள்
முட்டாள்களையும் அறிவாளிகள் ஆக்குவது ஆசிரியர்கள்
முன்மாதிரியாக வாழ்ந்து காட்டுபவர்கள் ஆசிரியர்கள்
மாணவர்களை குழந்தைகளாக நினைப்பது ஆசிரியர்கள்
மாணவர்களை மாவீரர்களாக மாற்றுவது ஆசிரியர்கள்
மாணவர்களுக்கு தன்னம்பிக்கை விதைப்பது ஆசிரியர்கள்
மாணவர்களுக்கு எழுச்சியை ஊட்டுவது ஆசிரியர்கள்



ஆயிரம் விளக்குகளை ஏற்றும் அகல்விளக்கு
ஆசிரியர்கள்
அறிவொளி ஏற்றிடும் அற்புத ஒளி ஆசிரியர்கள்
இந்தியாவே போற்றும் நல்மனிதர் அப்துல்கலாம்
இனியவர் அவர் போற்றுவது ஆசிரியர்கள்
பணிவுகள் பயிற்றுவிப்பது ஆசிரியர்பணி
பணிகளில் சிறந்த பணி ஆசிரியப் பணி!

கவிஞர் இரா.இரவி

---

1. வளையாமல் நதிகள்
இல்லை வலிக்காமல்
வாழ்க்கை இல்லை

2.உண்மையான சொத்து
எதுவென்றால் நோய் இல்லாத
உடலும் வேதனை இல்லாத
மனமும் தான்

3.சிரிப்பை ஊர்
பெயர் தெரியாத யார்
வேண்டுமானாலும்
கொடுக்கலாம்கண்ணீரை
நெருங்கிய உறவுகள் மட்டுமே
கொடுக்க முடியும்

4. இலைகள் இல்லாத
மரங்கள் எதுவும் பட்டுப்
போவதில்லைகஷ்டங்கள்
நிறைந்த வாழ்க்கை எல்லாம்
கெட்டுப் போவதும் இல்லை

இலைகள் மீண்டும் துளிரும்
வாழ்க்கையும் மீண்டும்
ஒளிரும்

5. பிறகு என்ற வார்த்தை
வெற்றியின் மிகப்பெரிய எதிரி
இப்போதே என்பதே
வெற்றியாளர்களின் மந்திரம்

6. பார்க்க கண்களை
கொடுத்த ஆண்டவன்
பாராமல் இருப்பதற்கு
இமைகளையும் கொடுத்து
இருக்கிறான் இரண்டையும்



சரியான
சமயத்தில்
பயன்படுத்து
பவனே
புத்திசாலி

நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

---

## காத்திருக்கிறான் மனுநீதி சோழன்.....

பொய்மையும் புறங்கூறலும்
அன்றாட வாடிக்கை !
வன்மம் பன்முகமாய்
வடிவெடுத்து பதற்றமின்றி
குற்றங்களை பெற்றெடுத்தன!
கருவறை முதல்
இடுகாடுவரை
பயணத் தூரத்தை
வக்கிரங்களின் கரங்கள்
அபகரித்தன ! வழக்காடிகள்
தராசின் மேல்நின்று
திருத்தி எழுதும்
தீர்ப்புகளுக்காக
வாதிடுகின்றனர் !
நியாயங்கள் கழுகில்
ஏற்றப்பட்டதும் திரும்பிப்
பார்க்கிறேன்....... தன்னை
தேர்ச்சக்கரத்தில் ஏற்றும்படி
காத்திருக்கிறான் மனுநீதி
சோழன்..... நீதிமன்ற
வளாகத்தில் !

கா.ந.கல்யாணசுந்தரம்

---

## "இரத்த தானம்உயிர் தானம்"

ஒரு துளி இரத்தம்
உதிரும் போது வலி!
அதே துளி பிறருக்குள்
பாயும் போது ஒளி!

நீ கொடுக்கும் சிவப்புத்
திரவம் மீண்டும் ஊறும்
உன் உடலில்!

ஆனால் அதைப்பெறுபவனின்
மனம்மீண்டும் துளிர்ப்போமா?
எனக் காத்திருக்கும்!

அம்மாவின் மடி நாடும்
குழந்தை, மனைவியின் கைப்
பிடிக்கத் துடிக்கும் கணவன்,
மகனின் முகம் காண
கண் திறந்து வைத்திருக்கும்
தந்தை இவர்களுக்கெல்லாம்
நீயொரு நம்பிக்கை நாயகன்!

காசால் வாங்க
முடியாதது கருணை.
காலம் தந்த தெய்வமாய்
கண்ணெதிரில் மனிதன்!

“என் இரத்தம்” என்று
சொல்லும் முன் “என்
மனிதம்” என்று நினை!

ஒரு நாளில் நீ கொடுத்தது
ஒரு பை இரத்தமல்ல...
ஒரு குடும்பத்திற்கோர்
எதிர்காலம்!

இரத்த தானம் என்பதோர்
உயிர் தானம்...
உலகத்தில்
அதுவேஉயர்
தானம்!



முகில்
தினகரன்
கோயமுத்தூர்


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
TV NEWS
PRGI No. TNBIL/25/A1569
பேப்பர்பாய்
8122664699


VILAMBARAM
WANTED
10 SMART FEMALE
Telecallers
Job Type: Full-time
Education : Bachelor's degree
Freshers And Experience
Both can apply.
SEO & DIGITAL MARKETING
COMPANY SINCE 2020
Dont miss this opportunity
INTERESTED CANDIDATES CAN APPLY
+91 9337501889
+91 7789941009
Job @ CHENNAI
www.vilambaram.com


ரியல் எஸ்டேட்
ஏஜென்டுகள் தேவை
காஞ்சிபுரத்தில்
RERA & DTCP
APPROVED
PLOTS
விற்பனை செய்வதற்கு
மாதம் ரூ.5 லட்சம்
வரை சம்பாதிக்கலாம்
தொடர்புக்கு :
936345 9002


MLMPERFECT.COM
Start Any MLM
Software @
Rs.999/Month
+ EMI Available
EMI
Trusted by
1000+
satisfied clients
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337 / 7436914247
7684053514


Vilambaram
WE HELP YOU TO
BOOST
YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599


ஜப்பான்
7 நாட்கள் -மே-5
ADD - ON - S.KOREA
ஜன-15க்குள் முதலில் பெயர் பதிவு செய்யும்
10 நபர்களுக்கு ரூ.10000/- கட்டண சலுகை
வியட்நாம்
கம்போடியா
டாணாங் - பாணா - ஹனோய்
மார்ச் 15- 9 நாட்கள்
ஜன-15க்குள் முதலில் பெயர் பதிவு செய்யும்
10 நபர்களுக்கு ரூ.10000/- கட்டண சலுகை
துபாய்
பிரப்வரி -14 ம் தேதி, மார்ச் -24 ம் தேதி
தைப்பூசம்
மலேசியா 3-நாட்கள்
சுற்றுலா ஏற்பாடுகள்
25 வருடம்
சூரியா டிராவல்ஸ்
38-H, பர்கிட் ரோடு,
தி.நகர், சென்னை -17
98400 85622 / 9940396496


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


WANTED
NEWS COORDINATOR
NEWS
Salary
Rs. 25000
Plus
*Salary is not a constraint for right candidate
Responsibilities:
1. Appoint Reporters and Photographers in Tamil Nadu Districts and Taluks
2. Will coordinate with reporters and the news desk
3. Should have a minimum of six years of experience in a print and TV newsroom.
4. Will report to the editors at the Chennai office
PRGI No. TNBIL/25/A1569
வைகறையில்
பேப்பர்பாய்
Send CV to
padmamediapublications@gmail.com
Call
9337501889


WANTED
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling
Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling
Metal Roofing for
PEB Building in Tamil Nadu
ALP AEROFLEX INDIA PVT. LTD.
Contact details for
Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com


Just499
NEWS WEBSITE
PORTAL
We Provide Complete News
Website Portal Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com
BREAKING NEWS


Launch Your
Own Secure
Crypto MLM
Software Today!
@4999/- onwards
CALL: 98537 19337, 74369 14247
www.mlmperfect.com


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


WE'RE HIRING!
A Passionate Content Creator
CONTACT US! 94386 10756


CREATE YOUR PROFILE WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS


சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
சம்பிரதாய தாம்பூல பாக்கு
అజంతా
వక్క పలుకులు
సంప్రదాయ తాంబూళ వక్కపలుకులు
அனைவருக்கும்
தீபாவளி
நல்வாழ்த்துகள்!
அஜந்தா
பாக்குடன்
உங்கள்
தீபாவளியை
கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY
21, North Mada Street, Villivakkam, Chennai – 600 049
PH: 044 26171341 | email: ajanthasupari@hotmail.com


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 63804 53463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


ARG CONSTRUCTIONS
ARG
We Build Your
DREAM
HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


Just 499
Visite Our Website
JUST499.COM
All type Of your Website/App need at one place
Small Business website
E - commerce Website
Corporate Website
Enterprise website
Mobile App Development
contact us at
9337501889


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open
for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


999 SITE
ARE YOU
LOOKING FOR JOB
JOB
Websites
CONTACT/WHATSAPP-7789951009


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும்
ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
www. tamilnaduepaper.com
உள்ளூர் செய்திகள் முதல்
வெளிநாட்டு செய்திகள் வரை
துல்லியமாக தரும்
ஒரே நாளிதழ்
ஆனந்த
பாஸ்கர்
ANANDA BHASKAR
www.anandabhaskar.com
தினம் தோறும்
உள்ளூர், உலக செய்திகள் வரை
தரும் தரமான
நாளிதழ்
வைகறையில்
பேப்பர்பாய்
www.paperboy.biz


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just 499
www.just499.com


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை/
மணப்பெண்ணைப்
பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI
ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005


just499
REAL ESTATE
SOFTWARE
We Provide Complete Real
Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009
WhatsApp: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF SPECIAL OFFER
DISCOUNT
90 DAYS
MONEY BACK
GUARANTEE


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500
per day
Work From Home
Jobs
Rs 8000 - Rs 15000
per month
Ananda Bhaskar
9337501889
7789941009



# பல்சுவை களஞ்சியம்



## புதினா கீரையின் அற்புதங்கள்!



(புதினா ) ஒரு மருத்துவ மூலிகையாகும். ஆனால் நாம் உணவின் வாசனைக்காக மட்டும் சேர்த்து வருகிறோம். இதன் அற்புதமான மருத்துவ பயன்களை தெரிந்துகொண்டால் தொடர்ந்து பயன்படுத்தலாம்.

புதினா கீரையில் நீர்ச்சத்து, புரதம், கொழுப்பு, கார்போஹைடிரேட், நார்ப்பொருள் உலோகச்சத்துக்கள், பாஸ்பரஸ், கால்சியம், இரும்புச்சத்து, வைட்டமின் ஏ, நிக்கோட்டினிக் ஆசிட், ரிபோ மினேவின், தயாமின் ஆகிய சத்துக்களும் அடங்கியுள்ளன. சட்னி, ஜூஸ் எந்த விதத்தில் இதை பயன்படுத்தினாலும் இதன் பொது குணங்கள் மாறுவதில்லை என்பது இதன் முக்கிய அம்சம்.

அசைவ உணவு மற்றும் கொழுப்பு பொருட்களை எளிதில் ஜீரணமாக்குகிறது. இரத்தம் சுத்தமாகும். வாய் நாற்றம் அகலும். பசியை தூண்டும். மலச்சிக்கல் நீங்கும். பெண்களின் மாதவிலக்குப் பிரச்னைகள் தீர புதினாக்கீரை உதவுகின்றது.

ஆண்மைக் குறைவை நீக்கி முழுமையான இல்லற இன்பத்தை அனுபவிக்கவும் புதினாக் கீரை உதவுகின்றது. வயிற்றுப் புழுக்களை அழிக்க இது உதவுகின்றது. வாய்வுத் தொல்லையை அகற்றுகின்றது.

புதினாவை நீர் விடாமல் அரைத்து வெளி உபயோகமாகப் பற்றுப் போட்டால், தசைவலி, நரம்புவலி, தலைவலி, கீல்வாத வலிகளின் வேதனை குறையும். ஆஸ்துமாவையும் புதினாக் கீரை கட்டுப்படுத்துகின்றது.

மஞ்சள் காமாலை, வாதம், வறட்டு இருமல், சோகை, நரம்புத் தளர்ச்சி ஆகியவற்றுக்கும் புதினாக் கீரை சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது. முகப்பரு உள்ளவர்களும், வறண்ட சருமம் உள்ளவர்களும் இதன் சாறை முகத்தில் தடவி வர பலன் கிடைக்கும்.

புதினாவை நிழலில் காயவைத்து பாலில் சேர்த்து கொதிக்கவைத்து டீக்குப் பதிலாக அருந்தி வந்தால். உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும்.

## பீட்ரூட் ஒரு சர்வ நிவாரணி!



பீட்ரூட் காய், கீரை, ஜூஸ் என பீட்ரூடின் அனைத்து பாகங்களும் உடலுக்கு நன்மை பயக்கக் கூடியவை. பீட்ரூட் என்ற ஒற்றை உணவுப்பொருள் உடலின் பல்வேறு சிக்கல்களைத் தீர்க்க வல்லது ஆகும்.

பீட்ரூட்டை பிழிந்து சாறு எடுத்து தேனுடன் கலந்து சாப்பிட்டு வர அல்சர் குணமாகும்.

பீட்ரூட் சாறுடன் வெள்ளரிச்சாறு கலந்து சாப்பிட்டு வர சிறுநீரகங்களும் பித்தப்பையும் சுத்திகரிக்கப்படும்.

பீட்ரூட்டை நறுக்கி பச்சையாக எலுமிச்சை சாற்றில் தோய்த்து உண்டுவர இரத்தத்தில் சிவப்பணுக்கள் உற்பத்தியாகும்.

கல்லீரல் கோளாறுகளுக்கும் பீட்ரூட் ஒரு சிறந்த டானிக். பித்தம் அதிகமாகி அடிக்கடி பித்த வாந்தி எடுப்பவர்களுக்கு பீட்ரூட் ஒரு சிறந்த டானிக்.
பீட்ரூட் சாறு அஜீரணத்தை நீக்கி செரிமானத்தைக் கூட்டும்.

தலையில் ஏற்படும் வெள்ளை நிற பொடுகுகளைக் களைய பீட்ரூட் ஜூஸை பொடுகு இருக்கும் இடங்களில் மசாஜ் செய்து இரண்டு மணிநேரம் கழித்து சீயக்காய் பவுடர் கொண்டு தலை குளித்தால் நாளடைவில் பொடுகுகள் சரியாகும்.

புற்றுநோயினால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் நோயாளிகள், ஊட்டி பீட்ரூட் ஜூஸ் தினமும் 1 டம்ளர் பருகி வந்தால் புற்றுநோய் பரவுவது தடுக்கப்படும். ஆரம்ப நிலையிலுள்ள புற்றுநோயை குணமாக்கும் வல்லமை படைத்தது பீட்ரூட்.

பீட்ரூட் கீரையையும் மற்ற கீரைகள் போல் சமையல் செய்து சாப்பிட அல்சர், மஞ்சள் காமாலை போன்ற நோய்கள் சரியாகும்.

புதியதாக இரத்த அணுக்கள் உருவாக துணை புரிகிறது. பச்சைக் காய்கறிகள், கீரைகள், பழங்கள், பேரீச்சம் பழம், அத்திப்பழம் ஆகியவற்றை அதிக அளவு உண்டும், இரத்தத்தின் அளவு அதிகரிக்காமல் இருக்கும் பட்சத்தில் பீட்ரூட்டை வாரத்திற்கு நான்கு நாட்கள் உண்டால் நல்ல பலன் கிடைக்கும்.

## மீம்ஸ்









## விடுகதை




| | |
|---|---|
| 100க்கும் 105க்கும் நடுவுல என்ன இருக்கு? | 0 தான் இருக்கு. |
| ஒருத்தன் பொண்டாட்டி சமையல வாயில வைக்க முடியலன்னு பேங்க் மேனேஜர் கிட்ட போய் சொன்னாலும் ஏன்? | ஏன்னா நம்ம கஷ்டத்தை சொன்னாதான் லோன் கிடைக்கும்னு சொன்னாங்களாம். |
| ஒரு அம்மா எப்போதும் தூங்கும் போது கண்ணாடி போட்டுக்கிட்டு தான் தூங்குமாம் ஏன்? | என அப்பதான் தூக்கத்தில் வரும் கனவு தெளிவா தெரியுமாம். |
| ஒருத்தன் விநாயகர் படத்தின் மேல நடிகர் ராதிகா போட்டோ ஒட்டிட்டு போனானாம் ஏன்? | ஏன்னா அது சித்தி விநாயகர் ஆம். |
| ஒருத்தன் துணி கடைல போய் சேலை கேட்டான் அதுக்கு அவன் கோயில்ல போய் வாங்க என்று சொன்னாலும் ஏன்? | ஏன்னா அவங்க பூ சேரி கேட்டாங்களாம். |

## ஜோக்ஸ்



குருவே! நாணயத்தை சுண்டி விடறேன். பூ விழுந்தா நீங்க நினைச்சது நடக்கும்.
ஓ! தல விழுந்தா?
அப்டி நடக்க வாய்ப்பே இல்ல தலை ரசிகன்கிட்டேயே தலை விழுவார்ங்கறியா?
==================
டாக்டர், கர்ப்பிணிப்பெண் காலைல எந்திரிச்சதும் யார் முகத்துல விழிக்கறாங்களோ அவன் சாயல்ல பேபி பிறக்குமா?
அப்டி பார்த்தா பால்காரன் சாயல்ல தான் எல்லா குழந்தையும் இருக்கும்
=============




மிஸ்! உங்க கல்யாண ஆல்பத்துல 1000 க்கும் மேல செல்ஃபி ஃபோட்டோஸ் இருக்கே?
அவ்ங்க எல்லாம் என் முன்னாள் பாய் ஃபிரண்ட்ஸ்,
=================
அத்தான்! 9000 ரூபா குடுங்க. ஹேர் ஸ்ட்ரெய்ட்டனிங் பண்ணனும்.
போன மாசம் தானே கர்லிங் ஹேர் க்கு 15,000 வாங்குனே?பேசாம 2 சவுரி வாங்கிக்க
===================
டாக்டர்!டென்சன் ஆகாம இருக்கனும்னா என்ன பண்ணனும்?
9 வது சன் பிறந்ததும் கு க பண்ணிடனும்
=============
பார்டர்ல ஏதாவது பிரச்சனைன்னா உதவி செய்வீங்களா?
அந்த 100 சேலையை பிரிக்கக்கூட மாட்டோம். பார்டர் எப்டி இருந்தா என்ன?
==================
சாமியார்க்கு ஆங்கிலத்தில் என்ன?
GOD WHO
==============
மாப்ளை! அத்தையும் ,2 பொண்ணுங்களும் பஸ் ஸ்டாப் ல நிக்கறாங்க்ளாம். நீங்க பிக்கப் பண்ணி கூட்டிட்டு வர்றீங்களா?
ம்.கூட்டிட்டு வந்து பிக்கப் பண்ணிக்கறேன்
=============
டியர், எங்க வீட்ல ரொம்ப ஸ்ட்ரிக்ட்டு , வெளீல எல்லாம் அனுப்ப மாட்டாங்க
அப்டியா? எங்க வீட்ல விடுவாங்க. நான் உங்க வீட்டுக்கு வந்துடவா?
================
சமையல் குறிப்பாளினி சமந்தா = பலாப்பழத்தை காயா இருக்கும்போதே எடுத்து......
ஏம்மா சுத்தி வளைக்கறீங்க? பலாக்காய்னு சொன்னா புரியாதா?
===============
எதுக்கு சார் அடிக்கடி " 1000 RT " னு ட்வீட்டறீங்க?
1000 RT ட்வீட் நிறைய போட்டிருக்கேன், இதெல்லாம் நமக்கு சர்வசாதாரணம்னு சொல்ல
===============
முதல்வர் ,மக்கள் முதல்வர் என்ன வித்யாசம்?
முதல்வர் னா டம்மியா இருக்கனும். மக்கள் முதல்வர்னா ஜெயிலுக்குப்போய்ட்டு வந்த மம்மியா இருக்கனும்
====================
குருவே! ஐம்புலன்களையும் அடக்க என்ன வழி?
சொல்றேன். குருதட்சணையா ஸ்ரீ திவ்யா ,தீப்தி பிட்டை வாட்சப்பில் அனுப்பு!
====================
இதோ அதோ னு பாக்கப் போக படம் வர்றத்துக்குள்ள பலபேர் செத்திடுவாங்க போல?
படம் வந்ததும் நீங்க!

# ஜோதிடம் அறிவோம்





## திதி என்பது....



திதி என்பது சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையே உள்ள தூரம். அமாவாசை அன்று சூரியனும் சந்திரனும் சேர்ந்திருப்பார்கள். அதன் பின் சந்திரன் சூரியனிடம் இருந்து விலகி செல்வார். திதி எனப்படுவது பஞ்சாங்கத்தின் ஒரு முக்கிய பகுதியாகும்.

இந்துக்களின் தமிழ் நாட்காட்டியின்படி ஒவ்வொரு மாதமும் 30 திதிகள் கடைபிடிக்கப்படுகின்றன. அதில் இரண்டு பட்சங்கள் உள்ளன. அவை கிருஷ்ண பட்சம் அல்லது தேய்பிறை மற்றும் சுக்கில பட்சம் அல்லது வளர்பிறை ஆகும்.

வளர்பிறைத் திதிகள்

அமாவாசை நாளன்று சூரியனும் சந்திரனும் 0° (0 பாகையில்) காணப்படுவார்கள். அதனால் பூமியில் இருப்போருக்கு சந்திரனைப் பார்க்கமுடியாது. அதற்குப்பின் சந்திரன் தினமும் ஏறத்தாழ 12° சூரியனின் பார்வையில் இருந்து விலகிச் சென்று கொண்டிருக்கும். 15 ஆம் நாளான பௌர்ணமி அன்று சூரியனில் இருந்து 180° தூரத்தில் இருக்கும். அப்போது சூரியனின் முழுப்பார்வையும் சந்திரனின் மேல் விழுகின்றது. அதாவது இராசிச் சக்கரத்தில் சூரியனில் இருந்து 7-வது ராசியில் இருக்கும்.

## ரிஷ்ய சிருங்கர் வழிபட்ட ரிஷப வாகனன்!



சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளான சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருத்தலங்களுள் ஒன்று, திருவூர்.

திரு என்பது செல்வத்தைக் குறிக்கும். ஊர்ப்பெயரின் முன் திரு என்ற அடைமொழி அமைந்திருப்பதைப் பல இடங்களில் காணலாம். இங்கோ செல்வமே ஊரின் பெயராக இருப்பதால், ஒரு காலத்தில் செல்வச்செழிப்போடு இவ்வூர் திகழ்ந்திருப்பதை அறிய முடிகிறது.

இங்குள்ள லிங்கத்தை ராமாயணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மகரிஷி ரிஷ்ய சிருங்கர் பிரதிஷ்டை செய்து வழிபட்டார் என்பதால், அவர் ரிஷ்ய சிருங்கேசுவரர் என்று வழங்கப்பட்டு நாளடைவில் சிங்காண்டீசுவரர் என்று மருவி அழைக்கப்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பழைமையான இக்கோயில் சோழ, பல்லவ, பிற்காலப் பாண்டிய மற்றும் விஜயநகர மன்னர்களால் பராமரிக்கப்பட்ட பெருமையுடையது.

தெற்கு நோக்கிய மூன்று நிலை ராஜகோபுரம் வழியாக நுழைந்து கருவறையை அடைகிறோம்.

அங்கே மூலவர் சிங்காண்டீசுவரர் லிங்க ரூபமாய் அருள்கிறார். ஆவுடையார் சதுர வடிவமாகவும், பாணலிங்கம் எப்பொழுதும் குளிர்ச்சிப் பொருந்திய தன்மையுடையதாகவும் விளங்குகிறது. மூலவருக்கு வலப்புறம் பாலவிநாயகரும் இடப்புறம் பாலமுருகனும் அர்த்தமண்டபத்தில் வீற்றிருக்கின்றனர்.

அவர்களை தரிசித்து விட்டு தெற்கு நோக்கிய கருவறையில் அருள்பாலிக்கும் உத்பலாம்பாளை தரிசிக்கிறோம். சோழர் காலப் பாணியில் கலை அம்சத்துடன் அகிலாண்ட நாயகியாக அனுதினமும் நம்மை நாடிவரும் பக்தர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் தேவியாகக் காட்சி தருகிறாள் அன்னை.

மூலவர் சந்நிதிக்கு வெளியே மகாமண்டபத்தில் நடராஜர் } சிவகாமி அம்மை, நந்தீஸ்வரர் } சுயசாம்பிகை ஆகியோர் சுதைச்சிற்பங்களாகவும், அருகில் லிங்க வடிவில் ஆதி சிங்காண்டீசுவரரும் அருள்கிறார்கள். மகாமண்டபத்தின் மேற்புறத்தில் எண் கோண வடிவத்தை நான்குத் தூண்கள் தாங்கிக் கொண்டிருக்கின்றன.

ராமர் வழிபட்ட ராமேசுவரம், நாகர் வழிபட்ட திருநாகேஸ்வரம், யானை வழிபட்ட ஜம்புகேஸ்வரம் மற்றும் ஜம்பு மாமுனிவர் வழிபட்ட ஜம்புகேஸ்வரம் இவை அனைத்தும் ஒரே தூணில் புடைப்புச் சிற்பங்களாக நிறுத்தியும், மற்ற தூண்களில் மாணிக்கவாசகர், புத்தி பலம் தரும் ஆஞ்சநேயர், வீரஆஞ்சநேயர், மகாலட்சுமி, காமாட்சி அம்மை, விஷ்ணு முதலான தெய்வங்கள் சிவனை வணங்கும் காட்சிகளையும் படைத்துள்ளனர்.

இந்த நான்குத் தூண்களையும் வலம் வந்து வழிபட்டு மகாமண்டபத்தில் அமர்ந்து சிவனையும் சக்தியும் ஒருசேர தரிசித்து தியானித்தால் ஞானம் பெருகும், வாழ்வில் வளம் அனைத்தும் தேடி வரும், எண்ணிய எண்ணங்கள் நிறைவேறும் என்கின்றனர். மணிமண்டபத் தூண்களில் நர்த்தன விநாயகர், முருகன், துர்கை, துவாரபாலர்கள் காணப்படுகின்றனர்.

பிரகார வலம் வரும்போது அத்திமுக விநாயகரை தனி சந்நிதியில் தரிசிக்கிறோம். அடுத்து வள்ளி, தெய்வானை சமேத வள்ளல் குமரன் தனியாகக் கோயில் கொண்டுள்ளார். அர்த்தமண்டபத்தில் வள்ளலார் ராமலிங்க சுவாமிகள் கண்ணாடியில் ஆறுமுகக் கடவுளை தரிசித்த காட்சி அழகுற அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலைச் சுற்றியுள்ள மாடங்களில் அறுபடை வீடுகளில் அமைந்திருக்கும் மூலவர்களின் உருவங்கள் நிறுத்தப்பட்டு ஒரே நேரத்தில் அறுபடை வீடுகளையும் தரிசிக்கும் அற்புதமான காட்சியை நம் கண் முன்னே கொண்டு வந்துள்ளனர்.

கோயிலின் காவல் தெய்வம் சண்டிகேஸ்வரர். மூர்த்தி சிறியவர் என்றாலும், இவருடைய கீர்த்தி பெரியது. வடமேற்கு மூலையில் தலவிருட்சமான வில்வ மரத்தின் கீழ் விசேஷமாக அமைந்துள்ளார் நாகேஸ்வரர். அடுத்து சப்தகன்னியர், காலபைரவர், சூரியன், சந்திரன் ஆகியோரையும் தரிசிக்கலாம்.

மகா சிவராத்திரி உள்பட சிவாலயத்தில் நடைபெறும் அனைத்து விழாக்களும் இங்கு நடைபெறுகின்றன. பிரதோஷம் வெகு பிரசித்தம். திருமணம் கூடி வராத பெண்கள் பிரதோஷ நாளன்று கோயிலில் தரப்படும் கலசத்தை ஏந்தியவாறு மூன்று முறை ஆலய வலம் வந்து, அதை பிரதோஷ நந்திக்கு அபிஷேகம் செய்தால் அவர்களுக்கு விரைவில் திருமணம் கைகூடி வருகிறதாம். மேலும் குழந்தை பாக்கியம், கல்வி, வேலைவாய்ப்பு, செல்வ வளம், உடல் நலம் போன்றவற்றிற்காகவும் இந்த பிரார்த்தனை செய்யப்படுகிறது.

சென்னை பூந்தமல்லியில் இருந்து திருத்தணி செல்லும் பேருந்து மூலமாக அரன்வாயல் பேருந்து நிறுத்தத்தில் இறங்கி, திருவூரை அடையலாம். சென்னை } அரக்கோணம் ரயில் மார்க்கத்தில் செவ்வாய்பேட்டை ரயில் நிலையத்திற்கு அருகில் இத்தலம் உள்ளது.

## பிரம்மன் முடிவு செய்த சரஸ்வதி சிலை



ஸ்ரீவரசித்தி வல்லப விநாயகர் கோயிலில் சரஸ்வதி தேவிக்கென பிரத்யேகமாக தனி சந்நிதி அமைக்கப்பட்டிருக்கிறது. அண்மையில்தான் இதற்கான கும்பாபிஷேக விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது.

கோயிலுக்குள் நுழைந்ததுமே வலது பக்கமாக கிழக்குப் பார்த்தபடி அமைக்கப்பட்டுள்ள இந்தச் சந்நிதி, தனிக் கோயில் போன்றே கம்பீரத் தோற்றத்தில் மிளிர்கிறது. “”சரஸ்வதிதேவிக்கென இப்படிப்பட்டதொரு தனி சந்நிதியை அமைக்கும் எண்ணம் எப்படி வந்தது?” என்று ஆலயத்தின் அறங்காவலர்களிடம் கேட்டோம்.

“”இந்த ஆலயத்தில் வரசித்தி விநாயகரின் தேர் நிறுத்தப்பட்டிருந்த இடத்தில் வராஹிதேவிக்கென சிலை அமைக்க விரும்பி, சிருங்கேரி சாரதாபீட மகாசுவாமிகளிடம் நேரில் சென்று ஆலோசனை கேட்டோம். அவர் அந்த இடத்தில் சரஸ்வதி சிலையை பிரதிஷ்டை செய்ய அறிவுறுத்தினார். தேர் நிறுத்துவதற்கான இடத்தை, கலைநிகழ்ச்சிகள் நடைபெறும் மேடையருகே மாற்றினோம். முன்பு தேர் நிறுத்தி இருந்த இடத்தில் சரஸ்வதி சிலையை நிறுவ முடிவுசெய்தோம். என்னுடைய கல்குவாரியிலிருந்தே தரமான கல்லைத் தேர்ந்தெடுத்து சரஸ்வதி சிலை வடிக்கக் கொடுத்தோம். இதில் ஒரு சிறப்பு என்னவென்றால், சரஸ்வதி சிலை அமைக்க முடிவுசெய்தவுடன், அந்த இடத்தின் மேலே தகரத்தால் மூடப்பட்டிருந்த மேற்கூரையை நீக்கி செப்பனிட முடிவுசெய்தோம். அதை நீக்கியவுடன், எங்களுக்கு ஏற்பட்ட ஆச்சரியத்தை விவரிக்க வார்த்தைகளே கிடையாது. மேற்கூரையில் இரண்டு குதிரைகள் பூட்டிய தேரை பிரம்மா ஓட்டுவது போன்ற சிற்பம் இருக்கக் கண்டு சிலிர்த்துப்போனோம். தன் மனைவியான சரஸ்வதிதேவியின் சிலை, தனக்குக் கீழே அமையவேண்டும் என்பதை பிரம்மதேவனே முடிவுசெய்துவிட்டாரோ என்றுதான் நினைக்கத்தோன்றியது” என்று மெய்சிலிர்க்கக் கூறினர் ஸ்ரீவரசித்தி விநாயகர் சத்சங்கக் குழுத் தலைவர் என்.வி.எஸ். ராமகிருஷ்ணன், செயலர் ஜெ.வி. கே.ஸ்ரீதர் மற்றும் உறுப்பினர் கே.நாராயணன்.


அதற்குப் பிறகு ஏற்பாடுகள் துரிதமாக நடந்து, பத்தே மாதங்களில் சரஸ்வதி சிலை தயாராகி, ஆலயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. கையில் வீணையுடன் அமர்ந்த நிலையில், கருணை பொங்கும் முகத்துடன் காட்சியளிக்கிறார் சரஸ்வதிதேவி. மற்ற இரண்டு கரங்களிலும் ஜபமாலையும், புத்தகமும் இடம்பெற்றுள்ளன. அன்னையின் இதழ்களில் தவழும் புன்னகை பக்தர்களின் நெஞ்சங்களை நெகிழச் செய்கிறது.

சரஸ்வதிக்கென தனி சந்நிதி அமைக்க முடிவுசெய்தவுடன், ஆலய அறங்காவலர்களும், வரசித்தி விநாயகரை தம் உள்ளத்தில் வைத்து பூஜிக்கும் பக்தர்களும் தங்களால் இயன்ற நன்கொடைகளை அளித்திருக்கிறார்கள். அதனால் உடனடியாகப் பணிகள் நடந்தேறி, கும்பாபிஷேகமும் சிறப்பாக நிறைவடைந்திருக்கிறது. வரவிருக்கும் நவராத்திரி, சரஸ்வதிபூஜையின்போது சரஸ்வதிதேவிக்கு சிறப்பு பூஜைகளும், ஆராதனைகளும் நடைபெறவுள்ளன.

“”கல்வி, கலைகளில் சிறப்பிடம் பெறவிரும்பும் பக்தர்களும், மாணவர்களும் இந்த சரஸ்வதி தேவியை வணங்கி வழிபட்டு, வாழ்வில் அனைத்து நலன்களையும் பெறவேண்டும் என்பதுதான் எங்கள் விருப்பம்!” என்றார்,

## சூரியனுக்கு முக்கியத்துவம் அளிக்கும் அக்னி நட்சத்திரம்





தமிழ் பஞ்சாங்கப்படி சூரியன் மேஷ ராசியில் உலவும் வெயில் காலமாக அக்னி நட்சத்திரம் கருதப்படுகிறது. சூரியன் பரணி நட்சத்திரத்தின் மூன்றாம் பாதத்தில் தொடங்கி கார்த்திகை நட்சத்திரம் முழுவதும் வலம் வரும் காலகட்டமாக இது அமைகிறது. அறிவியல்படி சூரியன் ஒரு கோளாகக் கருதப்பட்டாலும், அதுவும் ஒரு விண்மீன் தான்.

அக்னி நட்சத்திர காலத்தில் சந்திரன், பூமி ஆகியன சூரியனுக்கு அருகில் இருக்கும். பரணி நட்சத்திரம் 3-ம் பாதத்துக்கு சூரியன் வரும்போது அதிக வெப்பத்தைத் தருகிறது. பிறகு படிப்படியாக நகர்ந்து கார்த்திகை நட்சத்திரத்தில் உலா வரும்.

## புண்ணியம் கிடைக்கனுமா? இதை பண்ணுங்க!

ஆடி அமாவாசையன்று மூதாதையர்களை வரவேற்கவேண்டும் எனவும், புரட்டாசி மகாளய அமாவாசையில் அவர்களை பூஜிக்கவேண்டும் என்றும், தை அமாவாசை அன்று மூதாதையர்களுக்கு விடை கொடுத்து அனுப்ப வேண்டும் என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன.

தை அமாவாசை என்பது சூரியனின் முக்கிய நாள். சூரியன் தை மாதத்தில் மகர ராசியில் சஞ்சரிக்கின்றார். சனியின் வீடான மகரத்தில் அவரது தந்தையான சூரியன் பிரவேசிக்கின்றார்.

சூரியனை பிதுர்காரகன் என்றும் சந்திரனை மாதுர்காரகன் என்றும் முன்னோர்கள் கூறுகின்றனர். சூரியனும், சந்திரனும் சனியின் வீட்டில் சஞ்சரிப்பதால் தை அமாவாசை சிறப்புக்கு உரியதாகிறது. இதை புண்ணிய காலம் என்பார்கள்.

உத்தராயண புண்ணிய காலமான தை அமாவாசை அன்று பித்ருக்கள் தங்களின் உலகத்துக்கு புறப்படுகிறார்கள். நம் வீடுகளுக்கு வந்து தங்கி இருந்து கிளம்பும் உறவினர்களை எப்படி நாம் நல்ல முறையில் வழி அனுப்பி வைப்போமோ, அப்படி பித்ருக்களுக்கு தை அமாவாசை நாளில் தர்ப்பணம் முதலிய வழிபாடுகளை செய்து அனுப்பி வைக்க வேண்டும்.

அவ்வாறு செய்தால் அவர்களின் ஆசீர்வாதம் நமக்கு பூரணமாகக் கிடைக்கும். தை அமாவாசை அன்று அவர்கள் மீண்டும் தங்களின் உலகத்துக்குப் புறப்படுவதாகக் கூறப்படுகிறது.-

நாம் இன்று அனுபவிக்கும் நற்பலன்களுக்கு காரணம் நம் முன்னோர்கள் சேர்த்து வைத்துள்ள புண்ணியம்தான். அதை நம் பிள்ளைகளும் பெற்று பயனடைய அதை தொடர வேண்டும்.





பெற்றோர்கள் செய்யும் நற்செயல்கள் பிள்ளைகளுக்கு கட்டாயம் போய் சேரும். எனவே நீத்தார் கடன் செய்வது என்பது மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய கடமை ஆகும்.

## எந்த திசையில் துளசி செடி நடவேண்டும்

துளசி செடி இந்து மதத்தில் புனிதமானது மற்றும் போற்றப்படுகிறது. துளசி லட்சுமி தேவியின் ஒரு வடிவமாகக் கருதப்படுகிறது. வீட்டில் துளசி செடியை நடுவது மகிழ்ச்சி, செழிப்பு மற்றும் நிதி நல்வாழ்வைத் தரும் என்று நம்பப்படுகிறது.

வீட்டின் பிரதான வாசலில் துளசி செடியை நடலாமா?

வாஸ்து சாஸ்திரத்தின்படி, ஒரு வீட்டின் பிரதான வாசல் என்பது மகிழ்ச்சி, செழிப்பு மற்றும் தெய்வங்கள் வீட்டிற்குள் நுழையும் இடமாகும். அத்தகைய சூழ்நிலையில், நேர்மறை ஆற்றலை கடத்தும் பொருட்களை நம் வீட்டின் பிரதான நுழைவாயிலில் வைக்க வேண்டும். துளசி செடி இந்து மதத்தில் புனிதமானது மற்றும் போற்றப்படுகிறது. துளசி லட்சுமி தேவியின் ஒரு வடிவமாகக் கருதப்படுகிறது. வீட்டில் துளசி செடியை நடுவது மகிழ்ச்சி, செழிப்பு மற்றும் நிதி நல்வாழ்வைத் தரும் என்று நம்பப்படுகிறது. வீட்டின் பிரதான நுழைவாயிலில் துளசி செடியை நடலாமா என்று மக்கள் அடிக்கடி யோசிப்பார்கள். வாஸ்து சாஸ்திரம் என்ன சொல்கிறது என்று தெரிந்து கொள்ளுங்கள்.

**துளசி தொடர்பான வாஸ்து வைத்தியம்**

பிரதான நுழைவாயிலில் ஒரு துளசி செடியையும் நடலாம். ஆனால் வீட்டின் பிரதான நுழைவாயிலில் காற்று, சூரிய ஒளி மற்றும் தண்ணீர் இல்லையென்றால், துளசி செடி கூட வாடிவிடும். எனவே, அத்தகைய வீடுகளின் பால்கனிகளில் துளசி செடிகளை நட வேண்டும். வாஸ்து சாஸ்திரத்தின்படி, துளசியை வீட்டின் முற்றத்திலும் நடலாம்.

**லட்சுமி தேவி மகிழ்ச்சியடைகிறாள்**

வீட்டில் துளசி செடியை வைத்திருப்பது வாழ்க்கையில் மகிழ்ச்சி, அமைதி மற்றும் செழிப்பைத் தரும் என்று நம்பப்படுகிறது. துளசி செடி வீட்டில் நல்ல அதிர்ஷ்டத்தை அதிகரிக்கிறது, அதனால்தான் இது ஸ்ரீ துளசி என்று அழைக்கப்படுகிறது. பிரதான நுழைவாயிலில் துளசி செடி இருந்தால், லட்சுமி தேவி மகிழ்ச்சி அடைவாள்.

**எந்த திசையில் துளசி செடி நடவேண்டும்**

இந்த திசையில் துளசியை நடுவது மங்களகரமானதாகக் கருதப்படுகிறது வாஸ்து சாஸ்திரத்தின்படி, துளசியை பால்கனியின் வடக்கு அல்லது கிழக்கு திசையில் நட வேண்டும். வடக்கு திசை குபேர பகவானின் வசிப்பிடமாகக் கருதப்படுகிறது. இந்த திசையில் துளசி செடியை நடுவது லட்சுமி தேவியைப் பிரியப்படுத்தும் என்று நம்பப்படுகிறது.



வாஸ்து சாஸ்திரத்தின்படி, வீட்டின் தெற்கு திசையில் துளசி செடிகளை நடக்கூடாது. இந்த திசை முன்னோர்களின் வசிப்பிடமாகக் கருதப்படுகிறது. இந்த திசையில் துளசி செடியை நடுவதால் லட்சுமி தேவி கோபமடைவதாக நம்பப்படுகிறது.

**துளசி நடுவதற்கு உகந்த நாள் எது?**

வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் துளசி செடிகளை நடுவது மிகவும் மங்களகரமானதாகக் கருதப்படுகிறது. வியாழக்கிழமை விஷ்ணுவுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது, மேலும் வெள்ளிக்கிழமை லட்சுமி தேவியின் மிகவும் விருப்பமான நாளாகக் கருதப்படுகிறது.

**பொறுப்புத் துறப்பு:**

இந்தக் கட்டுரையில் உள்ள எந்தவொரு தகவல்/பொருள்/ கணக்கீட்டின் துல்லியம் அல்லது நம்பகத்தன்மைக்கு எந்த விதமான உத்தரவாதமும் இல்லை. இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் பல்வேறு ஊடகங்கள் / ஜோதிடர்கள் / பஞ்சாங்கங்கள் / சொற்பொழிவுகள் / நம்பிக்கைகள் / வேதங்களில் இருந்து சேகரித்து உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எங்கள் நோக்கம் தகவல்களை வழங்குவது மட்டுமே. இதிலிருந்து வெறும் தகவல்களை மட்டுமே பயனாளர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். மற்றபடி இதிலிருந்து பயன்படுத்திக்கொள்வது பயனாளரின் பொறுப்பாகும்.

## நாட்டியாஞ்சலி வைபவத்துடன் ஊஞ்சல் தாலாட்டு வைபவம்...!



**வந்தவாசி, ஜன 25:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தென்னாங்கூர் ஸ்ரீ பாண்டுரங்க ருக்குமாயி திருக்கோயிலின் 30 ஆம் ஆண்டை முன்னிட்டு மூல மூர்த்திகளுக்கு விசேஷ பூஜைகள் நடைபெற்றது.


உற்சவ மூர்த்திகள் சிறப்பு அலங்காரத்தில் ஊஞ்சல் சேவை வைபவம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

பிறகு மகா தீபாராதனை நடந்தேறியது. இந்தவைபவத்தில் நடன கலைஞர்கள் பங்கேற்று பல்வேறு பரதநாட்டிய நிகழ்வுகளை நிகழ்த்தினர்.

மேலும் பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

## கலசப்பாக்கம் ஆற்றுத் திருவிழா நடைபெறும் இடத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் ஆய்வு



திருவண்ணாமலை மாவட்டம் கலசப்பாக்கம் செய்யாற்றில் ஆற்று திருவிழா நடைபெறும் இடத்தினை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு.க. தர்ப்பகராஜ் இ. ஆ.ப. அவர்கள் கலசப்பாக்கம் ஆற்று திருவிழா நடைபெறும் இடத்தினை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து துறையை சார்ந்த அலுவலர்களுக்கு மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு பணிகள் குறித்து அறிவுறுத்தினார்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## திருப்பூரில் புத்தக திருவிழா



திருப்பூரில் புத்தக திருவிழாவை மேயர் தினேஷ்குமார் முன்னிலையில் கலெக்டர் மனிஷ்நாரணவரே துவக்கி வைத்தார்.

## பேரணாம்பட்டில் தேர்தல் நடைபெறும் இடங்களை ஆய்வு மேற்கொண்ட ஆர். டி. ஓ ., சுபலட்சுமி !



**வேலூர்,ஜன.25:**

வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டில் குடியாத்தம் சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் நடைபெறும் இடங்களை குடியாத்தம் கோட்டாட்சியர் சுபலட்சுமி நேரில் ஆய்வு செய்தார்.

அவர் என். சிவராஜ் நகர், எம்ஜிஆர் நகர் ,பேரணாம்பட்டு உள்ளிட்ட பல்வேறு இடங்களில் ஆய்வு மேற்கொண்டார்.

அவருடன் பேரணாம்பட்டு தாசில்தார் ராஜ்குமார், குடியாத்தம் தாசில்தார் பழனி, நகராட்சி அதிகாரிகள், கிராம உதவியாளர்கள் குப்புசாமி, அறிவழகன் உள்ளிட்ட பலர் சென்றிருந்தனர்.

## ஜியோ அமைப்பின் நிர்வாகிகள் முதலமைச்சரை சந்தித்தனர்




சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் ஸ்டாலினை நேற்று ஜாக்டோ - ஜியோ அமைப்பின் சார்பில் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்றச் சங்கம், தொடக்கப் பள்ளி ஆசிரியர் சங்கம், தமிழ்நாடு தமிழ் ஆசிரியர் சங்கம் ஆகியவற்றின் நிர்வாகிகள் சந்தித்தனர். பகுதிநேர ஆசிரியர்களின் முக்கியக் கோரிக்கையான நிரந்தரப் பணி நியமனத்திற்கு உதவிடும் வகையில் புதிய அறிவிப்பை வெளியிட்டதற்காகவும், சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு பல்வேறு புதிய அறிவிப்புகளை வெளியிட்டதற்காகவும் நன்றி தெரிவித்தனர். அப்போது அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி உடன் இருந்தார்.

## ஓபிஎஸ் ஆதரவாளர் அதிமுகவில் இணைந்தார்



முன்னாள் முதல்வர் ஓபிஎஸ் ஆதரவாளரான தர்மர் எம்.பி., நேற்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை சந்தித்து, தன்னை அதிமுகவில் இணைத்துக் கொண்டார்

## வாக்காளர் விழிப்புணர்வு பேரணி




பெரம்பலூரில் வாக்காளர் விழிப்புணர்வு பேரணியினை கலெக்டர் மிருணாளினி தொடங்கி வைத்தார்.

## வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்



**திருவண்ணாமலை, ஜன.25:**

திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலக கூட்டரங்கில் இந்திய தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட சிறப்பு மேற்பார்வையாளர் திரு. மகாபீர் பிரசாத், ஐஆர்எஸ், அவர்கள், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ் இ. ஆ.ப. அவர்கள் முன்னிலையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 தொடர்பாக நடைபெற்று வரும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## சிறப்பு தீவிர திருத்தப் பணி



சேலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை சிறப்பு பார்வையாளர் குல்தீப் நாராயணன், மாவட்ட தேர்தல் அலுவலர் பிருந்தாதேவி பார்வையிட்டனர்.

## கல்லூரி மாணவியருக்கான தடகள போட்டிகள்



முதலமைச்சர் ஸ்டாலின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு, கரூர் மாவட்ட திமுக சார்பில் மாவட்ட அளவிலான பள்ளி மற்றும் கல்லூரி மாணவியருக்கான தடகள விளையாட்டு போட்டிகள், நேற்று நடந்தது.

## மதி அனுபவ அங்காடி



கோவை செம்மொழி பூங்கா வளாகத்தில் மகளிர் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள "மதி அனுபவ அங்காடியினை" கலெக்டர் பவன்குமார், கணபதி ராஜ்குமார் எம்.பி., ஆகியோர் திறந்து வைத்து, முதல் விற்பனையினை துவக்கி வைத்தனர். மேயர் ரங்கநாயகி, ஆணையாளர் சிவகுருபிரபாகரன் மற்றும் பலர் பங்கேற்றனர்.

## நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம்



கோவை கவுண்டம்பாளையத்தில் நடந்த நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமினை கணபதி ப.ராஜ்குமார் எம்.பி., மேயர் ரங்கநாயகி பார்வையிட்டனர்.

## முதல் தலைமுறை வாக்காளர்களுக்கு அஞ்சல்அட்டை அனுப்பும் நிகழ்வு



தேசிய வாக்காளர் தினத்தையொட்டி கோவையில் முதல் தலைமுறை வாக்காளர்களுக்கு அஞ்சல்அட்டை அனுப்பும் நிகழ்வை கலெக்டர் பவன்குமார் துவக்கி வைத்தார்.

## உலகின் முதல் பாலத்தில் முதல் தளம் அமைக்கும் பணி அமைச்சர் எ.வ. வேலு நேரில் ஆய்வு செய்தார்



சென்னை தேனாம்பேட்டைசைதாப்பேட்டை உயர்மட்டச் சாலை திட்டத்தில் மெட்ரோ சுரங்கப்பாதையின் மேல் அமைக்கப்படும் உலகின் முதல் பாலத்தில் முதல் தளம் அமைக்கும் பணி தொடங்கப்பட்டு உள்ளது. இதை அமைச்சர் எ.வ. வேலு நேரில் ஆய்வு செய்தார்.

## தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியர்கள், பணியாளர்களுக்கு நல வாரிய அட்டை



திண்டுக்கல்லில் நடந்த சிறுபான்மையினர் உரிமைகள் தின விழாவில் தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியர்கள், பணியாளர்களுக்கு நல வாரிய அட்டைகளை கலெக்டர் சரவணன் வழங்கினார்.

## TEXPO -2026 தொழில் கண்காட்சி அறிமுக விழா



திருமுடிவாக்கம் சிட்கோ தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தால் வரும் ஜூலை மாதம் 16, 17, 18 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ள TEXPO -2026 தொழில் கண்காட்சி அறிமுக விழாவில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று கலந்து கொண்டார்.

## நாகர்கோவில் மாநகராட்சியில் வளர்ச்சிப் பணி



நாகர்கோவில் மாநகராட்சியில் நேற்று பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேயர் மகேஷ் துவக்கி வைத்தார்.

## நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாம்



நாகர்கோவில் அருகே தாழக்குடியில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாம் நேற்று நடந்தது. மருத்துவர் கார்த்திக் தலைமையிலான மருத்துவக் குழு சிகிச்சை அளித்தது.

## இந்துஸ்தான் வர்த்தக சபை ஆண்டு விழா




சென்னையில் நடைபெற்ற இந்துஸ்தான் வர்த்தக சபை ஆண்டு விழாவில், அமைச்சர் மனோதங்கராஜ் குத்துவிளக்கு ஏற்றி விழாவைத் தொடங்கி வைத்துப் பேசினார்.

## ஐஎன்ஏ வீரர்களை கவர்னர் ரவி கவுரவித்தார்




நேதாஜி பிறந்தநாள் விழாவில் ஐஎன்ஏ வீரர்களை கவர்னர் ரவி கவுரவித்தார்.

## புதிதாக கட்டப்பட்ட தற்காலிக பேருந்து முனையம்




சென்னை பிராட்வே பேருந்து முனையத்திற்கு மாற்றாக, தீவுத்திடலில் ரூ.8.44 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட தற்காலிக பேருந்து முனையத்தினை அமைச்சர்கள் சிவசங்கர், சேகர்பாபு திறந்து வைத்தனர். மேயர் பிரியா உடன் உள்ளார்.




## வாடிப்பட்டியில் கபாடி வாலிபால் விளையாட்டு போட்டிகள் தாசில்தார் ராமச்சந்திரன் தொடக்கி வைத்தார்



**வாடிப்பட்டி, ஜன.25:**

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி தாய் மெட்ரிக் பள்ளி மற்றும் கலை அறிவியல் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் மாவட்ட அளவிலா ன தாய் கோப்பை கபாடி வாலிபால் விளையாட்டுப் போட்டிகள் 3 நாட்கள் நடக்கிறது.

இந்த விளையாட்டு போட்டிகளில் துவக்க நிகழ்ச்சிக்கு தாசில்தார் ராமச்சந்திரன் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் பார்த்திபன் முன்னிலை வகித்தார்.

பள்ளி நிர்வாக அலுவலர் முருகேசன் வரவேற்றார். இந்த விளையாட்டு போட்டியில் மதுரை மாவட்டத்திலுள்ள அரசு மற்றும் பள்ளிகளைச் சேர்ந்த18 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் கபாடி மற்றும் வாலிபால் போட்டியில் கலந்து கொண்டு விளையாடுகின்றனர். முடிவில் பள்ளி மேலாளர் மீனாட்சி சுந்தரம் நன்றி கூறினார்.

## பூத் முகவர்களுடன் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா ஆலோசனை



தூத்துக்குடி, ஒட்டாபிராம் சட்டமன்ற தொகுதி பூத் முகவர்களுடன் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா ஆலோசனை நடத்தினார்.

# சுற்றுலா: கொச்சின் சுற்றி உள்ள சிறப்பு வாய்ந்த இடங்கள்!

1. ஃபோர்ட் கொச்சி

கொச்சியைக் குறிக்கும் சீன மீன்பிடி வலைகள் ஃபோர்ட் கொச்சியில் மட்டுமே காணப்படுகின்றன, இது சீனாவுக்கு வெளியே சீனாவின் மீன்பிடி வலைகள் தனித்துவமானது, இது சீனப் பேரரசர் குப்லா கானின் அரசவையிலிருந்து வணிகர்களுக்குச் சென்றது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு 20 ஆக இருந்தபோது தற்போது 11 சீன மீன்பிடி வலைகள் கோட்டை கொச்சி கடற்கரையில் உள்ளன.

2. மட்டஞ்சேரி

கொச்சியில் உள்ள மற்றொரு அழகான பகுதி மட்டஞ்சேரி. மசாலாப் பொருட்கள், கைவினைப் பொருட்கள், கலாச்சாரம் மற்றும் உணவு ஆகியவற்றின் கலவையான மட்டாஞ்சேரி கொச்சியின் மிகவும் துடிப்பான சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகும்.

3. போல்காட்டி & வைபீன் தீவுகள்

போல்காட்டி தீவு கொச்சியின் பிரதான நிலப்பரப்பில் இருந்து குறுகிய படகு சவாரி ஆகும். பாரம்பரிய ஹோட்டலாக இருக்கும் போல்காட்டி அரண்மனை ஹாலந்துக்கு வெளியே இருக்கும் பழமையான டச்சு அரண்மனைகளில் ஒன்றாகும்.

4. மலையாட்டூர்

கொச்சிக்கு வெளியே உள்ள சுற்றுலா தலங்களையும் பார்க்க மறக்காதீர்கள். எர்ணாகுளத்தைச் சுற்றி மலையத்தூரில் உள்ள தேவாலயம் போன்ற சுற்றுலா விளையாட்டுகள் உள்ளன. 'மலையாட்டூர்' என்ற பெயர் மூன்று சிறிய சொற்களின் கலவையாகும். மாலா (மலை) அர் (நதி) ஊரே (இடம்). அதாவது மலையும், ஆறும், நிலமும் கூடும் இடம் மலையாட்டூர்.



5. மங்களவனம் பறவைகள் சரணாலயம்.

மங்களவனம் பறவைகள் சரணாலயம் நகரின் மத்தியில் 2.74 ஹெக்டேர் பரப்பளவில் ஒரு சிறிய காடு. இது கொச்சி நகரத்தின் பசுமை நுரையீரல் என்று அழைக்கப்படுகிறது மற்றும் இங்கு வெப்பநிலை பொதுவாக முக்கிய நகரத்தை விட 1-2 டிகிரி செல்சியஸ் குறைவாக இருக்கும்.

6. கேரள நாட்டுப்புற அருங்காட்சியகம்

கேரளாவின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தில் நீங்கள் ஆர்வமாக இருந்தால், கேரள நாட்டுப்புற அருங்காட்சியகம் கண்டிப்பாக பார்க்க வேண்டிய ஒன்றாகும். இது 25000+ பழமையான நாணயங்கள், சுவரோவியங்கள், நினைவுச்சின்னங்கள், சிலைகள், நகைகள், ஓவியங்கள், ஆடைகள் போன்றவற்றை இந்தியா முழுவதிலுமிருந்து ஒரு தனி மனிதனால் தனிப்பட்ட சேகரிப்பாக ஒரு சிறிய இடத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

7. யூத ஜெப ஆலயம்

பரதேசி ஜெப ஆலயம், கொச்சி யூத ஜெப ஆலயம் அல்லது மட்டஞ்சேரி ஜெப ஆலயம் என்றும் அழைக்கப்படுகிறது, இது கேரளாவின் மட்டஞ்சேரியில் உள்ள யூத நகரத்தில் அமைந்துள்ள ஒரு வரலாற்று சிறப்புமிக்க ஜெப ஆலயமாகும்.

8. செராய் கடற்கரை

கேரளாவின் சிறந்த கடற்கரைகளில் ஒன்றாகவும், ஆழமற்றதாகவும், அமைதியானதாகவும், நீச்சல் மற்றும் சூரிய குளியலுக்கு ஏற்ற கடற்கரையாகவும் இருக்கும் செராய் கடற்கரை அரபிக்கடலின் இளவரசி என்றும் அழைக்கப்படுகிறது.

9. கோடானந்த் யானைகள் பயிற்சி மையம்

பெரியாறு ஆற்றின் அருகே அமைந்துள்ள கிராமப்புற ஆற்றங்கரை கிராமமான கோடநாடு யானைகள் பயிற்சி மையம், நீங்கள் குழந்தைகளுடன் கேரளாவுக்குச் செல்லும்போது பார்க்க வேண்டிய மற்றொரு இடமாகும், ஏனெனில் குழந்தைகள் யானைகளை ஆற்றில் குளிப்பதை அனுபவிக்கலாம்.

10. அந்தகரனழி கடற்கரை

கொச்சியில் இருந்து அலெப்பியை நோக்கி 30 கி.மீ தொலைவில் எழுபுன்னாவுக்கு அருகில் அமைந்துள்ள அந்தகரனழி இன்னும் ஒரு கன்னி மற்றும் அழகான கடற்கரையாகும், மேலும் இது கொச்சிக்கு அருகிலுள்ள சிறந்த கடற்கரைகளில் ஒன்றாகும்.

12. மரைன் டிரைவ்

மரைன் டிரைவ் என்பது அதன் பெயர் குறிப்பிடுவது போல் வாகனங்கள் ஓட்டக்கூடிய டிரைவ் வழியில் அல்ல, ஆனால் எர்ணாகுளத்தில் உள்ள ஒரு அழகிய நடைபாதையில் வானவில் பாலம் உள்ளது, இது எர்ணாகுளத்தின் அடையாளமாக மாறியுள்ளது, இது கொச்சியில் பார்க்க வேண்டிய சிறந்த இடங்களில் ஒன்றாகும்.

13. ஹில் பேலஸ் மியூசியம்

ஹில் பேலஸ் கொச்சியின் முன்னாள் மகாராஜாவின் வசிப்பிடமாக இருந்தது மற்றும் 1986 இல் ஒரு அருங்காட்சியகத்தால் மாற்றப்பட்டது. இந்த அருங்காட்சியக வளாகத்தில் பழைய கொச்சி அரச குடும்பத்தின் கிரீடம் மற்றும் ஆபரணங்கள், ஓவியங்கள், கல் மற்றும் பளிங்கு சிற்பங்கள், ஆயுதங்கள், கல்வெட்டுகள், நாணயங்கள் போன்றவை உள்ளன.

14. கேரள வரலாற்று அருங்காட்சியகம்

எடப்பள்ளி, நீங்கள் எடப்பள்ளியில் உள்ள கேரள வரலாற்று அருங்காட்சியகத்திற்குச் சென்றால், கேரளாவை உருவாக்கியதாகக் கூறப்படும் முனிவரான பரசுராமரின் சிலை உங்களை வரவேற்கும். இது கேரளாவின் வரலாற்றின் நினைவுச்சின்னம் மற்றும் கேரளாவின் வரலாற்றைப் புரிந்துகொள்ள கொச்சியின் சிறந்த சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகும்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் வேலை வேண்டுமா?: உடனே விண்ணப்பிக்கவும்!

தமிழ்நாடு அரசின் அதிகாரப்பூர்வ விளையாட்டு அமைப்பான தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் காலியாக உள்ள பயிற்சியாளர் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு தகுதியானவர்களிடம் இருந்து வரும் 25 ஆம் தேதிக்குள் ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணி மற்றும் காலியிடங்கள் விவரம்:

பணி: பயிற்சியாளர்(Coach) காலியிடங்கள்: 30

சம்பளம்: மாதம் ரூ.35,600 - 1,30,800

தகுதி: ஏதொவதொரு துறையில் இளங்கலைப் பட்டம் மற்றும் தேசிய விளையாட்டு நிறுவனம், இந்திய விளையாட்டு ஆணையத்தால் வழங்கப்படும் குறைந்தபட்சம் 10 மாதங்கள் கால அளவுள்ள விளையாட்டுப் பயிற்சியில் ஓராண்டு டிப்ளமோ, சான்றிதழ் அல்லது தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் விளையாட்டுப் பயிற்சியில் முதுகலை டிப்ளமோ அல்லது குவாலியரில் உள்ள லட்சுமிபாய் தேசிய உடற்கல்வி நிறுவனத்தில் விளையாட்டுப் பயிற்சியில் முதுகலை டிப்ளமோ மற்றும் விண்ணப்பிக்கும் துறையில், தேசியப் பள்ளி விளையாட்டு கூட்டமைப்புப் போட்டிகள் அல்லது அந்தந்த தேசியக் கூட்டமைப்புகளால் ஏற்பாடு செய்யப்படும் இளையோர் அல்லது மூத்தோர் நிலையிலான தேசிய சாம்பியன்ஷிப், போட்டிகள் அல்லது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு மாநிலத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருக்க வேண்டும் அல்லது தமிழ்நாட்டில் உள்ள ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்றிருக்க வேண்டும்.

வயதுவரம்பு: 1.7.2026 தேதியின்படி 21 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். தொழில்முறைத் தகுதி மற்றும் பயிற்சி அனுபவங்கள், விளையாட்டுத் துறையில் பெற்ற பதக்கங்கள், விளையாட்டு குறித்த பொது அறிவு, தமிழில் தகுதி பெற குறைந்தபட்சம் 40% மதிப்பெண்கள் பெற வேண்டும் மற்றும் நேர்முகத் தேர்வு அடிப்படையில் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

விண்ணப்பிக்கும் முறை: விருப்பமும் தகுதியும் உள்ளவர்கள் https://www.sdat.tn.gov.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 25.1.2026

# ஜனவரி (2026) வார ராசிபலன்

## 25.1.2026 முதல் 31.1.2026 வரை

### மேஷம்

இந்த வாரம் தனவாக்கு அதிபதி சுக்கிரன் பலமாக இருப்பதால் வாக்கு வன்மையால் எதையும் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். எதிர்ப்புகள் விலகும். உங்களது செயல்களுக்கு முட்டுக்கட்டை போட்டவர்கள் விலகி விடுவார்கள். முயற்சிகள் சாதகமான பலன் தரும். பண வரத்து அதிகரிக்கும். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சனைகள் சாதகமாக நடந்து முடியும். ராசிநாதன் செவ்வாய் தொழில் ஸ்தானத்தை அலங்கரிப்பதால் தொழில் சிறக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் அகலும். தடைப்பட்ட பண உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இருந்த மறைமுக எதிர்ப்புகள் நீங்கி செயல்களில் வேகம் காண்பிப்பீர்கள். குடும்பாதிபதி சுக்கிரனின் சஞ்சாரத்தால் குடும்பத்தில் இருந்த வீண் பிரச்சனைகள் நீங்கி அமைதி ஏற்படும். கணவன், மனைவிக்கு இடையே இருந்த மன கசப்பு மாறும். விருந்தினர்கள் வருகை இருக்கும். குடும்ப செலவுகள் குறையும். பிள்ளைகள் உங்களது ஆலோசனைகளை கேட்பார்கள். பெண்களுக்கு புத்தி சாதுரியம் அதிகரிக்கும்.

### ரிஷபம்

இந்த வாரம் செயல் திறமை அதிகரிக்கும். ராசிக்கு 9-ல் சஞ்சாரம் செய்யும் கூட்டணியால் நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு வேலையை செய்து முடிப்பீர்கள். அரசு தொடர்பான பணிகளில் சாதகமான பலன் கிடைக்கும். எண்ணிய காரியங்கள் கைகூடும் சூழ்நிலை உருவாகும். தொழில் வியாபாரம் விரிவாக்கம் செய்வது பற்றிய ஆலோசனையில் ஈடுபடுவீர்கள். தேவையான நிதியுதவி கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. தேவையான சரக்குகளை வாங்குவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பணி சுமை குறைந்து காணப்படும். நிலுவையில் இருந்த பணம் கிடைக்கும். குடும்பத்தில் இருப்பவர்களுக்கு தேவையானவற்றை செய்து கொடுத்து அவர்களது நன்மதிப்பை பெறுவீர்கள். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். வாழ்க்கை துணையின் ஆதரவுடன் எதிலும் ஈடுபட்டு வெற்றி பெறுவீர்கள். கணவன் மனைவிக்கு இடையே நெருக்கம் அதிகரிக்கும்.

### மிதுனம்

இந்த வாரம் சுலபமாக முடிந்துவிடும் என்று நினைக்கும் காரியம் கூட சற்று தாமதமாகலாம். ராசிக்கு 8-ல் சஞ்சரிக்கும் ராசியாதிபதி புதன் மனதில் இருந்த கவலையை போக்கி நிம்மதி தருவார். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கலாம். வெளியூர் பயணம் அதன் மூலம் அலைச்சல் உண்டாகலாம். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் அலைச்சலுக்கு பின் நடந்து முடியும்.

தேவையான பண உதவி சற்று தாமதமாக கிடைக்கலாம். தொழில் தொடர்பாக எதிர்பார்க்கும் உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேல் அதிகாரிகள் ஆதரவு கிடைக்கும். அவர்களை அனுசரித்து செல்வது நன்மையைத் தரும். கணவன், மனைவிக்கு இடையே அனுசரித்துச் செல்வதன் மூலம் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும்.

வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் ஏற்படலாம். பெண்களுக்கு எதிலும் கூடுதல் கவனத்துடன் செயல்படுவது நல்லது. கலைத்துறையினருக்கு போட்டிகள் நீங்கும்..

### கடகம்

இந்த வாரம் விருப்பத்திற்கு மாறாக காரியங்கள் நடந்தாலும் முடிவு சாதகமாக இருக்கும். வீண் ஆசைகள் மனதில் தோன்றும். கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது. எந்த ஒரு செயலையும் யோசித்து செய்வது நல்லது. வீண் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பதும் நன்மை தரும். பேச்சில் நிதானம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் திடீர் தடை ஏற்படலாம். திட்டமிட்டு செய்வதன் மூலம் சாதகமான பலன் கிடைக்கும்.

உத்தியோகஸ்தர்கள் சக ஊழியர்களை அனுசரித்து செல்வது நல்லது. எதிர்பாராத அலைச்சல் ஏற்படலாம். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வது நல்லது. மனதில் பக்தி உண்டாகும். சகோதரர்கள் மற்றும் உறவினர்களிடம் பேசும்போதும் கவனம் தேவை. பெண்களுக்கு எந்த ஒரு செயலையும் யோசித்து செய்வது நல்லது.

வீண் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கிவிடுவதும் நன்மை தரும். கலைத்துறையினருக்கு மனத் துணிவு அதிகரிக்கும்.

### சிம்மம்

இந்த வாரம் எல்லா காரியங்களிலும் சாதகமான பலன் கிடைக்கும். எதிலும் லாபம் கிடைக்கும். கடன்கள், நோய்கள் தீரும். திருமணம் தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடந்து முடியும். நன்மை, தீமை பற்றிய கவலை இல்லாமல் தலை நிமிர்ந்து நடப்பார்கள். ராசிக்கு 7ல் சனி, ராகு இருப்பதால் நட்பு வகையில் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. சில நேரத்தில் விபரீதமான எண்ணம் தோன்றலாம்.

தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். கடன் பிரச்சனைகள் குறையும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். கூட்டு தொழில் செய்பவர்கள் கவனமாக இருப்பது நல்லது. உத்தியோகஸ்தர்கள் மிகவும் கவனமுடன் செயல்படுவது நல்லது. மேலிடத்துடன் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் மறையும். கணவன், மனைவிக்கு இடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும்.

குடும்ப உறவினர்களால் வீண் அலைச்சல் உண்டாகலாம். மன வலிமை அதிகரிக்கும். பெண்களுக்கு நட்பு வட்டத்தில் நிதானமாக பழகுவது நல்லது. கலைத்துறையினருக்கு கடன் விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். .

### கன்னி

இந்த வாரம் எதைச் செய்வது எதை விடுவது என்ற மன தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த பண வரவு தாமதப்படும். திடீர் சோர்வு உண்டாகும். அடுத்தவரிடம் உங்களது செயல் திட்டங்களை பற்றி கூறுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் அவசரமான முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது. பேச்சாற்றல் மூலம் தொழில் லாபம் கூடும். போட்டிகளை தவிர்க்க துணிச்சலான முடிவுகளை எடுக்க நினைப்பீர்கள்.

உத்தியோகஸ்தர்கள் மேல் அதிகாரிகள் கூறுவதை கேட்டு தடுமாற்றம் அடையலாம். நிதானமாக யோசித்து செய்வது நல்லது. பண வரத்து திருப்தி தரும். நீண்ட நாட்களாக இருந்து வந்த சுணக்க நிலை அடியோடு மாறும். குடும்பத்தில் நடைபெறும் சில விஷயங்கள் உங்கள் கோபத்தை தூண்டலாம். எனவே வீண் வாக்குவாதங்களில் ஈடுபடாமல் மிகவும் கவனமாக பேசுவதன் மூலம் நன்மை உண்டாகும்.

பெண்களுக்கு மன தடுமாற்றம் நீங்கும். கலைத்துறையினருக்கு முயற்சிகள் சாதகமான பலன் தரும். அரசியலில் உள்ளவர்களுக்கு மேல்மட்டத்தில் உள்ளவர்களுடன் வாக்குவாதங்கள் ஏற்படலாம். .

மாணவர்களுக்கு எதிர்கால கல்வி பற்றி முக்கிய முடிவுகளை எடுக்க நினைப்பீர்கள்.

### துலாம்

இந்த வாரம் கேந்திரங்கள் பலமாக இருப்பதால் தெளிவான மனநிலை இருக்கும். இக்கட்டான சூழ்நிலையில் சாமர்த்தியமாக செயல்பட்டு சாதகமான பலன் பெறுவீர்கள். செயல்திறன் அதிகரிக்கும் ஆனால் உங்களுக்கு எதிராக சிலர் செயல்படும் சூழ்நிலை இருப்பதால் கவனம் தேவை. நெருக்கடியான சமயத்தில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தாமதப்படும். தொழில், வியாபாரம் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். ஆனாலும் லாபம் அதிகரிக்கும்.

சில நேரங்களில் முக்கிய முடிவு எடுப்பதில் தயக்கம் காட்டுவீர்கள். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வதன் மூலம் கூடுதல் லாபம் கிடைக்க பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையுடன் செயல்பட்டு நிர்வாகத்தினரால் பாராட்டு கிடைக்க பெறுவார்கள். ஆனால் அலைச்சல் உண்டாகும். சக ஊழியர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். கணவன், மனைவிக்கு இடையே நெருக்கம் அதிகரிக்க மனம் விட்டுபேசுவது நன்மை தரும்.

உறவினர்கள் வருகை இருக்கும். அவர்களிடம் நிதானமாக பேசுவது நன்மை தரும். பெண்களுக்கு எதிலும் சாமர்த்தியமாக செயல்பட்டு காரிய வெற்றி பெறுவீர்கள்..

### விருச்சிகம்

இந்த வாரம் தைரியம் அதிகரிக்கும். எல்லா விதத்திலும் நன்மையை தரும். சகோதரர்களால் நன்மை உண்டாகும். காரிய வெற்றி ஏற்படும். பண வரத்து கூடும். எதிர்பாலினத்தாருடன் பழகும் போது கவனம் தேவை. எதிர்ப்புகள் குறையும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு கீழ் நிலையில் உள்ளவர்களால் லாபம் கிடைக்கும். பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் வேகம் காட்டுவீர்கள்.

தேவையான சரக்குகள் கையிருப்பு இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதையும் செய்து முடிப்பதில் துணிச்சல் உண்டாகும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். எதிர்பாரத இடமாற்றம் ஏற்படலாம். கணவன், மனைவிக்கு இடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். குடும்ப விஷயங்களில் சரியான முடிவுக்கு வர முடியாத தடுமாற்றம் ஏற்படலாம்.

உறவினர்களுடன் பேசும்போது கவனமாக பேசுவது நல்லது. பெண்களுக்கு எதையும் வெற்றிகரமாக செய்து முடித்து ஆதாயம் அடைவீர்கள். .

கலைத்துறையினருக்கு எதிர்ப்புகள் குறையும். அரசியல்துறையினருக்கு பண வரத்து கூடும். மாணவர்களுக்கு பாடங்களை படிப்பதில் ஆர்வம் உண்டாகும்.

### தனுசு

இந்த வாரம் மற்றவர்களுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். முன் கோபம் குறையும். பேச்சினால் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் நீங்கி பிரிந்தவர்கள் மீண்டும் நட்பு பாராட்டுவார்கள். பண வரத்து அதிகரிக்கும். மனதில் புது தெம்பும் உற்சாகமும் தோன்றும். எதிர்பாரத உதவியால் நன்மை ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பாக இழுபறியாக இருந்த சில பிரச்சனைகள் நல்ல முடிவுக்கு வரும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும்.

ஏற்கனவே வியாபாரம் தொடர்பாக செய்து பாதியில் நின்ற பணிகளை மீண்டும் செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். பண வரத்து திருப்தியாக இருக்கும். புதிய பொறுப்புகள் ஏற்படலாம். விரும்பிய இடத்திற்கு இடமாற்றம் கிடைக்கும். கணவர், மனைவிக்கு இடையே ஒற்றுமை உண்டாகும். குடும்பத்தில் அமைதி எற்படும். உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும்.

குடும்பத்திற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். பெண்களுக்கு மனதில் புது தெம்பும் உற்சாகமும் அதிகரிக்கும். கலைத்துறையினருக்கு எதிர்பாராத செலவுகள் உண்டாகும்.

### மகரம்

இந்த வாரம் ராசி பலமாக இருப்பதால் பண வரத்து எதிர்பார்த்த நேரத்தை விட வேகமாக வந்து சேரும். ஆனால் பூர்வீக சொத்துக்களில் இருந்து பிரச்சனைகள் தீரும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். சொத்து சம்பந்தமான பிரச்சனைகளில் இருந்து வந்த இழுபறி நீங்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத குறுக்கீடுகள் ஏற்பட்டு பின்னர் விலகும். வியாபாரம் தொடர்பான பிரச்சனைகளை கையாளும் போது கவனம் தேவை. பாக்கிகள் வசூலாவது தாமதமாகும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமாக தங்களது வேலைகளை செய்வது நல்லது. கணவன், மனைவிக்கு இடையே அனுசரித்து செல்வதன் மூலம் அமைதி ஏற்படும்.

விருந்தினர்கள் வருகை இருக்கும். உறவினர்கள், நண்பர்களிடம் கோபத்தை காண்பிக்காமல் பேசுவது நல்லது. எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பதில் தாமதமாகலாம்.

பெண்களுக்கு எந்த ஒரு விஷயத்திலும்முடிவுஎடுப்பதில்தாமதம் உண்டாகும். கலைத்துறையினருக்கு நெருக்கடிகளை சந்திக்க வேண்டி வரும். அரசியல்துறையினருக்கு அடுத்தவர்களிடம் வாக்குவாதத்தை தவிர்ப்பது நன்மை தரும்..

### கும்பம்

இந்த வாரம் காரியங்கள் முடிவதில் தாமத போக்கு காணப்படும். தேவையற்ற மன சஞ்சலம் உண்டாகலாம். யாரையும் நேருக்கு நேர் எதிர்க்காமல் அனுசரித்து செல்வது நன்மை தரும். கெட்ட கனவுகள் தோன்றலாம். வயிறு தொடர்பான நோய்கள் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரம் மெத்தனமாக காணப்பட்டாலும் பண வரவு இருக்கும். புதிய வாடிக்கையாளர்களிடம் நிதானமாக பேசி வியாபாரம் செய்வது நல்லது.

போட்டிகளை கண்டு கொள்ளாமல் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சலும், டென்ஷனும் ஏற்பட்டு நீங்கும். வீண் வாக்கு வாதங்களை தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவிக்கு இடையே தேவையில்லாத ஒரு விஷயத்தால் கருத்து வேற்றுமை உண்டாகலாம். எனவே கவனமாக இருப்பது நல்லது. பிள்ளைகளால் திடீர் செலவு உண்டாகலாம். உறவினர்கள் மூலம் நன்மைகள் ஏற்படும். பெண்களுக்கு யாரையும் எதிர்த்துக் கொள்ளாமல் அனுசரித்து செல்வது நன்மை தரும். கலைத்துறையினர் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். அரசியல்துறையினருக்கு மேலிடத்துடன் கருத்து வேற்றுமை உண்டாகலாம்..

### மீனம்

இந்த வாரம் எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி உண்டாகும். பண வரத்து அதிகரிக்கும். வாக்கு வன்மை ஏற்படும். உங்கள் பேச்சுக்கு மற்றவர்கள் செவி சாய்ப்பார்கள். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொலைதூரத்தில் இருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். லாபம் கூடும். பழைய பாக்கிகள் வசூலாகும். வியாபாரம், தொழில் தொடர்பான கடித போக்கு சாதகமான பலன் தரும். புதிய ஆர்டர்கள் கிடைக்க பெறுவீர்கள்.

பணியாளர்கள் மூலம் நன்மை உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாக எதையும் செய்து முடித்து பாராட்டு பெறுவார்கள். கவுரவம் கூடும். நிலுவை தொகை வந்து சேரும். பதவி உயர்வு கிடைக்கலாம். கணவன், மனைவிக்கு இடையே நெருக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். வாகனம் வாங்கும் அல்லது புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுவீர்கள்.

பயணம் மூலம் சாதகமான பலன் கிடைக்கும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். பெண்களுக்கு உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும். கலைத்துறையினருக்கு உடல் ஆரோக்கியம் பெறும்.

# பட்ஜெட் கூட்டத் தொடர்: ஜன. 27-ல் அனைத்துக் கட்சிக் கூட்டம்!

**புதுடெல்லி, ஜன.25:**



நாடாளுமன்றத்தில் பட்ஜெட் கூட்டத் தொடரையொட்டி, வருகிற 27 ஆம் தேதியில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தப்படவுள்ளது.

பிப்ரவரி மாதம் 1-ம் தேதி 2026-27ம் நிதி ஆண்டிற்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட உள்ளது.

நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத் தொடர், இந்த மாத இறுதியான ஜன. 28- தொடங்கப்படவுள்ளது. தொடர்ந்து, இரு கட்டங்களாக ஏப். 2 ஆம் தேதிவரையில் பட்ஜெட் கூட்டத் தொடர் நடைபெறவுள்ளது.

மத்திய அரசின் 2026 - 2027-க்கான பட்ஜெட் பிப்ரவரியின் முதல் தேதியில் தாக்கல் செய்யப்படவுள்ளது. ஆண்டின் முதல் கூட்டத் தொடர் என்பதால், இரு அவைகளிலும் குடியரசுத் தலைவர் திரௌபதி தொடக்கிவைத்து, உரையாற்றவுள்ளார்.

இந்த நிலையில், கூட்டத் தொடர் தொடங்குவதற்கு முன்னதாக, மரபுப் படி அனைத்துக் கட்சிக் கூட்டமும் ஜன. 27 ஆம் தேதியில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டம், நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு தலைமையில் நாடாளுமன்ற இணைப்புக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

நாடாளுமன்ற கூட்டத் தொடரின் விவாதத்துக்கு வரவிருக்கும் முக்கிய பிரச்னைகள், சட்ட மசோதாக்கள், அவையை சுமூகமாக நடத்துவது குறித்து அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

இதுதொடர்பாக அதிகாரிகள் கூறுகையில், நாடாளுமன்றகூட்டத்தொடரில் விவாதத்திற்கு வரவிருக்கும் முக்கிய பிரச்சனைகள், சட்ட மசோதாக்கள் குறித்தும், அவையை சுமூகமாக நடத்துவது குறித்தும், அனைத்துக் கட்சி கூட்டத்தில் மத்திய அரசு சார்பில் விரிவாக ஆலோசனை நடத்தப்படும் என தெரிவித்தனர்.

## க்ரைம் கார்னர்

### முன்பதிவை ரத்து செய்ததால் ஆத்திரம்.. பெண்ணை சரமாரியாக தாக்கிய மசாஜ் ஊழியர்

**மும்பை, ஜன.25:**

மகாராஷ்டிராவின் மும்பை, வடாலா பகுதியைச் சேர்ந்த ஷெஹ்னாஸ் சையத் (46) என்ற பெண் மசாஜ் சேவையை ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்துள்ளார்.

கடந்த புதன்கிழமை மாலை வீட்டிற்கு மசாஜ் செய்ய வந்த பெண் ஊழியரின் நடத்தை மற்றும் அவர் கொண்டு வந்த மசாஜ் பெட் அறையில் வைப்பதற்கு வசதியாக இல்லாதது போன்ற காரணங்களால், ஷெஹ்னாஸ் அந்த முன்பதிவை ரத்து செய்துள்ளார்.

முன்பதிவை ரத்து செய்ததால் ஆத்திரமடைந்த அந்த பெண் ஊழியர், ஷெஹ்னாஸுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். பின்னர் ஆத்திரம் தலைக்கேறி, ஷெஹ்னாஸின் முடியைப் பிடித்து இழுத்து, முகத்தில் குத்தியும், நகங்களால் பிறாண்டியும் தாக்கியுள்ளார். இருவரும் கட்டிப்புரண்டு சண்டை போட்டுள்ளனர்.

தடுக்க வந்த ஷெஹ்னாஸின் 18 வயது மகனையும் அந்த ஊழியர் கீழே தள்ளிவிட்டுள்ளார்.

இது தொடர்பாக ஷெஹ்னாஸ் போலீசில் புகார் அளித்தார். போலீசார் அந்த ஊழியர் மீது வழக்குப்பதிவு செய்துள்ளனர். தொடர்புடைய வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானதை அடுத்து, அந்த ஊழியரை நிறுவனம் பணிநீக்கம் செய்துள்ளது.

### ஃபேக் ஐடி மூலம் பெண்களின் படங்களை காட்டி பணம் பறித்த பரமக்குடி பெண் கைது!




**நாகர்கோவில், ஜன.25:**

போலியான முகநூல் கணக்கின் மூலமாக பெண்களின் படங்களைக் காட்டி, இளைஞர்களைத் தொடர்பு கொண்ட பெண் ஒருவர் ஆசை வார்த்தைகள் கூறியுள்ளார். அதனை நம்பி பலரும் அவரது வங்கி கணக்குக்கு பணம் அனுப்பியுள்ளனர்.

பணம் கிடைத்ததும் சம்பந்தப்பட்ட இளைஞர்களின் அழைப்பை அந்தப் பெண் நிராகரித்து வந்துள்ளார். இவ்வாறு பணம் கொடுத்து ஏமாந்த கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த சிலர், சம்பந்தப்பட்ட பெண் மீது நடவடிக்கை எடுக்க கோரி, மாவட்ட எஸ்.பி. ஸ்டாலினிடம் புகார் மனு அளித்தனர். இப்புகாரின் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து குற்றவாளியைக் கைது செய்ய எஸ்.பி. உத்தரவிட்டிருந்தார். சைபர் கிரைம் போலீஸார் விசாரணை நடத்தினர். இளைஞர்களை குறிவைத்து ஆசைவார்த்தை கூறி பணம் பறித்து ஏமாற்றியதாக ராமநாதபுரம் பரமக்குடி பகுதியைச் சேர்ந்த முகமது ஷாஜகான் என்பவரது மகள் நபிலா பேகம் (27) என்பவரை சைபர் கிரைம் போலீஸார் கைது செய்தனர். அவர், நாகர்கோவில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். சமூக வலைதளங்கள் மூலம் பெண்களின் படங்களைக் காட்டி பணம் வாங்கி விட்டு, பின்னர் தொலைபேசி அழைப்புகளை புறக்கணிப்பது போன்ற ஆன்லைன் தொழில்முறை மோசடி நடந்து வருகிறது. இதனை நம்பி யாரும் பணம் கொடுத்து ஏமாற வேண்டாம்' என, குமரி மாவட்ட காவல்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

## விளையாட்டு செய்திகள்

### ஆஸ்திரேலிய ஓபன்: 4வது சுற்றுக்கு முன்னேறிய கோகோ காப், மிர்ரா ஆண்ட்ரீவா

**மெல்போர்ன், ஜன.25:**

நடப்பு ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரான ஆஸ்திரேலிய ஓபன் தொடர் மெல்போர்னில் நடந்து வருகிறது. இந்தத் தொடர் பிப்ரவரி 1-ம் தேதி வரை நடக்கிறது. பெண்கள் ஒற்றையர் பிரிவின் 3வது சுற்றில் அமெரிக்காவின் கோகோ காப், சக நாட்டு வீராங்கனை ஹெய்லி பாப்டிஸ்ட் உடன் மோதினார். இதில் சிறப்பாக ஆடிய கோகோ காப் 3-6, 6-0, 6-3 என்ற செட் கணக்கில் வென்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு போட்டியில் ரஷியாவின் மிர்ரா ஆண்ட்ரீவா 6-3, 6-4 என்ற செட் கணக்கில் ரொமேனியாவின் எலினா கேப்ரியலாவை வீழ்த்தி நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

### ஆக்கி இந்தியா லீக்: இறுதிப் போட்டிக்குள் நுழைந்த கலிங்கா லான்செர்ஸ்

7-வது ஆக்கி இந்தியா லீக் போட்டியின் பிளே ஆப் சுற்று நேற்று தொடங்கியது. குவாலிபயர்-1 ஆட்டத்தில் கலிங்கா லான்செர்ஸ்-ராஞ்சி ராயல்ஸ் அணிகள் மோதின.

இதில் லான்செர்ஸ் 2-1 என்ற கோல் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்கு நேரடி தகுதி பெற்றது. லான்செர்ஸ் அணியில் அலெக்சாண்டர் ஹென்டிரிக்ஸ் 2 கோல் (12 மற்றும் 32-வது நிமிடம்) அடித்தார். ராயல்ஸ் தரப்பில் மன்தீப் சிங் கோலை (40வது நிமிடம்) பதிவு செய்தார். முன்னதாக நடைபெற்ற எலிமினேட்டர் போட்டியில் ஐதராபாத் டுபான்ஸ் 2-0 என்ற கோல் கணக்கில் எச்.ஐ.எல். அணியை வீழ்த்தி வெளியேற்றியது.

### பிக்பாஷ் லீக் தொடர்: இறுதிப்போட்டிக்கு முன்னேறியது சிட்னி சிக்சர்ஸ்

**மெல்போர்ன், ஜன.25:**

பிக்பாஷ் லீக் தொடரின் லீக் சுற்றுகள் மற்றும் தகுதிச்சுற்று போட்டிகள் முடிந்து பிளே ஆப் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் நேற்று நடந்த ஆட்டத்தில் சிட்னி சிக்சர்ஸ், ஹோபார்ட் ஹரிகேன்ஸ் அணிகள் மோதின. டாஸ் வென்ற ஹோபர்ட் அணி பவுலிங் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் பேட் செய்த சிட்னி சிக்சர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 198 ரன்கள் எடுத்தது. அந்த அணியின் ஸ்டீவ் ஸ்மித் சிறப்பாக விளையாடி அரை சதமடித்து 65 ரன்கள் எடுத்தார். ஹோபர்ட் அணி சார்பில் ரிலீ மெரிடித் 3 விக்கெட்டும், ரிஷாத் ஹொசைன், பில்லி ஸ்டான்லேக் தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர். இதையடுத்து, 199 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய ஹோபார்ட் ஹரிகேன்ஸ் அணி 17.5 ஓவரில் 141 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இதன்மூலம் 57 ரன் வித்தியாசத்தில் சிட்னி சிக்சர்ஸ் அணி வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறி அசத்தியது. இன்று நடைபெற உள்ள இறுதிப்போட்டியில் சிட்னி சிக்சர்ஸ் அணி, பெர்த் ஸ்கார்சர்ஸ் அணியுடன் மோதுகிறது. இரு அணிகளும் இறுதிப்போட்டியில் மோதுவது 6வது முறை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒடிசாவின் நவரங்பூர் நக்சல் இல்லாத மாவட்டமாக அறிவிப்பு

**நவரங்பூர், ஜன.25:**



அண்டை மாநிலமான சத்தீஸ்கரில் ஒன்பது மாவோயிஸ்ட்கள் சரணடைந்ததைத் தொடர்ந்து, ஒடிசாவின் நவரங்பூர் மாவட்டம் நக்சல் இல்லாத மாவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

சரணடைந்த நக்சலைட்களில் ஏழு பெண்கள் உள்பட ஒன்பது பேருக்கு மொத்தம் ரூ. 47 லட்சம் பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டிருந்தது.

நக்சலைட்கள் நவரங்பூர் மற்றும் சத்தீஸ்கரின் தம்தாரி மாவட்டத்தில் செயல்பட்டு வந்தனர். அவர்கள் சரணடைந்ததன் மூலம் நவரங்கபூர் மாவட்டம் நக்சல் இல்லாத மாவட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

செப்டம்பர் 24, 2011 அன்று பிஜு ஜனதா தளம் எம்எல்ஏ ஜகபந்து மாஜி மற்றும் அவரது தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரி பி.கே. பட்ரோ ஆகியோர் படுகொலை செய்யப்பட்டது உள்பட நக்சல் வன்முறையின் பல சம்பவங்களை இந்த மாவட்டம் கண்டுள்ளது.

மாநிலத்தின் 30 மாவட்டங்களில், மாவோயிஸ்ட்களின் ஆதிக்கம் இப்போது ஏழு மாவட்டங்களின் சில பகுதிகளில் மட்டுமே உள்ளது. அவை, காந்தமால், காலஹண்டி, போலங்கிர், மல்கான்கிரி, கோராபுட், ராயகடா மற்றும் பௌத் ஆகியவையாகும்.

மார்ச் 31-ஆம் தேதிக்குள் நாட்டிலிருந்து இடதுசாரி தீவிரவாதத்தை ஒழிக்கும் மத்திய அரசின் இலக்கு நெருங்கி வரும் நிலையில், நவரங்பூர் மாவட்டம் நக்சலைட்டுகளிடமிருந்து விடுபட்டிருப்பது ஒரு பெரிய சாதனையாகும் என்று காவல்துறை கூறியுள்ளது.

# நான்காம் தொழில்புரட்சிக்கு 5 புதிய உலகளாவிய மையங்கள்: இந்தியாவில் மேலும் ஒரு மையம்

**புதுடெல்லி, ஜன.25:**




உலக அளவில் நான்காம் தொழில்புரட்சிக்கான 5 புதிய மையங்களை அமைக்க உலக பொருளாதார கூட்டமைப்பு திட்டமிட்டுள்ளது.

மும்பை மற்றும் தெலங்கானாவில் ஏற்கெனவே தலா ஒரு மையம் செயல்பட்டு வரும் நிலையில், தற்போதைய புதிய மையங்களில் ஒன்று ஆந்திரத்தில் அமையவுள்ளது. பிற மையங்கள் பிரான்ஸ், பிரிட்டன், ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளில் அமைகின்றன.

இது தொடர்பாக உலக பொருளாதார கூட்டமைப்பின் தலைவர் மற்றும் தலைமை செயல் அதிகாரி (சிஇஓ) போர்ஜ் பிரெண்டே கூறுகையில், 'தொழில்நுட்ப சவால்களுக்கு தீர்வு காண்பதில் அரசுகள், தொழில்துறை மற்றும் நிபுணர்களை ஒருங்கிணைக்கும் விதமாக நான்காம் தொழில்புரட்சிக்கான 5 புதிய மையங்கள் தொடங்கப்படுகின்றன. உள்ளூர் மற்றும் பிராந்திய புரிதல்கள் மூலம் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை பொறுப்புடன் பயன்படுத்துவதற்கான உலக நாடுகளின் முயற்சியை இவை பலப்படுத்தும்' என்றார்.

ஆந்திரத்தில் அமையவுள்ள புதிய மையம் தொடர்பாக மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு கூறுகையில், 'உலக பொருளாதார கூட்டமைப்புடன் இணைந்து செயல்படுவது, எரிசக்தி பாதுகாப்பு, இணையவழி பாதுகாப்பு, நம்பத்தகுந்த எண்ம அமைப்புகளில் திறன் கட்டமைப்பு முயற்சியை பிரதிபலிக்கிறது' என்று கூறியுள்ளார்.

ஸ்விட்சர்லாந்தின் டாவோஸில் 5 நாள்களாக நடைபெற்றுவந்த உலக பொருளாதார அமைப்பின் வருடாந்திர கூட்டம் வெள்ளிக்கிழமையுடன் நிறைவடைந்தது குறிப்பிடத்தக்கது.

# திரிணமூல் பெண் எம்.பி.க்கு எதிரான வழக்கு: லோக்பால் அமைப்புக்கு தில்லி உயர்நீதிமன்றம் கூடுதல் அவகாசம்

**புதுடெல்லி, ஜன.25:**




நாடாளுமன்றத்தில் பணம் வாங்கிக் கொண்டு கேள்வி எழுப்பியதாக தொடரப்பட்ட வழக்கில் திரிணமூல் காங்கிரஸ் பெண் எம்.பி. மஹுவா மொய்த்ராவுக்கு எதிராக சிபிஐ குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய அனுமதிப்பது குறித்து முடிவெடுக்க லோக்பால் அமைப்புக்கு வழங்கப்பட்ட அவகாசத்தை மேலும் 2 மாதங்களுக்கு தில்லி உயர் நீதிமன்றம் நீட்டித்துள்ளது.

இதுதொடர்பான வழக்கு, தில்லி உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகள் அனில் சேதர்பால், ஹரிஷ் வைத்யநாதன் சங்கர் ஆகியோரைக் கொண்ட அமர்வு முன்பு வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது லோக்பால் அமைப்பு சார்பில், மொய்த்ராவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய அனுமதிப்பது குறித்து முடிவெடுக்க கால அவகாசம் கோரப்பட்டது.

இதற்கு மொய்த்ரா தரப்பு வழக்குரைஞரும், சிபிஐ வழக்குரைஞரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

இதையடுத்து தில்லி உயர்நீதிமன்றம் கூறுகையில், 'லோக்பாலுக்கு வழங்கப்பட்ட அவகாசம், மேலும் 2 மாதங்களுக்கு நீட்டிக்கப்படுகிறது. இந்த அவகாசம் முடிந்ததும் மேலும் அவகாசம் நீட்டிக்கப்படாது' என்றது.

பின்னணி: தொழிலதிபர் தர்ஷன் ஹிரநந்தனிடம் பணம் மற்றும் பரிசுப் பொருள்களை வாங்கிக் கொண்டு, விதிகளுக்கு புறம்பாக நாடாளுமன்ற மக்களவையில் கேள்வி எழுப்பியதாக மேற்கு வங்க மாநிலம் கிருஷ்ணாநகர் தொகுதி எம்.பி. மொய்த்ரா மீது குற்றச்சாட்டு எழுந்தது.

இதுதொடர்பாக அவர்கள் 2 பேருக்கு எதிராகவும் சிபிஐ 2024-ஆம் ஆண்டு மார்ச் மாதம் வழக்குப்பதிவு செய்தது.

பின்னர் விசாரித்து லோக்பால் அமைப்பிடம் 2025-ஆம் ஆண்டு ஜூலை மாதம் அறிக்கை தாக்கல் செய்தது.

இதையடுத்து அவர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய லோக்பால் அனுமதித்தது.

ஆனால் அந்த உத்தரவை எதிர்த்து மொய்த்ரா தாக்கல் செய்த மேல்முறையீட்டை விசாரித்த தில்லி உயர் நீதிமன்றம், லோக்பால் அளித்த அனுமதியை ரத்து செய்தது.

பின்னர் லோக்பால் சட்டத்தின் 20-ஆவது பிரிவின்கீழ் அனுமதி அளிக்க முடியுமா என ஒரு மாதத்திற்குள் முடிவெடுக்கும்படி டிசம்பர் 19-ஆம் தேதி உத்தரவிட்டிருந்தது.

## வணிகச் செய்திகள்

### தங்கம் விலை ஒரே நாளில் பவுனுக்கு ரூ.1600 உயர்வு!

**சென்னை, ஜன.25:**

ஆபரணத் தங்கத்தின் விலை (ஜன.24) ஒரே நாளில் பவுனுக்கு ரூ.1600 உயர்ந்துள்ளது. மாலை நேர நிலவரப்படி, பவுனுக்கு ரூ.1,040 அதிகரித்து, ஒரு பவுன் ரூ.1,18,000 க்கு விற்பனை செய்யப்படுகிறது.

உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது. அதனால் சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு அதிகரிப்பு ஆகியவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. கடந்த சில மாதங்களாகவே தங்கம் விலை அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று காலை (ஜன.24) கிராமுக்கு ரூ.70 என உயர்ந்து, ஒரு கிராம் ரூ.14,620-க்கு விற்பனையானது. பவுனுக்கு ரூ.560 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.1,16,960-க்கு விற்பனையானது. மேலும், 24 காரட் சுத்த தங்கம் பவுன் ரூ.1,27,592-க்கும் விற்பனையானது. 18 காரட் தங்கம் பவுன் ரூ.97,520-க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக தற்போது, ஆபரணத் தங்கத்தின் விலை இன்று (ஜன 24) காலையில் பவுனுக்கு ரூ.560 உயர்ந்த நிலையில், மீண்டும் மதியம் ரூ.1,040 அதிகரித்துள்ளது. தற்போது, கிராமுக்கு ரூ.130 உயர்ந்துள்ளது. அதாவது, ஒரு கிராம் ரூ. 14,750-க்கும், ஒரு பவுன் ரூ.1,18,000-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

சென்னையில் வெள்ளி விலை இன்று கிராமுக்கு ரூ.10 உயர்ந்து ஒரு கிராம் ரூ.365-க்கு விற்பனை செய்யப்படுகிறது. கட்டி வெள்ளி கிலோவுக்கு ரூ 10,000 உயர்ந்து, ரூ.3,65,000-க்கும் சந்தையில் விற்பனை ஆகிறது.

# செல்போன் செயலி மூலம் மும்பை தொழிலதிபரிடம் ரூ.11 கோடி மோசடி

**மும்பை, ஜன.25:**

செல்போன் செயலி மூலம் மும்பையைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவரிடம் ரூ.11 கோடி மோசடி செய்யப்பட்டுள்ளது.

தெற்கு மும்பை சர்ச்கேட் பகுதியைச் சேர்ந்த 68 வயது தொழிலதிபர் பங்குச் சந்தையில் முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளார். அப்போது சமூக வலைதளத்தில் விளம்பரம் ஒன்றை அவர் பார்த்துள்ளார். அதனைத் தொடர்ந்து மோகன் சர்மா என்ற பெயரில் வாட்ஸ் அப்பில் பேசிய ஒருவர் பங்குச் சந்தை ஆலோசகராக அறிமுகமாகியுள்ளார்.




"டிரேடர் டைட்டன் விஐபி 46" என்ற வாட்ஸ்அப் குழுவில் இணைக்கப்பட்ட அந்த தொழிலதிபரிடம் பல முதலீட்டாளர்கள் தங்களுக்கு அதிக லாபம் கிடைத்தாக கூறிய ஸ்கிரீன்ஷாட்களை அந்த குழுவில் பகிர்ந்துள்ளனர். இதனை உண்மையென நம்பிய அந்த தொழிலதிபரிடம் பிரீமியம் உறுப்பினராக மாற தனிப்பட்ட டிரேடிங் செயலியை பதிவிறக்கம் செய்யுமாறு கூறினர்.

அதில் கணக்கு தொடங்கியவுடன், தொழிலதிபர் பல்வேறு வங்கிக் கணக்குகளுக்கு பணத்தை அனுப்பியுள்ளார். அவர் அனுப்பும் பணம் உடனடியாக அந்தச் செயலியின் வேலட்டில் பிரதிபலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தது. இதனால் உண்மையாக வர்த்தகம் நடப்பதாக நம்பியுள்ளார்.

விங்ஸ் ஆப் ப்ரீடம் போன்ற பல்வேறு குழுக்கள் மூலம் அவருக்குப் பயிற்சி மற்றும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன. கடந்த டிசம்பர் 29, 2025 முதல் ஜனவரி 19, 2026 வரையிலான குறுகிய காலத்திற்குள் சுமார் ரூ.10.98 கோடியை அவர் முதலீடு செய்தார்.

இந்நிலையில், தனது முதலீட்டை திரும்பப் பெற தொழிலதிபர் முயன்றபோது பணத்தைத் திரும்பப் பெற வேண்டுமானால் ரூ.8 கோடி அபராதம் செலுத்த வேண்டும் என்று மிரட்டியுள்ளனர். அப்போதுதான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தார். சைபர் க்ரைமில் தொழிலதிபர் புகார் அளித்ததைத் தொடர்ந்து அடையாளம் தெரியாத நபர்கள் மீது மோசடி, கூட்டுச் சதி உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து போலீஸார் தீவிர விசாரணையை தொடங்கியுள்ளனர்.

## திருப்பதியில் ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.3¾ கோடி

**திருமலை, ஜன.25:**

திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து, ஏழுமலையானை தரிசனம் செய்துவிட்டு செல்கின்றனர். அந்த வகையில், திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று முன்தினம் 64 ஆயிரத்து 571 பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். 23 ஆயிரத்து 634 பேர் முடி காணிக்கை செலுத்தினர். அன்று ஒரு நாள் உண்டியல் காணிக்கையாக ரூ.3 கோடியே 84 லட்சம் கிடைத்ததாக கோவில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## சுற்றுலா கார் மீது பஸ் மோதி கோர விபத்து – 4 பேர் பலி

**பெங்களூரு, ஜன.25:**

கர்நாடக மாநிலத்தை சேர்ந்த ஒரு குடும்பத்தை சேர்ந்த 13 பேர் அம்மாநிலத்தில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கு நேற்று காரில் சுற்றுலா சென்றுள்ளனர். அதன்படி, முருதேஷ்வரர் கோவில், மரவந்தி கடற்கரை, உடுப்பி ஸ்ரீ கிருஷ்ண முட்டு உள்பட பகுதிகளுக்கு சென்றனர். இதனை தொடந்து தர்மஸ்தலாவுக்கு காரில் புறப்பட்டுள்ளனர். இந்நிலையில், உடுப்பி மாவட்டத்தில் கர்கலா பஜகொலி தேசிய நெடுஞ்சாலையில் இன்று மதியம் 3 மணியளவில் சென்றபோது சாலையில் எதிரே வேகமாக வந்த ஆம்னி பஸ் சுற்றுலா கார் மீது மோதியது. இந்த கோர விபத்தில் காரில் பயணித்த 4 பேர் உயிரிழந்தனர். குழந்தை எஞ்சிய 9 பேரும் காயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார், காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். இந்த விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார், விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மும்பையில் குடியிருப்பு வளாகத்தில் துப்பாக்கிச் சூடு: பாலிவுட் நடிகர் கைது

**மும்பை, ஜன.25:**

மும்பை அந்தேரியில் உள்ள ஓஷிவாரா குடியிருப்பு வளாகத்தில் கடந்த 18 ஆம் தேதி துப்பாக்கிச் சூடு நடைபெற்றது. இதில் இரண்டு குண்டுகள் வளாகத்தில் கண்டெடுக்கப்பட்டன. ஒன்று இரண்டாவது தளத்திலும், மற்றொன்று நான்காவது தளத்திலும் கண்டெடுக்கப்பட்டது.

இது குறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வந்தனர். ஆரம்பத்தில், அங்கிருந்த சிசிடிவி கேமராக்களில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்ததில் எந்தவிட தடயமும் கிடைக்காத நிலையில், காவல்துறையினரின் நடவடிக்கையில் எந்தவித முன்னேற்றமும் காண முடியவில்லை. இருப்பினும், தடயவியல் ஆய்வுக்குப் பிறகு, அந்த குண்டுகள் அருகில் உள்ள நடிகர் கமல் ரஷித் கானின் பங்களாவிலிருந்து சுடப்பட்டிருக்கலாம் என்று தெரியவந்தது. இதையடுத்து வெள்ளிக்கிழமை இரவு கான் ஓஷிவாரா காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்து வரப்பட்டார். தனது வாக்குமூலத்தில், கான் தனது உரிமம் பெற்ற துப்பாக்கியைப் பயன்படுத்தி குடியிருப்பு வளாகத்தில் இரண்டு முறை சுட்டதை ஒப்புக்கொண்டார்.

இதையடுத்து பாரதிய நியாய சன்ஹிதா மற்றும் ஆயுதச் சட்டத்தின் தொடர்புடைய பிரிவுகளின் கீழ் நடிகர் கானுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குடியிருப்பு வளாகம் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவம் தொடர்பாக, கான் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

## போலி கடவுச்சீட்டு: நபர் கைது

**புதுடெல்லி, ஜன.25:**

சிறையில் உள்ள பிரபல ரௌடி சலீம் பிஸ்டல் உள்பட குற்றச்செயல்களில் ஈடுபடும் பலருக்கு போலி கடவுச்சீட்டு மற்றும் ஆவணங்களை ஏற்பாடு செய்து கொடுத்த நபர் கைது செய்யப்பட்டதாக தில்லி காவல் துறையினர் வெள்ளிக்கிழமை தெரிவித்தனர்.

இது தொடர்பாக காவல துறையினர் மேலும் கூறியதாவது: புது தில்லி நீதிமன்றத்தால் இந்த மாத தொடக்கத்தில் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட ஹர்தேஷ் என்ற சோனுவை காவல் துறையினர் கைது செய்துள்ளனர். ஆயுதச் சட்டம், பிஎன்எஸ் மற்றும் கடவுச்சீட்டுச் சட்டம் ஆகியவற்றின் கீழ் சிறப்புப் பிரிவால் பதிவு செய்யப்பட்ட வழக்கில் அவர் தேடப்பட்டு வந்தார். நந்து கும்பல் மற்றும் சலீம் பிஸ்டல் கும்பல் உள்ளிட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களின் உறுப்பினர்கள் சட்ட அமலாக்கத் துறையினரிடமிருந்து தப்பித்து, சட்டவிரோதமாகப் பல்வேறு நாடுகளுக்குச் செல்ல உதவுவதற்காக ஹர்தேஷ் போலி ஆவணங்களைத் தயாரித்ததாக புலனாய்வாளர்கள் தெரிவித்தனர்.

முன்னதாகக் கைது செய்யப்பட்ட ஒருவர், ஹர்தேஷ் தனக்கும், தாதா சலீம் பிஸ்டல் உள்பட மற்ற கூட்டாளிகளுக்கும் போலிக் கடவுச்சீட்டுகளை ஏற்பாடு செய்ததாகவும், மேலும் கும்பலுக்கு நிதியுதவி செய்ததாகவும் தெரிவித்தார்.

ஜாக்ரிதி என்கிளேவைச் சேர்ந்த ஹர்தேஷ், காஜியாபாத்தில் உள்ள சித்தார்த் விஹாரில் தங்கியிருந்தார். அவரது கைது, போலிக் கடவுச்சீட்டு மோசடிகள், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் வலைப்பின்னல்கள் மற்றும் அவற்றின் மாநிலங்களுக்கு இடையேயான தொடர்புகள் குறித்த மேலதிகத் தகவல்களை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பிரிவினையை ஏற்படுத்துவதற்காகவே பிரதமர் மோடி கேரளா வருகிறார் - காங்கிரஸ் தாக்கு

**புதுடெல்லி, ஜன.25:**

பிரிவினையை ஏற்படுத்துவதற்காகவே பிரதமர் நரேந்திர மோடி கேரளாவுக்கு வருவது வெட்கக்கேடானது என்று அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால் கடுமையாக சாடி உள்ளார்.



முன்னதாக பிரதமர் மோடி நேற்று கேரளாவில் பல்வேறு வளர்ச்சித்திட்டங்களை தொடங்கி வைத்து பேசினார். அப்போது காங்கிரஸ் கட்சியை, 'முஸ்லிம் லீக் மாவோயிஸ்டு காங்கிரஸ்' என கூறியதுடன், மக்கள் அவர்களிடம் விழிப்பாக இருக்குமாறும் கேட்டுக்கொண்டார். இந்த நிலையில் கேரளாவில் பா.ஜனதாவும், பிரதமர் மோடியும் பிரிவினையை ஏற்படுத்த முயற்சிப்பதாக கே.சி.வேணுகோபால் குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், 'பிரதமர் மோடியும் பாஜகவும் கேரளாவைப் புரிந்து கொள்ளவில்லை. நாராயண குரு, அய்யன்காளி மற்றும் சட்டம்பி சுவாமிகள் ஆகியோரின் பூமியில், பன்முகத்தன்மையால் பெருமைப்படும் ஒரு மாநிலத்தில் பிரிவினையை ஏற்படுத்தும் முயற்சியில், பிரதமர் தனது வழக்கமான வகுப்புவாத வெறியை தூண்டியிருக்கிறார். பிரிவினையை ஏற்படுத்துவதற்காகவே பிரதமர் கேரளா வருகிறார்' என பதிவிட்டு இருந்தார். மேலும் காங்கிரஸ் கட்சியை தோற்கடிக்க ஆளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியுடன் பா.ஜனதா மறைமுக கூட்டணியை ஏற்படுத்தி இருப்பதாக சாடியுள்ள அவர், ஆனால் தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி அபார வெற்றி பெறும் என நம்பிக்கையும் தெரிவித்து உள்ளார்.

## பஞ்சாப், அரியானாவில் கனமழை: மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

**சண்டிகர், ஜன.25:**

பஞ்சாப், அரியானா போன்ற வடமாநிலங்களில் கடந்த சில மாதங்களாக கடும் வறட்சி நிலவி வந்தது. மேலும், கடும் குளிரும் நிலவி வந்தது.

இந்நிலையில், பஞ்சாப், அரியானாவில் நேற்று கனமழை கொட்டித்தீர்த்தது. பல மாதங்களுக்குப்பின் கனமழை பெய்தது. இதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. மேலும், கனமழையால் விளைநிலங்களில் தண்ணீர் புகுந்ததால் பயிர்கள் நாசமாகின. சண்டிகரில் கனமழையால் வீட்டின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் 3 சிறுவர்கள் காயமடைந்தனர்.

## போதைப்பொருள் கடத்தலில் தொடர்பு; இமாசல பிரதேசத்தில் 12 போலீசார் பணிநீக்கம்


**சிம்லா, ஜன.25:**

இமாசல பிரதேசத்தில் ஹெராயின் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட போக்குவரத்து காவலர் ஒருவரை அந்த மாநில அரசு இன்று அதிரடியாக பணிநீக்கம் செய்துள்ளது. இந்த நடவடிக்கையின் மூலம், அங்கு இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டு இதுவரை பணிநீக்கம் செய்யப்பட்ட போலீசாரின் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ளது. இது குறித்து இமாசல பிரதேச டி.ஜி.பி. அசோக் திவாரி செய்தியாளர்களிடம் கூறுகையில், "போதைப்பொருள் கடத்தல் வழக்குகளில் தொடர்புடைய 12 போலீசார் இதுவரை பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவோருக்கும், போதைப் பழக்கத்தை ஊக்குவிப்போருக்கும் இமாசல பிரதேசத்தில் இடமில்லை" என்று தெரிவித்துள்ளார்.

## ஊதிய ஊரக வேலைச் சட்டத்துக்கு எதிராக ஏழைகள் ஒன்று திரள வேண்டும் - ராகுல் காந்தி

**புதுடெல்லி, ஜன.25:**

உ.பி.யின் அலிகர் நகரைச் சேர்ந்தவர் ஜரீனா (பெயர் மாற்றப்பட்டுள்ளது). இவருக்கு கடந்த 2015-ல் அவரது 15-வது வயதில் அம்ரோஹா நகரை சேர்ந்த ஒரு வருடன் நிக்காஹ் எனும் திருமணம் நடைபெற்றது. ஜரீனாவின் கணவர் அவரை 2016 மற்றும் 2021-ல் 2 முறை முத்தலாக் கூறி விவாகரத்து செய்துள்ளார். அப்போது ஜரீனா தனது கணவரையே மீண்டும் மணமுடிக்க நிக்காஹ் ஹலாலா எனும் பெயரில் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி உள்ளார்.



உ.பி.யின் சில முஸ்லிம்கள் இடையே 'நிக்காஹ் ஹலாலா' என்ற சர்ச்சைக்குரிய மதச்சடங்கு கடும் எதிர்ப்புகளுக்கு இடையே நிலவுகிறது. இந்த சடங்கு, விவாகரத்தான தம்பதிகள் மீண்டும் திருமணம் செய்துகொள்ள கடைப்பிடிக்கப்படுகிறது. இதில் அப்பெண் வேறு ஒரு ஆணை மணமுடித்து உடனடியாக அவரிடம் இருந்து விவாகரத்து பெற வேண்டும். இதன் பிறகு அப்பெண் தனது முதல் கணவருடன் மீண்டும் இணைந்து வாழலாம்.

எனினும் புதிய ஆடவரால் அப்பெண்ணுக்கு உடனடியாக விவாகரத்து வழங்கப்படாமல் பெரும்பாலும் அப்பெண் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறார். மிகவும் தவறான இந்த நிக்காஹ் ஹலாலா மீது உச்ச நீதிமன்றத்தில் கடந்த 2019-ல் மனு அளிக்கப்பட்டு இன்னும் விசாரணக்கு வராமல் உள்ளது.

இந்நிலையில், ஜரீனா கடந்த டிசம்பர் 9, 2025-ல் அம்ரோஹா காவல் நிலையத்தில் அளித்த புகாரில் "ஒவ்வொரு முறையும் நான் யாரிடமோ ஒப்படைக்கப்படுவது போல் உணர்ந்தேன். இதை வெளியில் சொல்ல மிகவும் வெட்கப்பட்டதால், இதை நான் யாரிடமும் சொல்லவில்லை. என் மகளுக்கும் அதைப் பற்றி தெரியவரும் என்பதால் புகார் தர தாமதமானது.

எனது கணவர், மைத்துனர் மற்றும் சில மவுலானாக்கள் என்னை பலமுறை ஹலாலா சடங்கிற்கு உட்படுத்தினர். இதற்காக எனக்கு கொலை மிரட்டலும் விடுத்தனர்" என குற்றம் சாட்டி இருந்தார்.

இது தொடர்பாக அம்ரோஹா போலீஸார், முத்தலாக் தடை மற்றும் போக்ஸோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளனர். இத்துடன் பிஎன்எஸ் சட்டத்தின் கீழ் பாலியல் வன்கொடுமை, கொலை மிரட்டல் ஆகிய பிரிவுகளின் கீழும் வழக்குகள் பதிவு செய்துள்ளனர். ஜரீனாவின் கணவரை போலீஸார் கைது செய்துள்ளனர். மைத்துனர் மற்றும் சில மவுலானாக்களை தேடி வருகின்றனர்.

## திருமலை கலப்பட நெய் விவகாரம்: 24 பேர் மீது குற்றப்பத்திரிகை



**திருமலை, ஜன.25:**

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் 2019-ம் ஆண்டு முதல் 2024-ம் ஆண்டு வரை, ஜெகன்மோகன் ரெட்டியின் ஆட்சியில் கலப்பட நெய்யால் பிரசாதங்கள் தயாரிக்கப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டதாக புகார் எழுந்தது. சந்திரபாபு நாயுடு அரசு ஆட்சிக்கு வந்ததும் சிபிஐ விசாரணை தொடங்கியது. சிபிஐ இணை இயக்குனர் விரேஷ் பிரபு, டிஐஜி முரளி ராம்பா உட்பட 30 பேர் கொண்ட குழு 15 மாதங்களாக இந்த வழக்கை விசாரித்தது. ஆந்திரா உட்பட 12 மாநிலங்களில் புலனாய்வு குழு அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

முதலில் தமிழகத்தில் இருந்துதான் கலப்பட நெய் கொள்முதல் செய்யப்பட்டிருக்கலாம் என நினைத்து விசாரணையை தொடங்கினர். ஆனால், இதற்கு முக்கிய காரணம் போலேபாபா ஆர்கானிக் பால்பொருள் தயாரிப்பு நிறுவனம் என்பதும், இதற்கு பலர் உடந்தையாக இருந்துள்ளனர் என்பதும் விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

ஆதலால், போலே பாபா பால் பொருள் தயாரிப்பு நிறுவனத்தை சேர்ந்த இயக்குனர்கள் போமில் ஜெயின், விபின் ஜெயின் ஆகியோரை சிபிஐ புலனாய்வு குழு கைது செய்துள்ளது. மேலும், ஆந்திரா உட்பட 12 மாநிலங்களை சேர்ந்த பலர் இதற்கு உடந்தையாக இருந்துள்ளனர் என்றும் சிபிஐ புலனாய்வு குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. முதல் குற்றப்பத்திரிகையில் 24 பேர் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

# புகையிலை மற்றும் நிகோடின் பொருட்களுக்கு முழுமையான தடை விதித்தது ஒடிசா அரசு!

**புவனேஷ்வர், ஜன.25:**

பொது சுகாதாரத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கையாக புகையிலை மற்றும் நிகோடினை மூலப்பொருட்களாகக் கொண்ட அனைத்துப் பொருட்களின் உற்பத்தி, பதப்படுத்துதல், பேக்கேஜிங், சேமிப்பு, போக்குவரத்து, விநியோகம் மற்றும் விற்பனைக்கு அதிகாரபூர்வமாகத் தடை விதிப்பதாக ஒடிசா மாநில அரசு அறிவித்துள்ளது.

புகையிலை பயன்பாட்டினால் பாதிப்புகள் அதிகரித்துவருவதை தொடர்ந்து உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களின்படி இந்த முடிவு எடுக்கப்பட்டதாக ஒடிசா அரசு தெரிவித்துள்ளது.

ஒடிசா அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறையின் அறிக்கையில், 'புகையிலை அல்லது நிகோடினை கொண்ட அனைத்துப் பொருட்களும், அவை பேக்கேஜ் செய்யப்பட்டவையாக இருந்தாலும் அல்லது பேக்கேஜ் செய்யப்படாதவையாக இருந்தாலும், தனித்தனியாக விற்கப்பட்டாலும் அல்லது கலந்து பயன்படுத்தும் வகையில் விற்கப்பட்டாலும், அவை எந்தப் பெயரில் சந்தைப்படுத்தப்பட்டாலும் இப்போது ஒடிசா மாநிலத்தில் தடை செய்யப்பட்டுள்ளன.




பான் மசாலா, வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு மற்றும் பிற பதப்படுத்தப்பட்ட, நறுமணமூட்டப்பட்ட, சுவையூட்டப்பட்ட மசாலாப் பொருட்களுடன் புகையிலையை மெல்லும் பழக்கம் பரவலாகப் பயன்படுத்தப்படுவது பொது சுகாதாரத்திற்கு ஆபத்தை விளைவிக்கிறது. இது குழந்தைகள் மற்றும் இளம் வயதினரின் ஆரோக்கியத்திற்கு மிகவும் ஆபத்தானது. புகையிலை, நிகோடின் பயன்பாடு வாய் ஆரோக்கியத்தில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்துகிறது. மேலும் வாய், உணவுக்குழாய், வயிறு, கணையம், தொண்டை மற்றும் சிறுநீரகம் போன்றவற்றில் ஏற்படும் புற்றுநோய்களுடன் இது அதிகளவில் தொடர்புடையது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய வயது வந்தோர் புகையிலை கணக்கெடுப்பின் 2வது சுற்றின் முடிவுகளில், ஒடிசாவில் வயது வந்தோரில் 42% பேர் புகையிலையை மெல்லும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர் என்றும், இது தேசிய சராசரியை விட கிட்டத்தட்ட இரு மடங்கு அதிகம் என்றும் தெரியவந்தது குறிப்பிடத்தக்கது.

# 16 ஆயிரம் ஊழியர்கள் பணி நீக்கம்: அமேசான் நிறுவனம் முடிவால் அதிர்ச்சி

**வாஷிங்டன், ஜன.25:**

அமேசான் நிறுவனம் தனது நிர்வாகச் செலவுகளைக் குறைக்க மேலும் 16,000 ஊழியர்களைப் பணிநீக்கம் செய்ய முடிவு எடுத்துள்ளது.

அமெரிக்காவை தலைமை யிடமாக கொண்ட நிறுவனம் அமேசான். உலகின் மிகப்பெரிய நிறுவனங்களில் ஒன்றாக அமேசான் உள்ளது.




பொருளாதார நெருக்கடி, செயற்கை நுண்ணறிவு தாக்கம் காரணமாக பல்வேறு நிறுவனங்களும் ஆட்குறைப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. இதற்கு அமேசானும் தப்பவில்லை. சமீப காலமாக அமேசான் நிறுவனமும் ஆட்குறைப்பு பணியை மேற்கொண்டு வருகிறது.

கடந்த 2022ம் ஆண்டு மற்றும் 2023ம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பல்வேறு காரணங்களை கூறி சுமார் 27,000 ஊழியர்களைப் பணியிலிருந்து நீக்கியிருந்தது.

அதனைத் தொடர்ந்து, கடந்த 2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14ம் தேதி சுமார் 14,000 பணியிடங்கள் குறைக்கப்பட்டன.

இந்நிலையில், அமேசான் நிறுவனத்தின் 30 ஆண்டு கால வரலாற்றிலேயே இல்லாத வகையில், மொத்தம் 30,000 கார்ப்பரேட் பணியிடங்களை ரத்து செய்ய அந்நிறுவனம் முடிவு செய்துள்ளது. இதன் அடிப்படையில், வரும் 27ம் தேதி முதல் சுமார் 14,000 முதல் 16,000 வரையிலான ஊழியர்களைப் பணிநீக்கம் செய்ய அமேசான் திட்டமிட்டுள்ளது.

அமேசான் வெப் சர்வீசஸ், ரீடைல், பிரைம் வீடியோ மற்றும் மனிதவள மேம்பாட்டுத் துறை ஆகிய பிரிவுகளில் பணியாற்றும் உயர் அதிகாரிகளையும் சாப்ட்வேர் இன்ஜினியர் உள்ளிட்டோர் பாதிக்கப்படுவார்கள் என்று தெரிகிறது.

## ஜெர்மனி: கடும் பனிப்பொழிவால் சாலை விபத்து - 3 பேர் பலி

**பெர்லின், ஜன.25:**

ஐரோப்பிய நாடுகளில் கடும் பனிப்பொழிவு நிலவி வருகிறது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரும் பாதிப்பை சந்தித்துள்ளது. மேலும், பனிப்பொழிவு காரணமாக சாலை விபத்துகள் ஏற்பட்டு உயிரிழப்பு சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன.

இந்நிலையில், ஜெர்மனி நாட்டில் கடும் பனிப்பொழிவு நிலவி வருகிறது. கடும் பனிப்பொழிவின்போது அந்நாட்டின் பெடர்போர்ன் நகரில் பெலிபீல்ட் அருகே மார்ஷ்பெல் - லிட்ச்னா சாலை சந்திப்பில் நேற்று வாகன விபத்து ஏற்பட்டது. அடுத்தடுத்து கார்கள், பைக்குகள், லாரிகள் என பல்வேறு வாகனங்கள் மோதின. இந்த விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர். மேலும், 11 பேர் காயமடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து சென்ற மீட்புக்குழுவினர், காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். கடும் பனிப்பொழிவு, வெளிச்சமின்மை, பனிப்பொழிவால் சாலையில் வாகனங்கள் பிரேக் செயல்படாமல் வழுக்கி செல்லுதல் காரணத்தால் இந்த விபத்து ஏற்பட்டதாக போலீசார் தெரிவித்துள்ளனர். மேலும், விபத்து குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கனடா பிரதமர், டிரம்ப் மோதல்

டொனால்டு டிரம்ப் கனடா பிரதமர் மார்க் கார்னி இடையே உலகப் பொருளாதார மன்ற மாநாட்டில் மோதல் ஏற்பட்டது. பெரிய நாடுகள் தங்களின் பொ ருளாதார பலத்தைப் பயன்படுத்தி மற்ற நாடுகளை அச்சுறுத்துவதை நிறுத்த வேண்டும் என்று அமெரிக்காவைச் சுட்டிக்காட்டி கார்னி பேசினார். இதனை விமர்சிக்கும் வகையில் அமெரிக்காவால் தான் கனடா பிழைத்துக் கொண்டிருக்கிறது என்று டிரம்ப் சாடினார். உடனடியாக கனடா அமெரிக்காவால் பிழைக்கவில்லை, கனடா மக்களால் செழிப்பாக இருக்கிறது என கார்னி தெரிவித்தார்.

## ரஷ்ய - அமெரிக்க அதிகாரிகள் அரபு அமீரகத்தில் சந்திப்பு

உக்ரைன், அமெரிக்கா மற்றும் ரஷ்ய அதிகாரிகள் வெள்ளிக்கிழமை ஐக்கிய அரபு அமீர கத்தில் பாதுகாப்புப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். உக்ரைன்-ரஷ்ய போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அமெரிக்காவின் வரைவுத் திட்டம் குறித்து புடினுடன் அமெரிக்க அதிகாரிகள் நடத்திய ஆலோசனையைத் தொடர்ந்து இந்த சந்திப்பு நடந்துள்ளது. போருக்குப் பின் ரஷ்யாவசம் உள்ள உக்ரைன் பகுதிகளை ரஷ்யாவிடமே ஒப்ப டைப்பது, உக்ரைன் படைகளை குறைப்பது குறித்து தொடர் பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன.

## மனிதாபிமானம் எங்கே? ஐ.நா கடும் விமர்சனம்

அமெரிக்காவில் புலம் பெயர்ந்து வந்துள்ள மக்களின் மீது இனவெறியர்கள் மற்றும் அரசு அதிகாரிகளின் தொடர் தாக்குதல்கள் நடந்து வருகின்றன. இத்தகைய அத்துமீறல் சம்பவங்கள் தமக்கு அதிர்ச்சியளிப்பதாக ஐ.நா மனித உரிமைகள் தலைவர் கவலை தெரிவித்துள்ளார். பல நேரங்களில் அதிகாரிகள் புலம் பெயர் மக்களின் "குடும்பங்களைப் பிரித்து விடுகின்றனர். இத்தகைய நடவடிக்கைகளை அமெரிக்கா நிறுத்த வேண்டும். கண்ணியம் மற்றும் நமது பொதுவான மனிதாபிமானம் குறித்த கவலை எங்கே போனது?" என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## பாகிஸ்தான்: திருமண நிகழ்ச்சியில் தற்கொலைப்படை தாக்குதல் - 5 பேர் பலி

**லாகூர், ஜன.25:**

பாகிஸ்தான் நாட்டின் கைபர் பக்துவா மாகாணம் டிரா இஸ்மாயில் கான் மாவட்டம் குரேஷி மூர் கிராமத்தில் நேற்று இரவு திருமணம் நிகழ்ச்சி நடைபெற்றது. திருமண நிகழ்ச்சியில் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர். கிராமத்தலைவர் நூர் அகமது மெஷல் வீட்டில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிலையில், இந்த திருமண நிகழ்ச்சிக்கு உடலில் வெடிகுண்டுகளை மறைத்துக்கட்டிக்கொண்டு மர்ம நபர் வந்துள்ளார். அந்த நபர் திருமண நிகழ்ச்சியின்போது பலரும் நடனமாடிக்கொண்டிருந்தபோது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச்செய்தார். இந்த தற்கொலைப்படை தாக்குதலில் 5 பேர் உயிரிழந்தனர். மேலும், 10 பேர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார், காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர்.

# உலக சுகாதார அமைப்பில் இருந்து விலகியது அமெரிக்கா: மருத்துவர்கள், விஞ்ஞானிகள் கவலை

**நியூயார்க், ஜன.25:**

உலக சுகாதார அமைப்பில் இருந்து அமெரிக்கா நேற்று அதிகாரப்பூர்வமாக விலகியது. இதனால் சர்வதேச அளவில் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அங்கமாக உலக சுகாதார அமைப்பு செயல்படுகிறது. இதன் தலைமை அலுவலகம் சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் உள்ளது. உலகளவில் சுகாதாரம் தொடர்பான பணிகளை இந்த அமைப்பு மேற்கொள்கிறது. உலக சுகாதார அமைப்பில் பெரும்பாலான நாடுகள் உறுப்பினராக உள்ளன.




இந்நிலையில், உலக சுகாதார அமைப்பில் இருந்து அமெரிக்கா நேற்று அதிகாரப்பூர்வமாக விலகியது. சுகாதாரம் தொடர்பான தகவல்கள், அவற்றை பகிர்ந்து கொள்ளுதல், அதன் மூலம் நோய் பரவல் தொடர்பான எச்சரிக்கை வெளியிடுதல் போன்ற நடவடிக்கைகளை உலக சுகாதார அமைப்புடன் நிறுத்திக் கொண்டதாக அமெரிக்க அதிகாரிகள் நேற்று தெரிவித்தனர். இதன் மூலம் இந்த அமைப்புடன் அமெரிக்காவுக்கு இருந்து வந்த 78 ஆண்டு தொடர்பு முடிவுக்கு வந்துள்ளது.

*130 மில்லியன் டாலர் பாக்கி:*

இதற்கிடையில், கடந்த 2024, 2025-ம் ஆண்டுகளுக்கான தொகை 130 மில்லியன் டாலரை அமெரிக்க வழங்கவேண்டியுள்ளது என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. அமெரிக்காவின் இந்த முடிவால் உலகளவில் ஏற்படும் நோய் பரவல், விஞ்ஞானிகளின் பங்களிப்பு, மருந்து நிறுவனங்கள் தடுப்பூசி தயாரிப்பது போன்ற பணிகள் கடுமையாக பாதிக்கும் என்று ஜார்ஜ் டவுண் பல்கலைக்கழக பொது சுகாதார சட்ட நிபுணர் லாரன்ஸ் கோஸ்டின் கவலை தெரிவித்துள்ளார். என்னுடைய வாழ்நாளிலேயே மிக பேரழிவான முடிவை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எடுத்துள்ளார் என்று லாரன்ஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இத்தனைக்கும் உலக சுகாதார அமைப்பை தொடங்கும் முயற்சியை முன்னெடுத்தது அமெரிக்காதான். அதேபோல், இந்த அமைப்புக்கு அதிக நிதியுதவி வழங்குவதும் அமெரிக்காதான். ஆண்டுக்கு சராசரியாக 111 மில்லியன் டாலரை இந்த அமைப்புக்கு அமெரிக்கா வழங்குகிறது. அத்துடன், மருத்துவர்கள், விஞ்ஞானிகள், சுகாதாரத் துறை பணியாளர்களையும் உலக சுகாதார அமைப்பின் பணிகளுக்கு அமெரிக்கா ஈடுபடுத்தியது. ஆனால், தற்போது அமெரிக்கா விலகியது, சர்வதேச அளவில் புதிதாக நோய் பரவல் ஏற்பட்டால் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று கூறுகின்றனர். இதற்கிடையில், கோவிட்-19 கரோனா தொற்றின் போது, அமெரிக்காவுக்கு முன்கூட்டியே சரியான தகவல்களை அளிக்கவில்லை, சீனாவுக்கு ஆதரவாக செயல்படுகிறது, தவறான தகவல்களை வெளியிடுகிறது போன்ற குற்றச்சாட்டுகளை அமெரிக்கா கூறியது குறிப்பிடத்தக்கது.

# "அதிகார வெறிபிடித்த சதிகாரர் முகம்மது யூனுஸ்" - ஷேக் ஹசீனா கடும் தாக்கு!

**டாக்கா, ஜன.25:**

"வங்கதேச பிரதமர் பதவியில் இருந்து தன்னை அகற்றுவதற்கான சதியில் தொடர்புடைய அதிகார வெறிபிடித்த தேசவிரோதி முகம்மது யூனுஸ்" என்று அந்நாட்டின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா குற்றம் சாட்டியுள்ளார்.

வங்கதேசத்தில் வரும் பிப்.12-ம் தேதி பொதுத் தேர்தல் நடைபெற உள்ளது. இதை முன்னிட்டு, அங்கு தேர்தல் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது. எனினும், தேர்தலில் போட்டியிட ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தேர்தலில், வங்கதேச தேசியவாத கட்சி ஆதிக்கம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேநேரத்தில், ஜமாத் இ இஸ்லாமியும் கணிசமான இடங்களைப் பெறும் என கூறப்படுகிறது.

இந்நிலையில், பொதுத் தேர்தலை கருத்தில் கொண்டு ஷேக் ஹசீனா ஆற்றிய உரையின் ஆடியோ பதிவு, செய்தியாளர் சந்திப்பு நிகழ்ச்சி ஒன்றில் வெளியிடப்பட்டது.

அதில் ஷேக் ஹசீனா கூறியிருப்பதாவது: ஊழல் நிறைந்த, அதிகார வெறிபிடித்த தேச துரோகி முகம்மது யூனுஸ். என்னை அதிகாரத்தில் இருந்து அகற்றுவதற்கான சதியில் தொடர்புடையவர் அவர்.

இந்த தேச துரோகி, வெளிநாடுகளுக்குச் சேவை செய்யும் கைப்பாவையாக உள்ளார். இந்த ஆட்சியை எந்த விலை கொடுத்தாவது தூக்கியெறிய வேண்டும். வங்கதேசத்தின் துணிச்சல் மிக்க புதல்வர்களும் புதல்விகளும் தியாகிகளின் ரத்தத்தால் எழுதப்பட்ட அரசியலமைப்பைப் பாதுகாத்து மீட்டெடுக்க வேண்டும். நாம் நமது சுதந்திரத்தை மீண்டும் பெற வேண்டும். நாம் நமது இறையாண்மையை பாதுகாக்க வேண்டும். மேலும், நமது ஜனநாயகத்தை மீட்டெடுக்க வேண்டும். கொலைகார பாசிசவாதி முகம்மது யூனுஸ். அவர் மற்றும் அவரது கும்பலின் நிழல் மக்களிடம் இருந்து அகற்றப்படும்வரை வங்கதேசத்தில் சுதந்திரமான, நியாயான தேர்தல் ஒருபோதும் நடைபெறாது. சட்டவிரோதமாக அவர் நடத்தி வரும் நிர்வாகத்தை அகற்றி, நமது நாட்டின் ஜனநாயகத்தை நாம் மீட்டெடுக்க வேண்டும். முகம்மது யூனுஸின் நிர்வாகத்தில் தினசரி வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன. நாட்டில் சட்டமின்மை உள்ளது. மக்கள் இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். மதச் சிறுபான்மையினர், பெண்கள், சிறுமிகள் உள்ளிட்டோரின் பாதுகாப்பை உறுதி செய்யும் உத்தரவாதம் இருக்க வேண்டும் என்றார்.

## மத்திய கிழக்கில் பதற்றம்: ஈரானை நோக்கி செல்லும் மிகப்பெரிய அமெரிக்க கடற்படை



**வாஷிங்டன், ஜன.25:**

அமெரிக்கா - ஈரான் இடையே சமீபகாலமாக மோதல் போக்கு அதிகரித்து உள்ளது. ஈரானில் பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வால் அரசு மற்றும் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமெனிக்கு எதிராக போராட்டங்கள் நடந்தது.போராட்டத்தை ஒடுக்க. அரசு தீவிர நடவடிக்கை எடுத்தது. இதில் வன்முறை வெடித்தது. போராட்டம்-வன்முறையில் 5 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பலியானார்கள். இதற்கிடையே ஈரானில் போராட்டக்கா ரர்களுக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்தது. போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தினால் ராணுவ நடவடிக்கை எடுக்கப்படும்' என்று அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் ஈரான் அரசை எச்சரித்தார்.

மேலும் போராட்டக்காரர்களுக்கு அமெரிக்கா உதவும் என்றும் தெரிவித்தார். இதற்கிடையே என்னை கொல்ல முயற்சித்தால் ஈரான் முற்றிலும் அழிக்கப்படும் என்று டிரம்ப் தெரிவித்தார். இதற்கு பதிலடியாக அமெரிக்காவை துடைத்தெறிவோம் என்று ஈரான் தெரிவித்தது.

இந்தநிலையில் ஈரானை நோக்கி மிகப்பெரிய அமெரிக்க கடற்படை செல்வதாக டிரம்ப் அறிவித்துள்ளார். சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடந்த உலகப்பொருளாதர மன்ற கூட்டத்தில் பங்கேற்ற டிரம்ப் நாடு திரும்பினார்.

அவர் விமானத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:- எங்களுடைய பிரமாண்டமான கடற்படை ஒன்று ஈரானை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. வளைகுடாவை நோக்கி அமெரிக்க கடற்படையின் போர்க்கப்பல் படையான ஆர்மடா சென்று கொண்டிருக்கிறது. நாங்கள் ஈரானை மிக உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம். என்ன நடக்கிறது என்று பார்ப்போம். எங்களிடம் அந்த திசையில் நிறைய கப்பல்கள் உள்ளன என்பது உங்களுக்குத் தெரியும், ஈரானை நோக்கி ஒரு பெரிய படை எங்களிடம் உள்ளது. அதே வேளையில் எங்களின் படையை பயன்படுத்த வேண்டியிருக்காது என்று நம்புகிறேன். ஈரானில் போராட்டத்தில் ஈடுபட்ட பெரும்பாலும் இளைஞர்கள் உள்பட 837 பேரை தூக்கிலிடத் திட்ட மிட்டிருந்தனர். அவர்களை தூக்கிலிட்டால் இதுவரை காணாத வகையில் கடுமையான தாக்குதல் நடத்துவோம் என நான் எச்சரித்தேன். ஈரானில் அணு திட்டங்களை அழித்ததைவிட பயங்கரமாக இருக்கும் எனத் தெரிவித்தேன். இதன் எதிரொலியாக தண்டனையை நிறைவேற்றுவதற்கு ஒரு மணிநேரத்துக்கு முன்னதாக ரத்து செய்தார்கள். இவ்வாறு அவர் கூறினார். ஈரான் அருகே அமெரிக்க படைகள் குவிக்கப்பட்டு வருவது மத்திய கிழக்கு பிராந்தியத்தில் பதற்றத்தை எற்படுத்தி உள்ளது.

## அமெரிக்காவில் சட்ட விரோத குடியேற்ற சோதனை: 5 வயது சிறுவன் தடுப்பு முகாமில் அடைப்பு - கமலா ஹாரிஸ் கண்டனம்

**வாஷிங்டன், ஜன.25:**

அமெரிக்காவில் குடியேற்ற சட்ட விதிகளை ஜனாதிபதி டிரம்ப் நிர்வாகம் கடுமையாக்கி அமல்படுத்தி வருகிறது. சட்டவிரோதமாக குடியேறியவர்கள் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டனர். இந்த நிலையில் குடியேற்ற சோதனை நடவடிக்கையில் 5 வயது சிறுவன் தடுப்பு மையத்தில் அடைக்கப்பட்டுள்ள சம்பவம் அமெரிக்காவில் சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது.

மினசோட்டாவில் அட்ரியன் அரியாஸ் என்பவர் தனது 5 வயது மகன் லியாம் ராமோசை மழலையர் பள்ளியில் இருந்து அழைத்து கொண்டு வீட்டுக்கு திரும்பி கொண்டிருந்தார். அப்போது அவர்களை அரியாஸ் குடியேற்ற அதிகாரிகள் தடுத்து நிறுத்தினர். ஈக்வடார் நாட்டை சேர்ந்த அட்ரியன் தனது குடும்பத்தினருடன் அமெரிக்காவுக்கு கடந்த 2024-ம் ஆண்டு வந்தார். அவர்கள் சட்டப்பூர்வமாக புகலிடம் கோரி விண்ணப்பித்து இருக்கிறார்கள்.

இந்த நிலையில் அட்ரியன் அரியாசை அதிகாரிகள் கைது செய்தனர். மேலும் அவரது 5 வயது மகனையும் அழைத்து சென்று டெக்சாசில் உள்ள தடுப்பு முகாமில் அடைத்தனர். முன்னதாக சிறுவனை அவனது வீட்டுக்கு அழைத்து சென்று வீட்டுக்குள் வேறு 5 யாராவது இருக்கிறார்களா என்று சோதிக்க அவனை கதவை தட்டும்படி அதிகாரிகள் கூறி உள்ளனர். வீட்டிற்குள் இருந்த சிறுவனின் தாய் கதவை திறந்து வெளியே வந்தார். அவரை அதிகாரிகள் கைது செய்தனர்.

அப்போது சிறுவன் பயத்துடன் காணப்பட்டான். இதன்மூலம் சிறுவனை ஒரு இரை போல அதிகாரிகள் பயன்படுத்தியதாக பலர் விமர்சித்து உள்ளனர்.பெற்றோர் இருவரும் கைது செய்யப்பட்ட நிலையில், லியாமை பார்த்துக் கொள்ளப் பள்ளி அதிகாரிகள், அண்டை வீட்டினர் என அனைவரும் முன்வந்தனர். ஆனால் அவர்களிடம் லியாமை ஒப்படைக்கக் குடியேற்ற அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

# டிரம்ப்பின் 'அமைதி வாரியம்' தற்போதைக்கு இணையாத இந்தியா'

**வாஷிங்டன், ஜன.25:**

வாஷிங்டன், ஜன.23- அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்பின் அமைதிவாரியத்தில் உடனடியாக இணைவதை இந்தியா தவிர்த்துள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் போர்நிறுத்தத்திற்குப் பிறகு, நவம்பர் 2025 இல் ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலால் ஒருமனதாக (ரஷ்யாவும் சீனாவும் வாக்களிக்கவில்லை) அங்கீகரிக்கப்பட்ட டிரம்ப்பின் 'காசா அமைதித் திட்டத்தின்' இரண் டாம் கட்டத்தின் ஒரு பகுதியாக இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. ஐ.நா அவைக்கு மாற்றாக இந்த அமைப்பை டிரம்ப் தன்னிச்சையாக உருவாக்கி வருகிறார். இந்த வாரியத்தில் உலக நாடுகள் இணைய



வேண்டும் என அவர் அழைப்பு விடுத்துள்ளார். அர்ஜெண்டினா, எகிப்து, இஸ்ரேல், சவூதி அரேபியா, துருக்கி, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட சுமார் 23 நாடு கள் இந்த அமைப்பில் இணைந்துள்ளன. இந்தியாவையும் (பிரதமர் மோடியை) இந்த வாரியத்தில் இணையுமாறு டிரம்ப் ஏற்கெனவே அழைப்பு விடுத்திருந்தார்.

எனினும் சுவிட்சர்லாந்து நாட்டின் டாவோஸ் நகரில் "அமைதி வாரியம்" சாசன அறிவிப்பு நிகழ்வை இந்தியா தவிர்த்தது. என்றாலும் அவ்வமைப்பை நிராகரிக்கவுமில்லை, ஏற்கவுமில்லை. இஸ்ரேலுக்கு இடம்; பாலஸ்தீனம் இல்லை ஐ.நா அவை அமெரிக்காவின் காசா அமைதித் திட்டங்களுக்கு ஆதரவு அளித்திருந்தாலும், இந்த அமைதி வாரிய அமைப்பின் தற்போதைய கட்டமைப்பு மற்றும் அதிகாரம் அமெரிக்காவின் ஆதிக்கத்தால் ஒருதலைப்பட்சமாக மாற்றப்பட்டுள்ளது.

அதாவது டிரம்ப் இந்த அமைப்பில் தன்னைத் தலைவராகவும், தனது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரை நிர்வாகக் குழுவிலும் நிய மித்துள்ளார். இனப்படுகொலை குற்றவாளி யான நேதன்யாகு இவ்வமைப்பில் சேர்க்கப்படுவதும், பாலஸ்தீன ஜனாதிபதி அப்பாஸ் சேர்க்கப்படாமல் தவிர்க்கப்படுவதும் இந்த அமைப்பின் தற்போதைய கட்டமைப்பு மற்றும் அதிகாரம் ஒருதலைப்பட்சமாக மாற்றப்பட்டு இருப்பது தெரிகிறது. ஹங்கேரியைத் தவிர பிற ஐரோப்பிய நாடு களும் உடனடியாக இணையவில்லை.

ஐ.நா பாதுகாப்புக் கவுன்சிலின் நிரந்தர உறுப்பினர்களான ரஷ்யா, சீனா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளும் இதில் சேரவில்லை. காத்திருந்து கவனிக்கும் இந்த வாரியத்தில் உடனடியாக இணையாததற்கு இந்தியாவிடம் காரணங்கள் இருப்பதா கவும், 'பொறுத்திருந்து கவனிக்கும்' அணுகு முறையையே அது கடைப்பிடிக்கும். இருந்தாலும் பாகிஸ்தான் இவ்வமைப்பில் இணைந்திருப்பதால், இந்தியா ஒதுங்கி இருப்பது கடினம் என்றும் அப்படி விலகி இருந்தால், எதிர் காலத்தில் பாகிஸ்தானுடன் மோதல் ஏற்படும் சூழலில், இந்த வாரியம் எடுக்கும் முடிவுகளில் இந்தியாவின் குரல் ஒலிக்காமல் போய்விடும் என்ற அச்சம் உள்ளது.